விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசே. விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 5392
(C-5561)


சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 புரட்டாதி 02 ஞாயிற்றுக்கிழமை (18.09.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 274

# நிரந்தர அரசியல் தீர்வை நல்லாட்சி அரசு வழங்கும்

## மகிந்தவால் முடியாததை நாம் சாதிப்போம் என பிரதமர் ரணில் உறுதி

(யாழ்ப்பாணம்)

நீண்ட காலமாக நீடித்து வரும் தேசிய ரீதியிலான பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் நிரந்தர அரசியல் தீர்வை வழங்கும் எனத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்தவால் நிரந்தர அரசியல் தீர்வு விடயத்தை சொல்ல முடிந்ததே தவிர அதனைச் செய்ய முடியவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (15-ம் பக்.)



## கிளி.பொதுச்சந்தை தீ அனர்த்தம்
## பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு; வடக்கு முதலமைச்சர் உறுதியளிப்பு



## 135 வர்த்தகர்களுக்கு ரூபாய் 20 ஆயிரம் வழங்கப்பட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தீ அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால் உதவித்தொகை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி உடனடி கொடுப்பனவாக 135 வர்த்தகர்களுக்கு 20

## கஞ்சாவுடன் நபர் கைது

(மல்லாவி)

மு/முள்ளியவளை பொலிஸ் பிரிவில கிச்சிராபுரம் கிராமத்தில் சட்ட விரோதமான முறையில் 350 கிராம் கஞ்சாவை தனது உடைமையில் வைத திருந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் தகவல் வெளியிட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை பி.ப 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாரிற்கு முள்ளியவளை கிச்சிராபுரம் கிராமத்தில் நபர் ஒருவர் கஞ்சா விற்

15 ஆம் பக்கம் பார்க்க....

அதனைச் செய்ய முடியவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (15-ம் பக்.)



## கிளி.பொதுச்சந்தை தீ அனர்த்தம்

# பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு; வடக்கு முதலமைச்சர் உறுதியளிப்பு



15 ஆம் பக்கம் பார்க்க....

## 135 வர்த்தகர்களுக்கு ரூபாய் 20 ஆயிரம் வழங்கப்பட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தீ அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால் உதவித்தொகை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி உடனடி கொடுப்பனவாக 135 வர்த்தகர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் நேற்று மாலை வழ

15 ஆம் பக்கம் பார்க்க....

# கஞ்சாவுடன் நபர் கைது

(மல்லாவி)

மு/முள்ளியவளை பொலிஸ் பிரிவில கிச்சிராபுரம் கிராமத்தில் சட்ட விரோதமான முறையில் 350 கிராம் கஞ்சாவை தனது உடைமையில் வைத திருந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் தகவல் வெளியிட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை பி.ப 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.


இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாரிற்கு முள்ளியவளை கிச்சிராபுரம் கிராமத்தில் நபர் ஒருவர் கஞ்சா விற்

15 ஆம் பக்கம் பார்க்க....

## ஆயிரத்து 400 ஆண்டுகளுக்கு முற்பட்ட

# சைவத் தமிழ் குடியிருப்புகளுக்குரிய சான்றுப் பொருட்கள் மன்னாரில் மீட்பு



(யாழ்ப்பாணம்)

மன்னார் கட்டுக்கரை குளத்தை அண்மித்த பகுதியில் ஆயிரத்து 400 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ குடியிருப்புக்களுடன் கூடிய சைவசமய வழிபாட்டுக்குரிய தொல்பொருள் சான்றுப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக யாழ்பல்கலை (16-ம் பக்.)

# சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்படும்

## இலாபகரமான நட்டஈடு இல்லை – சுவாமிநாதன்

(மல்லாவி)

சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு இலாபகரமான நஷ்ட ஈடு தருவதாக தெரிவித்து காணி உரிமையாளர்களுக்கு இராணுவத்தின் நெறிப்படுத்தலில் யாழ்.மாவட்ட செயலகத்தால் வழங்கப்பட்ட கடிதங்கள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை என தெரிவித்துள்ள மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், இராணுவத்தினரால் சுவீகரிக்கப்படும் தமிழ் மக்களின் காணிகளுக்கு

பதிலாக மாற்று இடங்களில் காணிகள் வழங்கப்படுமே ஒழிய சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படுவது குறித்து

15 ஆம் பக்கம் பார்க்க....

# ஐ.நா விசேட அறிக்கையாளர் அடுத்த மாதம் இலங்கை விஜயம்



(கொழும்பு)

சிறுபான்மை மக்களின் விவகாரங்களை ஆராயும் ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் ரீட்டா ஐசாக அடுத்த மாதம் 10ஆம் திகதி அதிகாரபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கையில் 10 நாட்கள் தங்கியிருக்கவுள்ள இவர், சிறுபான்மை

15 ஆம் பக்கம் பார்க்க....

# மக்கள் நலனில் அக்கறை இல்லாத இந்த அரசையும் மாற்ற வேண்டும்!

## ஜே.வி.பியின் தலைவர் யாழ்.சங்கானையில் பேச்சு

(யாழ்ப்பாணம்)

நாட்டிலுள்ள பல கிராமங்களில் மக்கள் குடிப்பதற்குப்போதுமான நீரில்லை. அதிலும் சுத்தமான நீரைப் பெற்றுக் கொள்ள முடியாதவாறு பலரும்அவதிப்படுகிறார்கள். மூன்று வேளைக்கும் போதுமான உணவின்றிப் பல மக்கள் வாடுகிறார்கள். இந்த நிலையில் இந்த அரசாங்கம்

16 ஆம் பக்கம் பார்க்க....



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**சேவை முகவர் காணிகள், வீடுகள் விற்பனைக்கு**

நாவலர் வீதி 2 3/4 பரப்பு, பிறவுண் வீதி 3 1/2, மணிக்கூட்டு வீதி B.M.C. லேன் 2 1/2, பழம் வீதி 2 பரப்பு, வேம்படி வீதியில் 4 பரப்பு. யாழ்.நல்லூர் தொகுதிகளில் விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம். (5945)

**சுந்தரம் :- 077481 9801**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**

# புதிய அரசியலமைப்பை உருவாக்க தேவையில்லை

## குழப்பங்கள் ஏற்படும் என சிறிவிமலதேரர் கருத்து



(கொழும்பு)

நாட்டுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எவற்றையும் சரிவர நிறைவேற்றாத நல்லாட்சி அரசாங்கம் புதிய பிரச்சினைகளை உருவாக்கி நாட்டுமக்கள் மத்தியில் குழப்பங்கள் ஏற்படுத்தி வருவதாக தெரிவித்த கொப்பட்டியாகொட சிறிவிமல தேரர் தற்போது புதியதொரு அரசியலமைப்பை உருவாக்க வேண்டிய தேவை எதுவும் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசியலமைப்பு மரணப் பொறி என்ற பிரசாரத்தை தேசிய சுதந்திர முன்னணி நாடளாவிய ரீதியில் முன்னெடுத்து வரும் நிலையில் அதன் ஒரு அங்கமாக கொப்படியாகொட சிறிவிமல தேரரை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்ட போதே தே.சு.மு.யின் தலைவரான விமல் வீரவன்சவிடம் தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சிறிவிமலதேரர் மேலும் கூறுகையில்,

தற்போது எமது நாட்டு மக்களுக்கு புதியதொரு அரசியலமைப்பு அவசியமில்லை. தற்போதுள்ள அரசியலமைப்பின் குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொண்டு நாம் முன்னகர்ந்து செல்ல முடியும். தற்போதுள்ள அரசியலமைப்பில் மாற்றம் செய்யுமாறு அரசாங்கத்திடம் எவரும் கேட்கவில்லை. மாறாக நாட்டில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணவே தற்போதைய ஆட்சியாளர்களிடத்தில் நாடு கையளிக்கப்பட்டது.

எனவே இவர்கள் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதிலேயே கவனம் செலுத்த வேண்டும். ஆனால் அதற்கு மாறாக இல்லாத பிரச்சினைகளை உருவரக்கி அதனூடாக மக்கள் குழுக்கள் மத்தியில் முறுகல் நிலைகளை ஏற்படுத்திவிட்டு வேடிக்கை பார்க்கின்றனர்.

அதனால் தேசிய சுதந்திர முன்னணி முன்னெடுத்துச் செல்லும் தெளிவுபடுத்தல் செயற்பாடுகள் பாராட்டுக்குரியது.

தற்போது உருவாக்கப்பட்டு வரும் அரசியலமைப்பு நாட்டை சீரழிவுக்கு இட்டுச் செல்லும் என்பதே எமது நிலைப்பாடாகின்றது.

அத்துடன் இந்த நிலைப்பாட்டினை உணர்ந்து அரசியலமைப்பு புத்துருவாக்க செயற்பாடுகளிலிருந்து தேசிய சுதந்திர முன்னணி விலகியிருந்தாலும் கூட்டு எதிரணியில் அங்கம் வகிக்கின்ற சிலர் தற்போதும் அரசியலமைப்பு புத்துருவாக்க செயற்பாடுகளை முன்னெடுக்கும் குழுக்களில் உள்ளனர்.

அவர்களும் இந்தச் செயற்பாடுகளிலிருந்து விலகி நிற்க வேண்டும் என சிறிவிமல தேரர் குறிப்பிட்டுள்ளார். (செ)

# மரண அறிவித்தல்



**திருமதி தாமோதரம்பிள்ளை அரியமலர்** (கமலம்)

மாரிசன்கூடலைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கு தம்பையாப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை அரியமலர் 16.09.2016 (வெள்ளிக்கிழமை) காலை 7.30 மணியளவில் காலமானார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (19.09.2016) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தம்மளை வைரவரடைப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**தகவல் :- கணவர் : தாமோதரம்பிள்ளை (குடும்பத்தினர்)**

(C-5803)

# மரண அறிவித்தல்



தோற்றம் 12.10.1927
மறைவு 15.09.2016
**வேலுப்பிள்ளை பசுபதி**



தோற்றம் 12.11.1941
மறைவு 15.09.2016
**பசுபதி வள்ளிப்பிள்ளை**



தோற்றம் 26.08.1970
மறைவு 15.09.2016
**பசுபதி நந்தமூர்த்தி** (மூர்த்தி போட்டோ)

மாயக்கை புலோலி வடமேற்கு பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பசுபதி, திருமதி பசுபதி வள்ளிப்பிள்ளை, பசுபதி நந்தமூர்த்தி ஆகியோர் 15.09.2016 வியாழக்கிழமை அகால மரணமாகிவிட்டார்கள்.

காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பொன்னம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை தெய்வானைப்பிள்ளையின் அன்பு மருமகனும் அமரர் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை (வியாபாரியார்), வள்ளிப்பிள்ளை, சரஸ்வதி, கணபதிப்பிள்ளை மற்றும் ஆழ்வாப்பிள்ளை (ஓய்வுநிலை ஆங்கில ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை தெய்வர்னைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - பொன்னம்மாவின் அன்பு மருமகளும் அமரர் பசுபதியின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் (பெரியாம்பி), சின்னத்துரை, கிருஷ்ணமூர்த்தி மற்றும் சின்னம்மா, வேலாயுதம், இராசம்மா, மனோண்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

இந்திராதேவி (சுவிஸ்), நந்தகோபால் (கொலண்ட்), நந்தகுமார் (சுவிஸ்), நந்தசீலன் (சுவிஸ்) காலஞ்சென்றவர்களான நந்தசிறீதர், நந்தமூர்த்தி, நந்தமோகன் மற்றும் ஜெயதேவி ஆகியோரின் தந்தையும் தாயுமாவார். செல்வராசா, விஜிதா (கொலண்ட்), சிவாஜினி (சுவிஸ்), சசிகலா (சுவிஸ்), சுதாயினி (கல்வி அமைச்சு வடமாகாணம் முகாமைத்துவ உதவியாளர்), காலஞ்சென்ற குலேந்திரன் ஆகியோரின் மாமாவும் மாமியுமாவார்.

காலஞ்சென்றவர்களான பசுபதி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் தர்மலிங்கம் காலஞ்சென்ற சாந்தாதேவியின் அன்பு மருமகனும் சுதாயினி (கல்வி அமைச்சு வடமாகாணம் முகாமைத்துவ உதவியாளர்) இன் அன்புக் கணவரும், சுபாஷினி (வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அபிவிருத்தி உதவியாளர்), சோபனா, (முகாமையாளர் நெல்லியடி செலிங்கோ காப்புறுதி நிறுவனம்), சுகந்தன் (Seaman), சுகிர்தன் (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னார்களின் இறுதிக்கிரியைகள் இன்று 18.09.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மந்திகை கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-5801)

**மாயக்கை, புலோலி வடமேற்கு, பருத்தித்துறை.** **தகவல் :- குடும்பத்தினர்** **076 54 52 323**

# பயங்கரவாத ஒழிப்பு தொடர்பில் சர்வதேச பிரகடனம் வேண்டும்

## அணிசேரா மாநாட்டில் இலங்கை வலியுறுத்தல்

(கொழும்பு)

**பயங்கரவாத ஒழிப்பு தொடர்பில்சர்வதேச பிரகடனமொ ன்று கைச்சாததிடப்பட வேண்டுமெனவும் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க உலக நாடுகளுக்கு இடையில் ஒத்துழைப்பு அவசியம் எனவும் இலங்கை அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.**



அணிசேரா மாநாட்டில் பங்கேற்றுள்ள அமைச்சர் மகிந்த சமரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

உலக சமாதானத்திற்கும் பாதுகாப்புக்கும் மிகப் பாரிய அச்சுறுத்தலாக பயங்கரவாதம் காணப்படுகின்றது எனவும் இதனை முறியடிப்பதற்கு காத்திரமான திட்டங்கள் வகுக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும், அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அணுவாயுதங்கள் முற்றுமுழுதாக ஒழிக்கப்பட வேண்டுமென இலங்கை கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ள அவர் கூட்டு மனித அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய சகல ஆயுத பயன்பாடுகளும் தடுத்து நிறுத்தப்பட வேண்டியது அவசியமானது எனவும் தெரிவித்தார்.

அண்மையில் வடகொரியாவில் மேற்கொள்ளப்பட்ட அணுவாயுத பரிசோதனை குறித்து இலங்கை கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## இலங்கையின் இயற்கை எரிவாயு மின் திட்டத்திற்கு உதவத் தயார்

### இந்தியா அறிவிப்பு

இயற்கை எரிவாயு மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கு இலங்கைக்கு உதவி வழங்க தயாராக உள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் நிலக்கரியில் இருந்து இயற்கை எரிவாயுவிற்கு மாறும் போதுள்ள மறைமுகமான பாதிப்புக்கள் குறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டும் என இந்தியா அறிவுறுத்தியுள்ளது.

அடுத்த மாதம் அளவில் இலங்கையில் அல்லது இந்தியாவில் நடைபெறும் கூட்டு நடவடிக்கை குழுவின் சந்திப்பில் இந்த விடயம் குறித்து தெளிவுபடுத்தப்படவுள்ளது.

கடந்த மே மாதம் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்த போது சம்பூரில் அனல் மின் நிலையத்தை அமைக்கும் திட்டத்தை கைவிடுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் பொருட்டு கூட்டு நடவடிக்கை குழு அமைக்கப்பட்டிருந்த போதிலும் அதன் சந்திப்புக்கு இதுவரை காலம் ஒதுக்கப்படவில்லை.

எவ்வாறாயினும் சூழலியல் காரணங்களை அடிப்படையாக கொண்டு சம்பூரில் அனல் மின்நிலையத்தை அமைக்கும் திட்டமில்லை என அரசாங்கம் அண்மையில் உச்ச நீதி மன்றத்தில் தெரிவித்திருந்தது.

இலங்கையின் ஒருதலைப்பட்சமான இந்த தீர்மானம் குறித்து இந்தியா அதிருப்தி அடைந்த போதிலும் இயற்கை எரிவாயு மின்உற்பத்தி திட்டத்திற்கு உதவத்தயார் என அறிவித்துள்ளது.

இந்த நிலையில் இயற்கை எரிவாயுவை பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நடவடிக்கை இலங்கைக்கு எந்த அளவிற்கு பொருத்தமானது என்ற கேள்வியும் உள்ளதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-7-10)

## யாழில் புதிய கட்டடத்தை திறந்துவைத்தார் பிரதமர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலக வளாகத்திற்குள் புதிதாக அமைக்கப்பட்ட நான்கு மாடி கட்டடத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று திறந்து வைத்துள்ளார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன, பிரதி அமைச்சர் நிமால் லங்ஸா, சிறைச்சாலைகள் மற்றும் புனர் வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், தமிழ த்தேசிய கூட்டமைப்பின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், எம்.ஏ. சுமந்திரன், கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ. கே.சிவஞானம் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



(படங்கள் :-உ.சாளின்)

## வீட்டு நிர்மாணப்பணியில் ஈடுபட்ட நான்கு இராணுவத்தினர் கைது

(கொழும்பு)

அநுராதபுரம் சந்தஹிருசேய தாதுகோபுரத்தில் நிர்மாணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த நான்கு இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் அனுமதியின்றி தனியார் வீட்டு நிர்மாணப் பணிகளில் ஈடுபட்ட குற்றத்திற்காக இராணுவ பொலிஸாரினால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் நகர எல்லைக்குள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் இரண்டு மாடி வீடு ஒன்றின் கூரையின் நிர்மாணிப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இராணுவத்தில் கொடுப்பனவுகளை பெற்றுக்கொண்டு சந்தஹிருசேய தாதுகோபுரத்தின் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருந்த நிலையில், மேற்படி நிர்மாணிப்பு பணிகளிலும் ஈடுபட்டு வந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடு இராணுவ உயர் அதிகாரி ஒருவருக்குரியது என தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்து இராணுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7-10)

## சிறைச்சாலைகளில் நிலவும் நெருக்கடிகளைக் குறைப்பதற்கும் மறுசீரமைப்பதற்குமான செயலணிக்கு அமைச்சரவை அங்கீகாரம்

சிறைச்சாலைகளை சீர்திருத்த மையங்களாக மாற்றுவதற்கும் கைதிகளின் நெருக்கடிகளை குறைப்பதற்கும் சிறைச்சாலைகளை மறுசீரமைப்பதற்குமான செயலணி அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டடுள்ளது. நீதித்துறை மற்றும் சட்டத்துறை சார்ந்த பல காரணிகளால் சிறைச்சாலைகளில் கைதிகளின் நெருக்கடி அதிகரிப்பதாகவும் அது தொடர்பான காரணங்களை இனங்கண்டு சிறைச்சாலையில் நெருக்கடிகளைக் குறைப்பதற்கான உபாயங்களையும் கருத்திட்டங்களையும் சிபார்சு செய்து அமுல்படுத்துவதற்கான செயலணியானது ஒகஸ்ட் மாதம் 30ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் அரசினால் நியமிக்கப்பட்டுள்ளது. இந்த செயலணி சட்ட சீர்திருத்தங்களையும் செயல்முறை மாற்றங்களின் மூலமும் வேறுபட்ட கருத்திட்ட உபாயங்களையும் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளை புனர்வாழ்வளித்து சமூகத்துடன் ஒருங்கிணைக்கும் மையமாக மாற்றுவதே இச் செயலணியின் நோக்கமாகும் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வேசிவஞானசோதி தெரிவித்தார்.

இச்செயலணியின்இணைத் தலைவர்களாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சின் செயலாளரும் நீதி அமைச்சின் செயலாளரும் இடம் பெறுவார்கள். இது தொடர்பான கூட்டு அமைச்சரவைப் பத்திரம் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினர்லும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டி. எம.சுவாமிநாதனாலும் முன் வைக்கப்பட்டது. இச் செயலணியில் நீதிச். சேவை ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், சிறைச்சாலைகள் திணைக்களம், அரச இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களம், சமுதாயம் சார் சீர்திருத்த திணைக்களம், சட்டவரைஞர் திணைக்களம், நீதிபதிகள் பயிற்சி நிறுவனம் மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பர். (இ-7-10)



# அந்த ஒரு நாள் என் வாழ்வை மாற்றியது மனம் திறந்தார் "கூல்" கப்டன் தோனி




இந்திய ஒரு நாள் கிரிக்கெட் அணியின் தலைவர் தோனியின் வாழ்க்கையை மையப்படுத்தி, 'எம்.எஸ்.தோனி-தி அன்டோல்ட் ஸ்டோரி' என்ற இந்தி திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. நீரஜ் பாண்டே இயக்கியுள்ள இந்த படத்தில் கதாநாயகனாக சுஷாந்த் சிங் ராஜ்புத் நடித்துள்ளார். இந்த படம் வருகிற 30-ம் திகதி உலகம் முழுவதும் ரிலீஸ் செய்யப்படுகிறது. இந்த படத்தை பிரபலப்படுத்தும் நிகழ்ச்சி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடந்தது. இதில் தோனி, அவரது மனைவி சாக்ஷி, படத்தின் தயாரிப்பாளர் அருண் பாண்டே உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் நிருபர்கள் மத்தியில் தோனி பேசுகையில், 'இது ஒரு சாதாரண கதை. அதுதான இங்கு அழகு. ஆனால் நான் நீரஜ் பாண்டேயிடம் (இயக்குனர்) ஒரு விஷயத்தை மட்டும் தெளிவாக கூறினேன். 'இது எனது புகழ்பாடும படமாக இருக்கக்கூடாது, ஒரு தொழில்முறை விளையாட்டு வீரரின் பயணத்தை சித்திரிப்பதாக இருக்க வேண்டும்' என்றேன்.

எடிட்டிங் செய்யப்படாத படத்தை முதன் முதலில் பார்த்த போது, எனது சிறு வயது நாட்கள் மீண்டும் ஒரு முறை கண்முன் வந்து நின்றது. நான் வசித்த இடம், படித்த பள்ளிக்கூடம், விளையாடிய இடங்கள் என்று பழைய நினைவுகள் மனதில் புதிதாக பதிவாகின. எனது பெற்றோரிடம் கிரிக்கெட் குறித்து நான் ஒருபோதும் பேசியதில்லை.

ஆனால் தற்போது இந்த படத்தை பார்த்த போது, உண்மையில் அவர்கள் என்னை பற்றி என்ன நினைத்தார்கள் என்பதை அறிய முடிந்தது. இது ஒரு புதுமையான அனுபவமாகும்' என்றார்.

2007-ம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள் நடந்த உலக கிண்ண கிரிக்கெட்டில் (50 ஓவர்) முன்னாள் சம்பியன் இந்திய அணி இலங்கை மற்றும் பங்காளதேஷிடம் தோற்று முதல் சுற்றுடன் அதிர்ச்சிகரமாக வெளியேறியது. இதனால் இந்திய அணி வீரர்களுக்கு எதிராக ரசிகர்கள் போராட்டம் நடத்தினர். ராஞ்சியில் புதிதாக கட்டப்பட்டு வந்த தோனியின் வீடு மீது கற்கள் வீசப்பட்டன. இந்த சம்பவத்தை நினைவு கூர்ந்த தோனி, அதுதான் தனது வாழ்க்கையில் திருப்பத்தை ஏற்படுத்தியதாக கூறினார்.

அது தொடர்பாக தோனி உணர்வுபூர்வமாக கூறியதாவது,

உலக கிண்ண தோல்வியுடன் நாங்கள் டெல்லி வந்து இறங்கியதும், நிறைய ஊடகத்தினர் எங்களை முற்றுகையிட்டனர். இது மாதிரியான நேரங்களில், நாங்கள் தோல்வி குறித்து கவலைப்படுவதில்லை என்று மக்கள நினைக்கிறார்கள். ஆனால் ஒரு விளையாட்டு வீரராக அனைத்தையும் (கசப்பான அனுபவங்கள்) தாங்கும் வலுவான மனநிலையை கொண்டிருக்க வேண்டும், உணர்ச்சிகள் நமக்குள்ளேயே இருக்க வேண்டும் என்று நினைப்பவன் நான். என்னை பொறுத்தவரை உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது என்பது பத்திரிகையாளர் சந்திப்பில் அழுது புலம்புவதோ அல்லது தோல்வியை தழுவியதும் மைதானத்தில் இருந்து கண்ணீருடன் வெளியேறுவதை சார்ந்ததோ அல்ல.

அன்று நாங்கள் விமான நிலையத்தில் இருந்து வெளியேறி பொலிஸ் வேனில் ஏறினோம். ஷேவாக் அருகில் நான் அமர்ந்து இருந்தேன். அது லேசாக இருள் சூழ்ந்த நேரம். சராசரியாக 60-70 கிலோ மீட்டர் வேகத்தில், மிகவும் குறுகலான சாலைகளில் எங்களது வேன் சென்று கொண்டிருந்தது. எங்களை சுற்றி ஊடக வாகனங்கள் பின்தொடர்ந்தன. அவர்கள் விளக்கை எரியவிட்டபடி கேமராக்களுடன் மொய்த்த விதத்தை பார்த்த போது, நாங்கள் ஏதோ பெரிய குற்றம் செய்து விட்டு பொலிஸ் வேனில் சென்றது போன்ற ஒரு உணர்வை தந்தது. கிட்டத்தட்ட கொலையாளி அல்லது பயங்கரவாதி போன்றே சொல்லாம்

பிறகு பொலிஸ் நிலையத்தில் சிறிது நேரம உட்கார்ந்து இருந்தோம். 15-20 நிமிடங்களுக்கு பிறகு அங்கிருந்து எங்களது கார்களில் கிளம்பினோம். இந்த சம்பவம்தான் எனக்குள் மிகப்பெரிய தாக்கத்தையும், மாற்றத்தையும் ஏற்படுத்தியது. களத்தில் ஆக்ரோஷமாக விளையாடி சிறந்த கிரிக்கெட் வீரராகவும், ஒரு சிறந்த மனிதராகவும் என்னை உருவாக்கிக் கொள்ள உதவியது.(செ)

## ரகானே, ரோகித் ஷர்மாவுக்கு அர்ஜூனா விருது வழங்கப்பட்டது




இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் ரகானே, ரோகித் ஷர்மா ஆகியோருக்கு அர்ஜூனா விருதை மத்திய விளையாட்டு துறை அமைச்சர் விஜய் கோயல் வழங்கினார். விளையாட்டு துறையில் சிறந்து விளங்கும் வீர வீராங்கனைகளுக்கு மிக உயரிய வருதாக கேல் ரத்னா மற்றும் அர்ஜூனா விருது ஆண்டுதோறும் இந்திய மத்திய அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்திய கிரிகெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீராங்களாக ரகானே மற்றும் ரோகித் சர்மாவுக்கு அர்ஜூனா விருது அறிவிக்கப்பட்டது.(செ)

## பரிஸ் உடன்பாட்டில் புதனன்று கையெழுத்திடுகிறது இலங்கை

(பரிஸ்)

காலநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் உடன்படிக்கையில் இலங்கை எதிர்வரும் 21-ஆம் திகதி இணைந்து கொள்ளவுள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பேச்சாளர் மஹிசினி கொலன்னே இதனைத் தெரிவித்துள்ளார். 20 நாடுகளுடன், இலங்கையும் பாரிஸ் உடன்படிக்கையில் இணைந்து கொள்ளும் என ஐ.நா செயலாளர் நாயகத்தின் காலநிலை மாற்றத்திற்கு ஆதரவளிக்கும் குழுவைச் சேர்ந்த செல்வின் ஹற்ட் தெரிவித்தார். (இ-7,10)

## இராணுவபயிற்சி முகாம் அகற்றப்பட்டுள்ளது

(வவுனியா)

வவவுனியா - செட்டிகுளம் மாணிக்கம் பண்ணை குடியிருப் புக்களுக்கு அருகில் கடந்த சில நாட்களாக இடம்பெற்றுவந்த இராணுவத்தின் 25 ஆவது படைப்பிரிவின ஆயுதப் பயிற்சி முகாம் அகற் றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை மாலை குறித்த இராணு வத்தினரின் ஆயுதப பயிற்சி முகாமிற்கு வருகைதந்த இரா ணுவ கனரக வாகனங்கள் பயிற சிக்காக வைக்கப்பட்டிருந்த துப்பாக கிகள் உள்ளிட்ட இராணுவத்தின ரன் பொருட்கள் முழுவதையும் ஏற்றிச் சென்றதாக பிரதேசவாதிகள் தெரிவித்தனர்.

செட்டிகுளம் மாணிக்கம் பண்ணை குடியிருப்புக்களுக்கு அருகில் இடம்பெற்று வந்த இரா ணுவ ஆயுதப் பயிற்சியினால் ஏற்பட்ட அதிர்வுகள் மற்றும் காது களைத் துளைக்கும் சத்தத்தினால் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை அச்சமடைந்துள்ளதாக பிர தேச மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந் தனிடம் அண்மையில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் குறித்த இராணுவ ஆயுதப பயிற்சிமுகாமை அந்த இடத்தில் இருந்து அகற்று மாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கடிதம் அனுப்பிவைத்தார்.

இந்த நிலையில், 25 ஆவது படைப் பிரிவு இராணுவத்தினரின் ஆயுதப் பயிற்சி முகாம் அகற்றப்பட்டுள்ளது. (செ-281)

சக்தி F.M "அடையாளம்" நிகழ்ச்சி



## ஜோதிடத் தகவல்

### செவ்வாய் தோஷம்

2 ஆம் வீட்டில் இடம்பெற்ற செவ்வாய் குடும்ப வாழ்க்கை அமைவதில் போராட்டங்களை ஏற்படுத்துவார். 4 இல் இருக்கும் செவ்வாய் 7 ஆம் இடத்தை பார்ப்பதால் திருமணத்தை தாமதப்படுத்துவார். தாய் வகையில் தடைகள் ஏற்படலாம். 7 ஆம் வீட்டில் இருக்கும் செவ்வாய் 8 ஆம் பார்வையாக குடும்ப ஸ்தானத்தை பார்ப்பதால் காதல், களியாட்டம் ஆகியவற்றில் ஈடுபட வைத்து பின்னர் ஏமாற்றத்தை ஏற்படுத்தி விடுவார். உடல்நலக் குறைவு, பிறப்பு உறுப்பில் நோய்,இடமாற்றம் போன்றவற்றாலும் திருமணத்தடை ஏற்படலாம். 12 ஆம் வீட்டில் உள்ள செவ்வாய் எவர்மீதும் சந்தேகத்தை ஏற்படுத்துவார்.

## ஜோன் சீனா கைது

பாரிய குற்றச் செயல்கள் பலவற்றுடன் தொடர்புடையதாக தேடப்பட்டு வந்த "ஜோன் சீனா" எனும் பெயரில் அறிமுகமாகியிருந்தவர் பொலிஸாரினால் கடவத்தையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தெமட்டகொட சமிந்த என்பவரின் குழுவைச் சேர்ந்தவர் ஆவார்.

தெமட்டகொட பிரதேசத்தில் சமிந்தவின் வீட்டில் மறைவாகியிருந்த ஜோன் சீனா. தெமட்டகொட சமிந்த கைதானதை தொடர்ந்து கடவத்தை பிரதேசத்தில் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

களனி தொகுதி விசேட பொலிஸ் பிரிவு மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது இவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஜோன் சீனா எனும் பெயரையுடைய இவர் 35 வயதுடையவர் எனவும் பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (இ-7-10)


Colombo Higher Education
யாழ் மண்ணில் இன்று
**Study in Europe**
**Schengen Visa**

Latvia, Lithuania, Sweden, Poland, German
UK, USA, New Zealand, & Australia

இம்முறை விசா பெற்ற மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடன் நேரடியாக சந்திக்கும் வாய்ப்பு


- IELTS தேவையில்லை (Schengen Visa).
- குடும்பத்துடன் விண்ணப்பிக்கலாம்.

* எந்தவித முற்பணமும் இல்லை
* எல்லா விதமான சேவை கட்டணமும் விசாவிற்கு பின்னரே
* நேரடியாக ஆவணங்களுடன் வரவும்.

இடம் : Gnanams Hotels திகதி : 18.09.2016
நேரம் : 10am - 3pm

மேலதிக விபரங்களுக்கு
COLOMBO HIGHER EDUCATION CONSULTANCY (PVT) LTD
No. 40 2/2, Galle Road, Colombo 06.
077 024 25 55 / 077 736 12 30
011 754 9600
FLEX Graphic
Email : info@checonline.com | web : www.checonline.com


## மணிவிழா வாழ்த்து



ச.குழந்தைவேல்
அம்பலவாணபிள்ளை
பரமேஸ்வரி குடும்பத்தினரும்
முருகேசு கதிரமலை இராஜலட்சுமி
குடும்பத்தினரும் தும்பளை
நெல்லண்டைப்
பத்திரகாளியின் திருவருளுடன்
பெருமகிழ்ச்சியுடன் நடத்தும்
திருமதி.
**இலட்சுமிகாந்தன் ஞானசக்தி**
அவர்களின்
மணிவிழா
(18.09.2016)

வாழ்த்து

*பூத்தவளே புவனம் பதினான்கையும் புவியடங்க*
*காத்தவளே பின் கரந்தவளே கறைக் கண்டனுக்கு*
*மூத்தவளே என்றும் மூவாமுகுந்தர்க்கு இளையவளே*
*மாத்தவளே உன்னையன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே*

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளியம்மன், வட பத்திரகாளியம்மன் திருவருளுடன் நாளும் எல்லா வகையான நலன்களும் பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம். நெல்லண்டை பத்திரகாளியம்மன் திருவடிக் கீழ் சும்மா கிடக்கும் அன்பன் சைவ சித்தாந்த பண்டிதர், அருட்பிரபாகரசீலர் சிவாகம உபதேச வாசஸ்பதி. சிவாகம வித்தியா பூஷணம்.

சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்
(BA, Dip in . Edu MA, பிரதியதிபர்)
அவர் தம் மகன்
சிவஸ்ரீ சோம தனஞ்சயக்குருக்கள்
மருமகன்
சிவஸ்ரீ இராம சுந்தரலிங்கக் குருக்கள்
ஆதீன கர்த்தா, தும்பளை நெல்லண்டை
பத்திரகாளி அம்மன் கோவில்
(சி-5977)


## வாடகைக்கு

46, கஸ்தூரியார் வீதியில் உள்ள கடை ஒன்றும்,
39,41 ஸ்ரான்லி வீதியில் மாடிக்கட்டிடம்
கொண்ட இரு கடைகளும்,
100 அடி நீளமும் 80 அடி அகலமும் விஸ்தீரணம்
உள்ள காணியுடன் சேர்த்து வாடகைக்கு உண்டு
தொடர்புகளுக்கு :-
**021 222 8024**



## யாழ். நகரில்...



LATVIA வில் உயர் கல்விக்கான
இலவச கருத்தரங்கு
மற்றும் நேர்காணல்

யாழ்.மாணவர்களே!
உங்களுக்கான அரிய சந்தர்ப்பம்

- யாழ். நகருக்கு LATVIA பல்கலைக்கழகங்களில் இருந்து வரும் கல்விசார் பிரதிநிதிகளை (Representative) இனை சந்திப்பதன் மூலம் பல்கலைக்கழக அனுமதிகளைப் பெறமுடியும்.
- February 2017 Intake இற்கான அனுமதிகளை பெற்றுக்கொள்ள விரையுங்கள்.
- A/L 3 பாட சித்தியுடன் உங்களுக்கு விரும்பிய கற்கை நெறியை தொடர முடியும்.
- IELTS அவசியமில்லை.
- Schengen Visa (Schengen Union) இலுள்ள 26 நாடுகளுக்கும் ஆன Visa
- 20 மணி நேரம் பகுதிநேர வேலை வாய்ப்பும் உண்டு.

திகதிகள்:-24 Sep-2016 & 25 Sep-2016
நேரம்:- 9.30am to 3 .00 pm வரை
இடம்:- British College of Higher Studies
No.15 2/1, Sirambiyady Lane
Near ariyakulam Junction & Above Sathosa sm Jaffna.
Tel:- 076 668 9664, 021 222 4550
(சி-5793)


## இராசி பலன்

18.09.2016
(புரட்டாதி 02, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
துதியை முன்னிரவு 9.14 மணிவரை
உத்திரட்டாதி காலை 6.06 மணிவரை
ரேவதி பின்னிரவு 4.38 மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை
அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தரம்<br>இரவு 4.30 மணிக்கு<br>மேட சந் | | |
| | | | ராகு<br>புத |
| செவ் | சனி | | குரு<br>சூரி<br>சுக் |

**மீனம்:** நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், திடீர் பயணத்தால் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் ஏற்படலாம்.

**மேடம்:** தொழில் ரீதியான பூயணம் அனுகூலம் தரும், குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**இடபம்:** பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டை அலங்கரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**மிதுனம்:** நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு, உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள்.

**கும்பம்:** ஆராக்கியத்தில் கவனம் தேவை, எதிர்பார்ப்புகள் எளிதில் கைகூடும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்:** பயணங்களால் பலனுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உடல்நலன் சீராகும், பணியாளர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும்.

**மகரம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாடு சிறப்பினைத் தரும், சகோதர வழி ஒத்துழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், தேவையற்ற விரோதங்களைத் தவிர்ப்பது நல்லது, மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.

**தனுசு:** பெற்றோர் வழியில் பிரியம் கூடும், உறவினர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், புதிய முயற்சிகள் கைகூடும், பயணங்கள் கைகூடும்.

**விருச்சிகம்:** இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், ஒளிமயமான எதிர்காலத்திற்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**துலாம்:** மறைமுக எதிர்ப்புகள் விலகும், பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், கௌரவமான நாள்.

**கன்னி:** பொறுமையால் பெருமைகள் வந்து சேரலாம், விரும்பிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

## இந்தியாவின் ஆளுநர்கள் போன்று இங்கும் ஆளுநர்கள்

# ஆளுநர்களாக இருக்க வேண்டும் ஆள்பவர்களாக இருக்கக்கூடாது

## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)



**ஆளுநருக்கு ஒரு அதிகார அலகு, மாவட்ட செயலாளர்களுக்கு ஒரு அலகு, எமக்கு இன்னொரு அலகு என்றிருந்தால் மாகாணம் உருப்படாமல் போய்விடும். முரண்பாடுகளே மிஞ்சும். இவற்றைத் தவிர்ப்பதென்றால் இந்திய நாட்டின் அதிகார அலகுகளின் ஆளுநர்கள் போலவே இங்கும் ஆளுநர்கள் ஆளுநர்களாகவே இருக்க வேண்டும். ஆள்பவர்களாக மாறி விடக்கூடாது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற கட்டடத்திறப்பு விழாவில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். திருத்தங்கள் நடைபெற்று திருத்தப்பட்ட அரசியலமைப்பு அல்லது புதிய அரசியலமைப்பு வெகு விரைவில் வரவிருக்கும் நேரத்தில், அதிகாரப்பரவலாக்கல் ஆரோக்கியமாக நடைபெறும் என்று நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில். பல் நிர்வாக அலகுகளை நீக்கி ஒற்றுமைப்பட்ட ஒரே மாகாண நிர்வாகம் நடைபெற பிரதமர் வழிவகுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

மாகாணங்களைப் பரிபாலிக்கும் பொறுப்பு, நிர்வகிக்கும் அதிகாரம், மாகாண மக்கள் பிரதிநிதிகளுக்கே வழங்க வேண்டும். இன்று மூன்று அதிகார அலகுகள் வடமாகாணத்தில் நடைமுறையில் இருக்கின்றன. ஆளுநர் அதிகார அலகு. அரசாங்க அதிபர்கள் அதிகார அலகு. மூன்றாவது மாகாண அலகு. முதல் இருவரும் முறையே ஜனாதிபதியின் முகவராகவும் மத்திய அரசாங்கத்தின் நெறிப்படுத்தலுக்கு உட்பட்டவர்களாகவும் இருப்பதால் கூடிய அதிகாரங்களை அவர்களே பரிபாலிக்கக் கூடியதாக உள்ளது. உண்மையில் மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கும் எண்ணம் மத்திக்கு இருந்தால் முழுமையான அதிகார பீடமாக மாகாணசபையை மாற்ற வேண்டும். மத்திக்கும் மாகாணத்திற்கும் ஒருங்கியலும் நிரல் என்ற Concurrent List ஒன்று இருக்கக் கூடாது. அவ்வாறு இருப்பதால் மாகாணத்தின் அதிகாரங்களை மத்தியே பிரயோகிக்கத் தலைப்படுகின்றது. ஆகவே மத்திக்கும் மாகாணத்திற்கும் அவற்றின் அதிகாரங்கள் மிகத் தெளிவாக நிர்ணயிக்கப்பட்டு ஒரே விடயம் சம்பந்தமாகப் பலர் அதிகாரம் செலுத்தும் நிலையை நாங்கள் தவிர்த்துக் கொள்ளுவோமாக!


உதாரணத்திற்கு அண்மையில் முதலீட்டாளர்களை வரவேற்று இங்கு அவர்களின் பெயர்களைப் பதிவு செய்ய ஆளுநர் நடவடிக்கை எடுத்திருந்தார். அதற்கு நான் எதிர்ப்பாளன் அல்ல. ஆனால் நாங்கள் மாகாணத்தின் தேவைகள் பற்றி ஒரு முறையான தேவைக் கணிப்பைப் பல் நிறுவனங்களின் ஒத்தாசையுடன் செய்ய விளையும் நேரம் எமது தேவைகள் என்னென்ன எவ்வாறான முதலீடுகள் எமக்கு எந்தெந்தத் துறை சம்பந்தமாக அவசியம். எங்கெல்லாம் எவ்வாறான செயற்றிட்டங்கள் நிறுவலாம் என்றெல்லாம் ஆராயாமல்வெறுமனே முதலீட்டாளர்களை வர அனுமதிப்பதால் திட்டமிட்ட நிரந்தர அபிவிருத்திக்கு முட்டுக்கட்டைகள் போட்டவர்களாவோம் என்ற கருத்தைக் கூறி வைத்தேன்.

உண்மையில் 2013 ஆம் ஆண்டு நாங்கள் பதவிக்கு வந்த உடனேயே இவ்வாறான ஒரு பல்தேவைக் கணிப்பை ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதியிடம் கேட்டிருந்தோம். அதற்கு அப்போதைய வதிவிடப் பிரதிநிதி தமது ஒப்புதலைத் தந்துவிட்டு அவ்வாறு செய்யாது மிகக் குறுகிய ஒரு கணிப்பையே மேற்கொண்டார். அதற்குக் காரணம் அவருக்கு அப்போதைய அரசாங்கம் கொடுத்த நெருக்குதல்கள். முழுமையான தேவைகள் கணிப்பை முன்னைய அரசாங்கம் விரும்பவில்லை. அதனால் தான் இத்தனை கால தாமதத்தை நாங்கள் எதிர்நோக்கியிருந்தோம். எங்கள் பிரதமர் தான் தற்போதைய சகல மட்டத் தேவைகள் கணிப்புக்கு வழி அமைத்துத் தந்துள்ளார். அவருக்கு எமது மனங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக. அதுமட்டுமல்ல. இங்கிலாந்து உள்ளூர் சபையொன்றுடன் Twinning என்ற இரட்டைத் தொழிற்பாட்டு உடன்பாடொன்றை நடைமுறைப்படுத்தவும் அவரே வழி அமைத்துக் கொடுத்துள்ளார். சென்ற வருடம் ஜுலை மாதத்தில் நான் தொடங்கிய கைங்கரியம் அடுத்த மாதம் நடைமுறைக்கு வர இருக்கின்றது.

ஆகவே 2003இல் இதே பிரதமர் உருவாக்கிய ஒரு பல் நிறுவன பல்துறைசார்ந்த தேவைகள் கணிப்பின் அடிப்படையில் தயாரிக்கப்படும் புதிய கணிப்பொன்றின் பின்னரே எமது தேவைகளுக்கு ஏற்றவாறு முதலீடுகள் நடைபெற வேண்டும் என்று கருதினோம். உடனேயே பல முதலீட்டாளர்களை இங்கு கொண்டுவர எத்தனித்தல் மாட்டுக்கு முன் கரத்தையைக் கட்டுவதாக முடியும் என்று தெரிவித்திருந்தேன். எமக்குப் போதிய நீர் இல்லை. வடிகால் வசதியில்லை. மனித வளங்கள் தேர்ச்சி பெற்றவர்களாக்கப்பட வேண்டும். இந்த நேரத்தில் முதலீட்டாளர்களை இங்கு கொண்டு வந்தால் குழப்பங்களே மிஞ்சும். குறைபாடுகளே வெளிச்சமாவன என்று கருதினேன். ஆகவே தான்தோன்றித்தனமாக அபிவிருத்திகளில் இறங்குவதை நாங்கள் விரும்பவில்லை.

மத்தியானது எமக்கு ஒரு தந்தை போன்றிருந்து அனுசரணை வழங்க வேண்டும் என்று விரும்புகின்றோம். எமது கடமைகளை அவர்கள் போட்டிழுத்துக் கொண்டு தமக்கென வேறொரு நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதை நாம் எதிர்க்கின்றோம். ஜனநாயகம் என்றால் மக்கள் விருப்பு என்று பொருள்படும் ஆகவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே தேவைகளையும் செயற்றிட்டங்களையும் நிர்ணயிக்க வேண்டும். வேற்று மாகாணங்களைச் சேர்ந்த மத்திய மக்கள் பிரதி நிதிகளாலோ. எமது மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஆளுநராலோ. அதிகார மட்ட அலுவலர்களாலோ எம்முடன் கலந்தாலோசிக்காமல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஈற்றில் எமக்குப் பாதிப்புக்களையே விளைவிப்பன. ஆற அமர சிந்திக்காது பணத்திற்கு ஆசைப்பட்டு பின்னணி தெரியாத முதலீட்டாளர்களைப் பெருவாரியாக இங்கு கொண்டு வருவது எமக்குக் கால ஓட்டத்தில் கடும் பாதிப்புக்களையே ஏற்படுத்துவன. சமூக சீர்குலைப்புக்களை ஏற்படுத்துவன.

மேலும் சமாதானத்தைக் கட்டி எழுப்ப ஐக்கிய நாடுகள் பணம் தந்து உதவியுள்ளது. எம்முடன் கலந்தாலோசிக்காமல் எமது தேவைகளை எம்மிடம் இருந்து தெரிந்து கொள்ளாமல் அதற்கான அச்சுவார்ப்புரு (Matrix) தயாரிக்கப்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களை கண்டறிவது வேறு. மத்தியால் நியமிக்கப்படும் அலுவலர்களின் கருத்துக்களை அறிந்து செயற்படுத்துவது வேறு. அலுவலர்கள் தொழிற்றிறனை நாடுவார்கள். கொள்கை ரீதியாக மக்களின் நிலை கண்டு அல்லது அவர்கள் தேவைகருதிச் செயற்பட வேண்டியவர்கள் அல்ல அவர்கள். அத்துடன் மத்திக்கு இசையாவிடில் தண்ணீர் இல்லாக் காட்டுக்கு அனுப்பப்பட்டு விடுவார்கள் என்ற பயமும் அவர்களுக்கு உண்டு என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)










அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் யாழ். கம்பன் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நல்லூர்க் கம்பன் கோட்டத்திலும், நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்திலும் இடம்பெற்றது.





BLOOMING BUDS
The Wisdom of Children

# BLOOMING BUDS
## International E CAMPUS

PV 94034

ENGLISH MEDIUM TEACHER TRAINING DIPLOMA PROGRAMME
பயிற்சியின் மூலம் ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ளல்

## 6 Months

### தகைமைகள்

- க.பொ.த. (சா/த) 4 பாடங்களில் திறமைச்சித்தி மற்றும் க.பொ.த. (உ/த) கற்றிருத்தல் வேண்டும்.
- ஆங்கில பாடத்தில் குறைவானவர்களுக்கு 60 நாட்களுக்கு ஆங்கிலப் பயிற்சி கொடுக்கப்படும்.
- பயிற்சி கிழமையில் 3 நாட்கள் என்ற அடிப்படையில் 10 மாதங்களுக்குக் கொடுக்கப்படும்.
- பயிற்சி முடிவடைந்த பின்னர் எமது கிளை நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவீர்கள்.
- போயா தினம் உட்பட அரசாங்க விடுமுறை தவிர ஏனைய நாட்கள் காலை 7.30-2.30 வரை வேலைநாட்களாகும்.

### மேலதிகமாக

சிங்களக் கல்வி மற்றும் கணனி கற்கை நெறியும் இணைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா , சிங்கள டிப்ளோமா (பேசும் ஆங்கிலம் அடங்கியது) ஆங்கில இலக்கிய டிப்ளோமா , சுயதிறன் விருத்தி டிப்ளோமா என்பன இலவசமாக கற்பிக்கப்படும்

ஐந்து வருடங்களாய் சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளுக்காக பயிலுனர் ஆசிரியர்களை பயிற்றுவித்து எமது நிறுவனம் நாடெங்கிலும் ஆங்கிலம் கற்றலிலும் கற்பித்தலிலும் பேசுவதிலும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் குறைப்பாடுகள் நிவர்த்திசெய்யும் முகமாக எல்லா மாகாணங்களிலும் எங்களது 45 புதிய நிறுவனங்களுக்கு 300 ஆசிரியர்களை இணைத்துக்கொள்ள முன் வந்துள்ளோம்

**Course Fees Monthly 4800/= Only**

கற்கை நெறிக்கான கட்டணங்களுக்கு வங்கிகடன் ஏற்பாடு செய்து தரப்படும்
(நிபந்தனைக்கு உட்பட்டது )

உங்கள் விண்ணப்பத்தினைப் பிறப்பு அத்தாட்சி பத்திரம் தராதரப்பத்திரக் குறிப்புப் பிரதி எடுத்து அத்துடன் (9x4) அளவுள்ள தபாலுறையில் 45.00 மேல் மூலையில் 01-11 ஆம் வகுப்பு வரை என்று எழுதி பதிவுத்தபாலில் அனுப்பவும்.

பதிவுத்தபாலில் அனுப்பவேண்டிய முகவரி officer.
Blooming Buds International *E Campus*
Teacher Training School .178, Thavadi Rd , Suthumalai south Manipay
021 225 6641. 071 566 9641

378/3, Nelson Building
Kandy Road, Dhulukama,
Kalaniya. 011 305 4641

No.390/2/1, Baseline Road
Dematagoda
Colombo- 9 . T.P : 011 267 7641
071-5669641,077-1529731

www. blooming budse campus.com

PV 94034

# வீட்டு மின்சார இணைப்பு தொழில் நுட்பம் சம்பந்தமான பாடநெறி

செயல்முறை பயிற்சியுடன் மற்றும் வெளிநாடுகளில் தொழில் புரிய இருப்பவர்களுக்கு தேவையான ஆங்கில பேச்சு பயிற்சியும் எழுத்து பயிற்சியும்

பயிற்சி காலத்தில் செயல்முறை பயிற்சியுடன் சரியான முறையில் சான்றிதழ் பெற்றுக்கொடுக்கப்படும்.

பாட நெறிக்கான காலம் 70 நாட்கள் மட்டுமே

பாடநெறியை பூர்த்தி செய்யும் அனைவருக்கும் 50000 இற்கு மேற்பட்ட சம்பளத்தில் வேலைவாய்ப்பு!

பாடநெறி கட்டணம் ரூபா 35000 மட்டுமே தவணை முறையிலும் கட்டணத்தை செலுத்தலாம்.



இல. 40, கண்டி வீதி,
தளுகம, களனி.
TP: 011 291 2641,
075 493 3349

பாடநெறியை தொடர இருப்பவர்கள் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றை
077 550 9641
என்ற இலக்கத்துக்கு SMS செய்யவும்.

ஹொட் லைன் 071 566 9641

www.bloomingbudsecampus.com, facebook.com/ bloomingbuds international ecampus

# யாத்திரை சென்று வந்த இருவர் உயிரிழப்பு!

இந்தியாவுக்கு யாத்திரையை மேற்கொண்டு நாடு திரும்பிய இரு பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த இரண்டு பேருக்கும் இன்ஃபுளுவென்சா H1N1 நோய் காரணமாக உயிரிழந்துள்ளார்களா? என்பது தொடர்பில் ஆய்வு செய்யப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சிலாபம் - நல்லதரன்கட்டு பகுதியை சேர்ந்த இரண்டு பெண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். கடந்த மாதம் 27ஆம் திகதி இந்தியாவுக்கான யாத்திரையை மேற்கொண்ட நிலையில் மீண்டும் கடந்த 10ஆம் திகதி நாடு திரும்பியுள்ளனர்.

இந்நிலையில், அவர்களில் ஒருவர் கடந்த 12ஆம் திகதியும், மற்றுமொருவர் 13ஆம் திகதியும் உயிரிழந்துள்ளார். இது தொடர்பில் வைத்திய பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவர்களுடன் இந்தியாவுக்கு யாத்திரை மேற்கொண்டிருந்த மற்றுமொரு பெண் சுவாச நோயினால் பாதிக்கப்பட்டு சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# கட்டுநாயக்க விமானநிலையம் செல்பவர்களுக்கு எச்சரிக்கை

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான நிறுவனம் தமது விமானங்களில் சாம்சுங் நோட் 7 தொலைபேசிகளின் பாவனைக்கு முற்றாகத் தடை விதித்துள்ளது.

இந்தத்தடை நேற்று பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் விதிக்கப்பட்டுள்ளதுடன், மக்களுக்கு தெளிவூட்டும் வகையில் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மின் வலுவேற்றும் போது தொலைபேசிகள் வெடித்துள்ளதாக 10 இற்கும் மேற்பட்ட பாவனையாளர்கள் முறைப்பாடு செய்ததை அடுத்து, சாம்சுங் நிறுவனம் தனது தற்போதைய வெளியீடான சம்சுங் நோட் 7 தொலைபேசிகளின விற்பனையை தடைசெய்துள்ளது.

எனினும் குறித்த தொலைபேசியை பயணத்தின்போது கொண்டு செல்பவர்கள் தொடர்பினை நிறுத்தி (switch off) தமது பையில் கொண்டு செல்லுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தடை பற்றி விமான நிலையங்களிலும், விமானத்தினுள்ளும் பயணிகளுக்கு அறிவிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# மக்களை கருத்திற்கொண்டு சு.க.உறுப்பினர்கள் 'வற்'வரி சட்டமூலத்திற்கு வாக்களிக்க வேண்டும்

## ஜே.வி.பி.ஊடகப்பேச்சாளர் வலியுறுத்து

***'வற்' வரி சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது மக்களின் பக்கமிருந்து சிந்தித்து வாக்களிக்க வேண்டியது சுதந்திரக்கட்சி உறுப்பினர்களின் கடமை என மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகப்பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.***

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசாங்கம் மீண்டும் ஒருமுறை நாட்டு மக்கள் மீது அதிக வரிச்சுமையை சுமத்தி மக்களை நெருக்கடிக்குள்ளே தள்ள முற்படுகின்றது. அதனால் கடந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளிலும் இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளிலும் குறிப்பிடத்தக்க வகையிலான மாற்றங்கள் எவையும் இல்லையென தெரியவருகின்றது.

அதற்கமையவே நாட்டு மக்கள் மீது அதிக வரிச்சுமை சுமத்தப்படுகின்றது. குறிப்பாக இந்த வரி விதிப்பு முறைமை நீதியானதாக இல்லை. காரணம் அரசாங்கமானது மக்களிடத்தில் வரி அறவிடும் போது அறவிடும் முறைமை, வரி வழங்கும் முறைமை என்பன இலகுவானதாக அமைய வேண்டும் அத்துடன் வரி விதிப்பு, அறவீட்டு முறைமைகள் சட்டத்துக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

ஆனால் நல்லாட்சி அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்ட வற் வரி சட்டமூலம் பாராளுமன்றத்திலோ, அமைச்சரவையிலோ அனுமதி பெறப்படாமல் கொண்டுவரப்பட்டதால் உயர் நீதிமன்றமும் இந்த சட்ட மூலத்தினை நிராகரித்து தடை உத்தரவு வழங்கியது. இவ்வாறான நிலையிலேயே மீண்டும் இந்த வரிக்கொள்கையை அமுல்படுத்த இந்த அரசாங்கம் முனைப்புடன் செயற்படுகின்றது.

இவ்வாறான பாராதூரமான சிக்கல்கள். குழப்பங்களின் மத்தியிலேயே மீண்டும் வற் வரி திருத்தச் சட்டமூலம் அமைச்சரவை அனுமதியை பெற்றுக்கொண்டு பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்படவுள்ளது. ஆனால் இந்த சட்டத்தில் எந்தவித பாரிய மாற்றங்களும் செய்யப்படவில்லை.

வைத்தியத்துறை மற்றும் பால்மா உள்ளிட்டவைக்கு விதிக்கப்பட்ட வரிகள், தொலைத் தொடர்பாடல் இயந்திரங்களுக்கான வரிகள்



உள்ளிட்டவற்றில் மாத்திரம் சிறிது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை திருத்தங்கள் அல்ல மக்களின் எதிர்ப்புக்களை சமாளிப்பதற்கான சூட்சம செயற்பாடுகள்.

அண்மையில் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் அமைச்சர்களும் இந்த சட்டமூலத்தில் தமக்கு உடன்பாடில்லை திருத்தங்கள் வேண்டும் என்று வலியுறுத்தினர். இருப்பினும் அமைச்சரவை கூட்டத்தில் சட்டத்திற்கு ஆதரவு வழங்கியுள்ளனர். இந்த சட்டமூலத்தில் நீதி, நியாயம், இலகுவான வரி அறவீட்டு முறைமை உள்ளிட்ட வரி விதிப்பிற்கான எந்தவித படிமுறைகளும் இதில் பின்பற்றப்படவில்லை என்பதை அறிந்தும் சுதந்திரக் கட்சி பிரதிநிதிகள் ஆதரவு வழங்கக் கூடாது.

இதேவேளை 'வற்' வரி தொடர்பில் மக்களின் பக்கமிருந்து சுதந்திரக்கட்சியினர் சிந்தித்து வாக்களிப்பது அவர்களின் கடமையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# 09.2016 18 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1739 - பெல்கிரேட் நகரம் ஒட்டோமான் பேரரசிடம் கையளிக்கப்பட்டது.
- 1759 - கியூபெக் நகரை பிரித்தானியர் கைப்பற்றினர்.
- 1809 - லண்டனில் ரோயல் ஒப்பரா மாளிகை திறக்கப்பட்டது.
- 1810 - சிலியில் முதலாவது அரசு (தரவெய) அமைக்கப்பட்டது.
- 1851 - நியூயோர்க் டைம்ஸ் இதழ் முதன் முதலில் வெளியிடப்பட்டது.
- 1895 - புக்கர் டி. வாஷிங்டன் தனது புகழ்பெற்ற "அட்லாண்டா மத்தியஸ்தம்' என்ர சொற்பொழிவை ஆற்றினார்.
- 1906 - ஹொங்கொங்கில் ஏற்பட்ட புயல் மற்றும் ஆழிப்பேரலையினால் 10,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1919 - நெதரலாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1922 - உலக நாடுகள் அணியில் ஹங்கேரி இணைந்தது.
- 1924 - மகாத்மா காந்தி இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக 21-நாள் உண்ணா நோன்பைத் தொடங்கினார்.
- 1959 - வன்கார்ட் 3 பூமியைச் சுற்றிவர அனுப்பப்பட்டது.
- 1960 - பிடெல் காஸ்ட்ரோ ஐநா கூட்டத்தொடரில பங்குபற்ற நியூயோர்க் நகரை அடைந்தார்.
- 1962 - ருவாண்டா, புருண்டி, ஜமெய்க்கா ஆகியன ஐ.நா.வில் இணைந்தன.
- 1964 - வியட்நாம் மக்கள் இராணுவம் தென் வியட்நாமினுள் நுழைந்தது.
- 1968 - இந்திய உளவுத்துறை நிறுவனம் றா அமைப்பு உருவாக்கப்பட்டது.
- 1972 - இடி அமீனினால் விரட்டப்பட்ட முதல் தொகுதி உகாண்டா மக்கள் ஐக்கிய இராச்சியத்தை வந்தடைந்தனர்.
- 1974 - சூறாவளி ஹொண்டூராசைத் தாக்கியதில் 5,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1976 - பெய்ஜிங் நகரில் மா சே துங்கின் இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.
- 1977 - வொயேஜர் 1 பூமியையும் சந்திரனையும் சேர்த்துப் படம் எடுத்தது.
- 1980 - சோயுஸ் 38 கியூபாவைச் சேர்ந்த விண்வெளி வீரருடனும் ஒரு ரஷ்யருடனும் விண்வெளி சென்றது.
- 1982 - லெபனானில் கிறிஸ்தவ துணை இராணுவத்தினர் 600 பாலஸ்தீனரைக் கொன்றனர்.
- 1988 - பர்மாவில் அரசியலமைப்பு நிறுத்திவைக்கப்பட்டது. மக்களாட்சிக்கு ஆதரவானோர் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். 8888 எழுச்சி முடிவுக்கு வந்தது.
- 1990 - லிக்டன்ஸ்டைன் நாடு ஐநாவில் இணைந்தது.
- 1997 - 50.3 விழுக்காடு வேல்ஸ் மக்கள் சுயாட்சிக்கு ஆதரவாக வாக்களித்தனர்.
- 2006 - கிழக்கிலங்கை, அம்பாறையில் 11 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2007 - மியான்மாரில் பௌத்த பிக்குகள் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டனர்.

**பிறப்புக்கள்**

- 1709 - சாமுவேல் ஜோன்சன், ஆங்கில எழுத்தாளர். (இ. 1784)
- 1819 - லியோன் ஃபோக்கோ, பிரெஞ்சு இயற்பியலாளர். (இ. 1868)
- 1905 - கிரெட்டா கார்போ, சுவீடிய நடிகை. (இ. 1990)
- 1979 - வினய், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்.

**இறப்புகள்**

- 1180 - ஏழாம் லூயி, பிரான்சின் மன்னன். (பி. 1120)
- 1783 - லியோனார்டு ஆய்லர், சுவிற்சர்லாந்து கணிதவியல் அறிஞர். (பி. 1707)
- 1945 - இரட்டைமலை சீனிவாசன், ஆதி திராவிடர் இயக்கத் தலைவர். (பி. 1859)
- 1961 - டாக் ஹமாஷெல்ட், சுவீடனைச் சேர்ந்த ஐ.நா. பொதுச் செயலர், நோபல் பரிசு பெற்றவர். (பி. 1905)
- 1966 - வித்துவான் க. வேந்தனார், ஈழத் தமிழறிஞர். (பி. 1918)
- 1967 - ஜோன் கொக்ரொஃப்ட், பிரித்தானிய இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர். (பி. 1897)
- 1978 - ஆபிரகாம் கோவூர், பகுத்தறிவாளர். (பி. 1898)
- 2011 - டி. கே. கோவிந்த ராவ் கருநாடக இசைக் கலைஞர். (பி. 1929)

**சிறப்பு நாள்**

- சிலி - விடுதலை நாள். (1810)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 55 | 60 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 95 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 70 | 120 | 80 | 100 |
| தக்காளி | 60 | 50 | 40 | 50 | 50 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 50 | 70 | 100 | 90 | 70 |
| கோவா | 100 | 80 | 55 | 80 | 90 | 80 |
| கரட் | 80 | 100 | 70 | 120 | 100 | 200 |
| பூசணி | 40 | 20 | 25 | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 20 | 30 | 30 | 40 | 50 |
| வாழைக்காய் | 100 | 50 | 60 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 90 | 100 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 140 | 100 | 60 | 120 | 70 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 40 | 80 | 60 | 80 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | — | 120 | 100 | 100 |
| பயற்றங்காய் | 80 | 40 | 30 | 60 | 40 | 60 |
| லீக்ஸ் | 140 | 100 | 85 | 100 | 100 | 120 |
| பீற்றூட் | 50 | 40 | 30 | 40 | 40 | 40 |
| கறிமிளகாய் | 120 | 100 | 90 | 80 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 130 | 200 | 180 | 160 |
| போஞ்சி | 180 | 200 | 140 | 200 | 180 | 180 |
| கத்தரித்தம்புள்ள | 60 | 20 | 30 | 40 | 50 | 50 |
| கீரை - 1பிடி | 40 | 10 | 25 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 300 | 300 | 200 | 300 | 200 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-30 | 40 | 25 | 40 |
| இராசவள்ளி | — | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 120 | — | — | 180 | — | 120 |
| முள்ளங்கி | 60 | — | 25 | 40 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 15 | 10 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 50 | 20 | 30 | — | 40 | — |

# இலங்கையுடனான இராணுவ விநியோக உடன்பாட்டை புதுப்பிக்க அமெ.விருப்பம்

(கொழும்பு)

**மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் இலங்கையுடன் செய்து கொண்ட இராணுவ விநியோக உடன்பாட்டைப் புதுப்பித்துக் கொள்வதற்கு அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.**

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் அப்போதைய அமெரிக்கத் தூதுவருக்கும் இடையில் 2007ஆம் ஆண்டு. கையகப்படுத்தல் மற்றும் குறுக்கு - சேவைகள் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது.

பரிமாற்றம் மற்றும் விநியோக பரிமாற்றங்கள். உதவி மற்றும் எரிபொருள் விநியோக சேவைகளை வழங்குவதற்கு வசதிகளை செய்யும் இந்த உடன்பாடு 10 ஆண்டுகள் செல்லுபடியானது.

இந்த உடன்பாட்டை மேலும் 10 ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கு அமெரிக்கா விருப்பம் கொண்டுள்ளதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் கொழும்பு ஆங்கில நாளிதழிடம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க கடற்படைச் செயலர் ரே மபுஸ் அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தின் போது. அமெரிக்காவின் இந்த விருப்பம் உறுதிப்படுத்தப்பட்டது.

ஐ.தே.க. ஆட்சியில் இருந்த 2002-2003 காலப்பகுதியில் அமெரிக்கா- இலங்கை இடையில் இந்த உடன்பாட்டை செய்து கொள்வதற்கான பேச்சுக்கள் நடத்தப்பட்ட போதும், இறுதி இணக்கம் காணப்படவில்லை.

2007ஆம் ஆண்டிலேயே இந்த உடன்பாடு கையெழுத்திடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## அழைப்புக் கட்டணங்களை குறைக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

கையடக்கத்தொலைபேசிஅழைப்பு மற்றும் இணைய பாவனைக்கான தரவுக் கட்டணத்தை குறைக்குமாறு சோசலிச இளைஞர் ஒன்றியம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

அரசாங்கம் எடுத்துள்ள புதிய தீர்மானம் காரணமாக அழைப்பு மற்றும் இணைய தரவுக் கட்டணம் என்பன 100இற்கு 50 சத வீதமளவில் அதிகரிக்கப்படும் என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அழைப்பு மற்றும் இணைய பாவனைக்கான தரவுக் கட்டணங்களுக்கு இவ்வாறு வரி அதிகரிப்பது நாட்டிலுள்ள இளைய சமுதாயத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பாரதூரமான விடயம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7-10)

## காணாமற்போனோர் குறித்த உபகுழுக்கூட்டம் புதன்கிழமை

(கொழும்பு)

இலங்கையில் காணாமற்போனோர் குறித்த விவகாரம் தொடர்பில் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை ஜெனிவா மனித உரிமை பேரவை வளாகத்தின் 27ஆவது அறையில் உபகுழுக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

அனைத்துவிதமான அநீதிகளுக்கும் எதிரான சர்வதேச இயக்கம் என்ற அமைப்பு நடத்தவுள்ள இந்த உபகுழுக் கூட்டத்தில் மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் இலங்கை பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள், இலங்கையிலிருந்து ஜெனிவா கூட்டத் தொடரில் கலந்துகொள்ளும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், இராஜதந்திரிகள் என பலர் இந்த உபகுழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

இந்த உபகுழுக் கூட்டத்தில் இலங்கையில் காணாமற்போனோர் குறித்த நிலைமைகள் மற்றும் அதற்கான தீர்வு விவகாரம் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது.

இதில் தமிழர் தரப்பு பிரதிநிதிகள் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர். குறிப்பாக வட மாகாண சபை உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன் மற்றும் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோரும் இந்த உப குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

அத்துடன் எதிர்வரும் 22 ஆம் திகதி பசுமை தாயகம் அமைப்பின் ஏற்பாட்டில் மனித உரிமை பேரவை வளாகத்தின் 27 ஆம் இலக்க அறையில் இலங்கை தொடர்பான உபகுழுக் குழுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இதேவேளை ஜெனிவா அமர்வில் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்த, பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயற்குழுவானது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குவதற்கான பொறுப்புக்கூறல் பொறிமுறையில் சர்வதேச பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் ஆர்வம் காட்டவேண்டியது அவசியமாகும்.

குறிப்பாக நீதி வழங்கும் செயற்பாட்டில் அரசாங்கம் தெளிவான முன்னேற்றத்தை வெளிக்காட்ட வேண்டுமென தெரிவித்திருந்தது.

அதுமட்டுமன்றி நிலைமாறு கால நீதி மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாட்டில் சிவில் சமூகத்தின் பங்களிப்பை அதிகளவில் பெற்றுக் கொள்ளவேண்டியது அவசியம் என்றும் ஐ.நா. செயற்குழுவின் பிரதிநிதி ஸ்லாமி சுட்டிக்காட்டினார். (இ-7-10)

## வாரம் ஒரு தகவல்

### அன்னையின் விருப்பத்தை நிறைவேற்றியவர்

விநோபா பாவேயின் இளமைப்பருவம்; அப்போது அவர் பெயர் விநாயக். படிப்பில் திறமையுடன் விளங்கினார். எதிலும் ஒழுக்கமும் கட்டுப்பாடும் கொண்டவர்.

இவரது அன்னையார் ஒரு முறை கீதைச் சொற்பொழிவைக் கேட்கப் போயிருந்தார்.

சுலோகங்கள் சமஸ்கிருதத்தில் இருந்தமையால் அவருக்குத் தெளிவாக எதுவும் புரியவில்லை. வீட்டுக்கு வந்து, அவர் தம் புதல்வர் விநாயக்கை அழைத்தார்.

அவரிடம் அன்னையார், ``நான் கீதைச் சொற்பொழிவுக்குப் போயிருந்தேன். எல்லாம் சமஸ்கிருதத்திலேயே சொன்னார்கள். மராத்தியில் இருந்தால் எனக்குப் படிக்க வாய்ப்பாக இருக்கும்'' எனக் கூறினார்.

தமது அன்னையின் விருப்பத்தை நிறைவு செய்யும் முனைப்போடு விநாயக், மராத்தி மொழியில் விளக்கமுள்ள கீதை நூல் ஒன்றை வாங்கி வந்து அன்னையிடம் கொடுத்தார்.

அதைப் படித்துப் பார்த்த அவர், ``உரை நடையிலல்லவா இது இருக்கிறது! மராத்திச் செய்யுளில் இருந்தால் பாடிப் படிக்கலாமே!'' என்று தமது கருத்தைக் கூறினார்.

மராத்திச் செய்யுளிலுள்ள கீதை ஒன்றைக் கொண்டு வந்து தாயிடம் கொடுத்தார் விநாயக்.

அவர் அதைப் பலமுறை படித்துப் பார்த்தார். அதுவும் அவருக்கு மிகக் கடினமாக இருந்தது.

அவர் தம் மகனிடம், ``இதிலுள்ள செய்யுள்கள் கடினமாக அமைந்துள்ளன. செய்யுள் எளிமையாக இருந்தால் எல்லோரும் படித்துக் கொள்ளலாமல்லவா?'' என்று தம் கருத்தைக் கூறினார்.

விநாயக், ``இதற்கு என்ன செய்ய?'' என்று சிந்தித்துக் கொண்டிருந்தார். அன்னை படித்துணரக் கீதை நூலைக் கொடுக்க முடியவில்லையே என்ற கவலை அவருக்கு.

தாயார் மீண்டும் தம் மகனிடம், ஏன் விநாயக், எளிமையான மராத்தி மொழியில் எனக்காக நீயே இதை ஆக்கிக் கொடேன் என்று தம் விருப்பத்தை வெளியிட்டார்.

``தம்மால் இது முடியுமா?'' என்று அப்போது விநாயக் சிந்தித்துப் பார்த்தார்.

அவரால் அப்போது முடியவில்லைத்தான். ஆனால் பல ஆண்டுகளுக்குப் பின் தம் அன்னையின் விருப்பப்படி அவர் கீதாயா நூலை மராத்தியில் ஆக்கினார். ஆனால் அதைப் படிக்க அவரது அன்னை தான் உலகத்தில் இல்லை.

கவிஞர் தே.ப.பெருமாள்

## தலைமைத்துவத்தால் பாராட்டைப்பெறும் பிரதமர் ரணில் விக்கிரசிங்க



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பிற்கான வரைபை தயாரித்து வருகின்ற அரசியலமைப்பு நிர்ணய சபையின் பிரதான வழிநடத்தும் குழுவின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அந்தக் குழுவிற்கு வழங்கும் தலைமைத்துவம் தொடர்பில் பல்வேறு தரப்பினரதும் பாராட்டுக்களைப் பெற்று வருகிறார்.

குறிப்பாக இந்தப் பிரதான வழிநடத்தல் குழுவில் 21 பாராளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெறுகின்றனர். அந்த 21 எம்.பிக்களில் அதிகமானோர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் புதிய அரசியலமைப்பு குறித்த அர்ப்பணிப்பான செயற்பாடு தொடர்பில் பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

அதாவது புதிய அரசியலமைப்பை தயாரிக்கும் விடயத்திலும் பிரதான வழிநடத்தல் குழுவின் கீழ் காணப்படுகின்ற இனப்பிரச்சினை தீர்வு விடயம் தொடர்பிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராட்டியுள்ளனர்.

அரசியலமைப்பு நிர்ணய சபையின் கீழ் செயற்படுகின்ற இந்த பிரதான வழிநடத்தல் குழுவே புதிய அரசியலமைப்பின் வரைபை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## பெரஹெரவுக்காக கொண்டு வந்த யானை தாக்கியதில் ஒருவர் மரணம்; 11பேர் காயம்

இரத்தினபுரி மஹா சமன் தேவாலயத்தின் பெரஹெரவுக்காக கொண்டுவரப்பட்டிருந்த யானையின் தாக்குதலுக்கு இலக்காகி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 11 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இச் சம்பவத்தில், லீலாவதி என்பவரே உயிரிழந்துள்ளார்.

பெரஹெரா ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே யானை தாக்கியுள்ளது.

இதன்போது காயமடைந்த 11 பேர் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7-10)

# புரட்டாதி மாத இராசிபலன்கள்

## 17.09.2016-16.10.2016



*உணமைக்காகப் போராடும் உன்னத குணம் படைத்த மேஷ ராசி நேயர்களே!*

புரட்டாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத்தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் செவ்வாய் 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து ஒளிமயமான எதிர்காலத்திற்கு உத்தரவாதம் தரப்போகிறார்.

பணியில் தொய்வு, பரபரப்பாகச் செயறபடும் சூழ்நிலை, பிணிகளுடன் கூடிய உடல் நிலை, பிறருக்கு கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாத நிலை, வணிகத்தின் கடன் தொல்லை, என இருந்த இடையூறுகள் இனி மாறப்போகின்றது.

பஞ்சம ஸ்தானத்தில் ராகு பலம் பெற்றிருபபதால் நெஞ்சம் மகிழ நடந்து கொண்ட பிள்ளைகள் இப்பொழுது கொஞ்சம் நிலை மாறலாம். அடுத்தவர்கள் பொறுப்பில் ஒப்படைத்த குழந்தைகளை இனி உங்கள் பொறுப்பிலேயே கவனித்துக் கொள்வது நல்லது.

6ஆம் இடத்தில் மூன்று கிரகங்கள் முற்றுகையிட்டுள்ளன. தன சப்தமாதிபதியான சுக்ரன் நீச்சம் பெற்றிருக்கின்றார். பஞ்சமாதிபதியான சூரியனும் 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குருவும் அவரோடு இணைந்திருக்கின்றார்கள். தனாதிபதி நீச்சம் பெற்றால் தனவரவில் தடைகள் ஏற்படும் என்பார்கள். ஆனால் நீச்சன் நின்ற ராசிநாதன் புதன் பரிவர்த்தனை யோகம் பெற்று விளங்குவதால் நல்ல பலன்கள் உங்களை நாடிவரும்.

உள்ளம் மகிழும் சம்பவங்கள் வந்து கொண்டே இருக்கும். தேவைப்பட்ட பொழுது தேவைப்பட்ட பொருட்களை வாங்கப் பணம் தேடி வரும். குடும்ப ஒற்றுமைக்கு குந்தகம் விளைவித்தவர்கள் விலகுவர். குரு வலிமை இழந்திருப்பது யோகம்தான். விரயாதிபதி வலிமை இழக்கும் பொழுது சுபவிரயங்கள் அதிகரிக்கும்.

ராசிநாதன் செவ்வாயை மேலும் பலப்படுத்த செவ்வாய்க்கிழமை தோறும் விரதமிருந்து முருகப் பெருமானை வழிபாடு செய்வதோடு நவராத்திரி விழாவைக் கொண்டாடி பராசக்தி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**சுகம் தரும் சுக்ரப்பெயர்ச்சி!**

செப்டெம்பர் 19ஆம் திகதி துலாம் ராசிக்குச் சுக்ரன் செல்ல இருக்கின்றார். தனசப்தம ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம் தான். கல்யாணக் கனவுகள் நனவாகும். தங்கு தடைகள் தானாக விலகும். பிரச்சினைகளாலும், பிறரின் சூழ்ச்சிகளாலும் செய்வீர்கள்.

**உச்ச புதனின் சஞ்சாரம்!**

புதன் இதுவரை சிம்மதத்தில் சஞ்சரித்து வந்தார். ஒக்டோபர் 4ஆம் திகதி கன்னி ராசிக்கு வந்து உச்சம் பெறுகின்றார். 6 இற்கு அதிபதி உச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல என்றாலும் குருவோடு இணைந்திருப்பதால் கெடுபலன்கள் குறைவாக இருக்கும். உத்தி




யோகத்தில் எதிர்பார்த்த மாற்றங்கள் வந்து சேரலாம். எதிரிகளின் தொல்லை குறைய எடுத்த முயற்சி வெற்றி பெறும். ஆரோக்கியத் தொ

த்தில் பதிவதால் பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும். நிலையான வருமானம் கிடைக்கும். வீடு, வாகனம், பராமரிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். இம்மாதம் நவராத்திரி நாட்களில் விரதமிருந்து ஒன்பது நாட்களிலும் அம்பிகையை வழிபாடு செய்து இன்பங்களை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிக்கும் மாதமாகும். ராசிநாதன் பலம் பெற்றிருப்பதால் உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள். பொன், பொருள் சேர்க்கை உண்டு. உறவினர்களின் உதவி கிடைக்கும். பிரிந்து சென்றவர்கள் வந்திணையும் வாய்ப்பு உண்டு. கணவன்-மனைவிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும். சொத்துக்கள் வாங்கும் யோகமும் உண்டு. குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. நவராத்திரி நாட்களில் அம்பிகையை வழிபட்டால் ஆதரவுக்கரம் நீட்டுபவரகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

## நினைத்தது நிறைவேறும் நேரம்!

வேலை இழந்தவர்களுக்கு வேலை கிடைக்கும்.

வெளிநாட்டிலிருந்து வரும் தகவல் வியக்கச் செய்யும். கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடு அகலும். பணப்புழக்கம் அதிகரிக்கும். இந்த நேரத்தில் மனதில் நினைத்ததை உடனே

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

ல்லை அகலும். பணி நிரந்தரம் பற்றிய நல்ல தகவல் ஒரு சிலருக்கு வந்து சேரும். தொழில் செய்தவர்களுக்கு திடீரென இடமாற்றம் வந்து சேரலாம்.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**


ஒக்டோபர் 14ஆம் திகதி விருச்சிகத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். அதன பார்வை தனஸ்தான

பிரதோஷ வழிபாடு உங்களுக்கு பெருமைகளைச் சேர்க்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உயர் பதவி கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு.

**பணத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் நாட்கள்:**

செப்டெம்பர்: 22, 23, 26, 27

ஒக்டோபர: 8, 9, 13, 14



*அதிகாரத்திற்கு கட்டுப்படாமல் அன்பிறகு கட்டுப்படும் ரிஷப ராசி நேயர்களே!*

புரட்டாசி மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே சகாய ஸ்தானாதிபதி சந்திரன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். எனவே வருமானம் திருப்திகரமாக இருக்கும். தர்ம காரியங்களிலும் நாட்டம் செல்லும்.

அஷ்டமத்தில் செவ்வாய் அடியெடுத்து வைக்கின்றாரே என்று கவலைப்பட வேண்டாம். ஆரோக்கியத் தொல்லை ஏற்பட்டாலும் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். இதற்கென்று உரிய பரிகாரங்களைச் செய்வதன் மூலம் நற்பலன்களை வரவழைத்துக் கொள்ள இயலும். குரு வீட்டில் செவ்வாய் சஞ்சரிப்பதால் கெடுபலன்கள் குறைவாகவே இருக்கும்.

குரு உங்கள் ராசியைப் பார்ப்பது யோகம் தான். குரு பார்வைக்கு பலன் அதிகம் உண்டு. எனவே இதுவரை நடைபெறாதிருந்த ஒருசில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். சம்பள உயர்வு பற்றிய சந்தோஷத் தகவல் வந்து சேரும். வெளிநாட்டிலிருந்து வரும் தகவல் அனுகூலமானதாக இருக்கும்.

வாகன மாற்றம் செய்ய உகந்த நேரமிது. ராசிநாதன் மாதத் தொடக்கத்திலேயே நீச்சம் பெற்றிருக்கின்றார். இருந்தாலும் பரிவர்த்தனை பெற்ற கிரகத்தோடு இணைந்திருப்பதால் நீச்ச பங்க ராஜயோகம் உருவாகின்றது. எனவே, துலாத்தில் சுக்ரன்சஞ்சரிக்கும்பொழுது தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் குதூகலம் கூடும். ஆடை, ஆபரண சேர்க்கையும், வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள். அதிகாரப் பதவியில் உள்ளவர்களால் அனுகூலங்கள் உருவாகும்.

பொதுவாக ராசிநாதன் சுக்ரன் என்றாலே பெண் தெய்வ வழிபாடுகள் தான் பெருமை சேர்க்கும் என்பார்கள். அதற்கு ஏற்ற விதத்தில் இந்த மாதத்தில் நவராத்திரி விழா வருகிறது. எனவே அன்னை

ஆரோக்கியம் சீராகும். கடந்த காலத்தில் தடைப்பட்டுக் கொண்டிருந்த காரியங்கள் எல்லாம் இப்பொழுது நடைபெறும். இடையில் வந்த குறுக்கீடு சக்திகள் இப்பொழுது அகலும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வந்து சேரும். சொத்துப்பிரச்சினைகள் சுமுகமாக முடியும். நூதனப்பொருள் சேர்க்கை உண்டு. உத்தி




யோகத்தில் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். வழக்குகள் சாதகமாக முடியும்.

யங்களைச் செய்வது நல்லது.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 14ஆம் திகதி விருச்சிக ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக மேலும் நற்பலன்களைக் காண்பீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அதிகார வர்க்கத்தில் உள்ளவர்களால் அனுகூலங்கள் கிடைக்கும். வங்கிச் சேமிப்பு உயரும். உங்களைத் தூற்றியவர்களே உங்களைப் போற்றுவர். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் வந்து கொண்டே இருக்கும். இம்மாதம் பிரதோஷ வழிபாடு பெருமை சேர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் ஆரம்பத்தில் செலவுகள் கூடுதலாக இருக்கும். அதன் பிறகு படிப்படியாக வருமானங்கள் வந்து சேரும். அடிப்படை வசதிகளை பெருக்கிக் கொள்வீர்கள். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடும். கற்றுக்கொண்ட கைத்தொழிலால் உதிரி வருமானங்கள் பெருகும். பிள்ளைகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். புதனின் பெயர்ச்சிக்குப் பிறகு மிகுந்த யோகம் உண்டு. பூர்வீக சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தாயின் தனவரவு தக்க விதத்தில் வந்து

## குரு பார்வையால் குழப்பங்கள் அகலும்!

பராசக்தியை அருகில் இருக்கும் ஆலயத்திற்குச் சென்று 9 நாட்களும் வழிபட்டு ஒளிமயமான எதிர்காலத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!**

இதுவரை நீச்சம் பெற்றுச் சஞ்சரித்து வந்த சுக்ரன் செப்டெம்பர் 19ஆம்திகதி துலாம் ராசிக்குள் அடியெடுத்து வைக்கின்றார். அது அவருக்குச் சொந்த வீடாகும். சுக்ரன் பலம் பெறுவது யோகம் தான். எனவே உடல்

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஒக்டோபர் 4ஆம் திகதி கன்னி ராசியில் புதன் உச்சம் பெறுகின்றார். தனாதிபதி உச்சம் பெறும் நேரம் மிகுந்த அற்புதமான நேரமாகும். தொழிலும் வெற்றி நடைபோடும். உதிரி வருமானமும் வந்து சேரும். பிள்ளைகளின் உத்தியோக முயற்சிகளில் அனுகூலம் கிடைத்து வேலைக்குச் சேர்ந்து சம்பளத்தையும் உங்கள் கரங்களில் கொடுப்பர். இதுபோன்ற நேரங்களில் சுபவிர

சேரும். பிள்ளைகளின் திருமண முயற்சி வெற்றி பெறும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். செயற்பாடுகளில் வெற்றி கிடைக்க ஆதிபராசக்தி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பணத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:**

செப்டெம்பர்: 17, 18, 23, 24, 28, 29

ஒக்டோபர் : 11, 12, 15, 16

(தொடரும்)



அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும்

# யாழ்.கம்பன் விழா-2016

**இன்று 18.09.2016 (ஞாயிற்றுக்கிழமை)**
**(நான்காம் நாள் நிகழ்வு)**

**காலை நிகழ்வு 9.30 மணி**

(கம்பன் கோட்டம் நல்லூர்)

மங்கல விளக்கேற்றல்: திரு.இரா.ரவீந்திரன்
(முகாமையாளர், யாழ். வீரகேசரி)

கடவுள் வாழ்த்து: செல்வி பா.தரங்கிணி

தலைமையுரை: பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

தொடக்கவுரை: திரு.க.அருந்தவபாலன்
(ஓய்வுபெற்ற அதிபர், டிறிபேர்க் கல்லூரி)

**கவியரங்கு**

தலைவர்:
கவிஞர் சி.சிவகுமார்

பொருள்:
“ஆ! எங்கள் கம்பனது அற்புதமாம் விருத்தம் போல் பா வடிவம் பலவெடுத்து படும்பாட்டை உரைக்கிறோம்...”

அகவற்பா – த.நாகேஸ்வரன்
சந்தப்பா – நாக.சிவசிதம்பரம்
சிந்துப்பா – த.ஜெயசீலன்
குறும்பா – ந.விஜயசுந்தரம்
புதுப்பா – த.சிவசங்கர்
வெண்பா – ஶ்ரீ.பிரசாந்தன்

**மாலை நிகழ்வு 4.30 மணி**

(ஶ்ரீ துர்க்காதேவி மணி மண்டபம் நல்லூர்)

மங்கல இசை: திரு.பி.ரஜீந்திரன் குழுவினர்

மங்கல விளக்கேற்றல்: திரு.சி.வெற்றிவேலாயுதம்
(நிர்வாக இயக்குநர், வலம்புரி)

கடவுள் வாழ்த்து: திருமதி. அ.சுகன்யா

தலைமையுரை: திரு. தெ.ஈஸ்வரன்
(தலைவர், கொழும்புக் கம்பன் கழகம்)

தொடக்கவுரை: கௌரவ த.குருகுலராஜா
(கல்வி அமைச்சர், வடமாகாண சபை)

**வழக்காடு மன்றம்**


நீதி ஆயம்:
கம்பவாரிதி இ.ஜெயராஜ்
கலாநிதி ஆறு. திருமுருகன்
திரு.ந.விஜயசுந்தரம்

வழக்கு
“குற்றக்கூண்டில் கும்பகர்ணன்”

| தொடுப்போர் | மறுப்போர் |
|---|---|
| • அரங்க. இராமலிங்கம் | • இரா. சண்முகவடிவேல் |
| • தி.வேல்நம்பி | • ஶ்ரீ. பிரசாந்தன் |

(இ) அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்



வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள எச்.ஏ.ஏ சரத்குமார கடமையை பொறுப்பேற்றுள்ளார். கடந்த 15 ஆம் திகதி வியாழக்கிழமை காங்கேசன்துறை பகுதியில் உள்ள அவரது அலுவலகத்தில் சர்வமத தலைவர்களின் ஆசிர்வாதத்துடன் கடமையேற்றுக்கொண்டார். வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், உள்ளிட்ட பலர் புதிய பொலிஸ்மா அதிபரை வரவேற்பதற்காக வட பகுதியில் இருந்து பொலிஸ் உயரதிகாரிகள் பலர் வருகை தந்திருந்தனர். (படங்கள்:-சாளின், மகாலிங்கம்)

## ஓய்வுபெற்ற ஊழியருக்கான சந்திப்பு

ஓய்வுபெற்ற ஊழியர் நலன்களில் இதுவரை இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாகவும் இனிமேல் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றியுமான கலந்துரையாடல் ஒன்று இன்று 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக ஊழியர் பொது அறையில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கணனிப் பயிற்சி நெறிகள்

கரவெட்டி பிரதேச செயலக விதாதாவள நிலையத்தில் ஐப்பசி மாதத்தில் பின்வரும் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் பங்குபெற விரும்புவோர் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் கரவெட்டி பிரதேச செயலக விதாதாவள நிலையத்தில் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ள முடியுமென பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். கணனி வலையமைப்பு பயிற்சிநெறி, கணனி வன்பொருள் பயிற்சி நெறி என்பன இடம்பெறவுள்ளன. (இ)


**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார் ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N. குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத்தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

தினசரி 8 மணி முதல் 6 மணி வரை

**நாதன் இன்**
394 1/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி)

072 681 6681, 076 557 5394


## பட்டிமன்றம்

மல்லாகம் நீலியம்பனை பிள்ளையார் ஆலய பூங்காவன சிறப்பு நிகழ்வாக பண்டிதர் சைவப்புலவர் பொன். சுகந்தன் தலைமையில் யாழ். பட்டிமன்றக் குழுவினர் வழங்கும் சிறப்புப் பட்டிமன்றம் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணியளவில் இடம்பெறும். “அன்பே சிவம் என்பர். அத்தகைய அன்பு இன்று அருகி வருகிறதா பெருகிவருகிறதா?” எனும் தலைப்பில் இப் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது. (இ-3)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2ம்
கி.பா:35
உயரம்: 175 CM
தகைமை/தொழில்:கலைமாணி (இத்தாலி)
எதிர்பார்ப்பு: வெளிநாடு PR உள்ளவர்
தொ.இ: B/6286

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரம் 1ம்
கி.பா: 43
உயரம்: 5’3"
தகைமை/தொழில்: பொறியியல் பட்டதாரி சிங்கப்பூர் (அரச)
தொ.இ: B/6290

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 4ம்
கி.பா: 26
உயரம்: 5’8"
தகைமை/தொழில்:O/L (விவசாயம்)
எதிர்பார்ப்பு: அரச தொழில் விரும்பத்தக்கது
தொ.இ: B/6291

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மூலம் 2ம்
கி.பா: 8 (சூரி செவ் 3இல்)
உயரம்: 5’4"
தகைமை/தொழில்:BSc, MSc Project Officer (அரச)
தொ.இ: B/6292

**மணமகன் தேவை**

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பரணி 2ம்
கி.பா: 18.25
உயரம்: 5’
தகைமை/தொழில்:O/L தையல் சொந்தம்
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: G/2013

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மகம் 4ம்
கி.பா: 34.75 செவ் 7 இல்
தகைமை/தொழில்O/L கணனி (அச்சகம்)
தொ.இ: G/2020

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: கேட்டை 2ம்
கி.பா: 10.5 செவ் 2 இல்
உயரம்: 5’2"
தகைமை/தொழில்: ஆசிரியர்
எதிர்பார்ப்பு: சைவ போசனம் மிக முக்கியம்
தொ.இ: G/2024

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூரம் 3ம்
கி.பா: 62 (சூரிசெவ் 1 இல்)
உயரம்: 5’
தகைமை/தொழில் பிரான்ஸ் NOT PR
எதிர்பார்ப்பு: A/L
தொ.இ: G/2031

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதையும் அறியத்தருகின்றோம்)



## கூறுவிலைக்கான கேள்வி கோரல் கால நீடிப்பு தொடர்பானது

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான வாடியடி எரிபொருள் நிலைய கட்டடத்திற்கு கீழ் காண் விபரப்படியான வேலைகளுக்கு கேள்வி கோரப்படுகின்றது.

1. மின்னிணைப்பு வேலைகள்
2. வர்ணம் பூசுதல்
3. நீர்க்குழாய் பொருத்துதல்
4. கூரை வேலை (கனப்பி)
5. கண்ணாடிப் பிற்றிங் (அலுமினியம்)
6. J.C.B வேலை ஒரு மணித்தியாலயத்திற்காகிய கூலி எவ்வளவு
7. 3/4 சல்லிக்கல் ஒரு டிப்பர் (03 கியூப்)
8. பூச்சு மணல் உழவு இயந்திர சுமை (3/4 கியூப்)

மேற்படி வேலைகளுக்கு பொருத்தமான ஒப்பந்தகாரர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இவ் வேலைகளுக்கான மேலதிக விபரங்களை கிழமை நாட்களில் காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 5 மணிவரையும் பார்வையிடலாம் என்பதனை அறியத்தருகின்றோம். இதற்கான கூறுவிலைகள் 18.09.2016 ஆம் திகதி தொடக்கம் 23.09.2016ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் யாவும் மூடிய தபால் உறையில் என்ன வேலைக்கான விண்ணப்பம் என குறிப்பிட்டு தலைவர், பூநகரி, பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், வாடியடி, பூநகரி எனும் முகவரிக்கு 23.09.2016 ஆம் திகதிக்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவவே அனுப்பி வைத்தல் வேண்டும். மேலதிக விபரங்கள் தேவைப்படின் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| து.இரத்தினசிங்கம் | | ம.ஜெயகுமார் |
| தலைவர் | | பொதுமுகாமையாளர் |
| 077 246 3027 | (C-5800) | 077 816 3029 |

## உரமானியக் கொடுப்பனவுக்கு உரிய ஆவணங்கள் வேண்டும்

ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள விவசாயிகளுக்கான 2016- 2017 ஆம் ஆண்டு காலபோக உரமானிய கொடுப்பனவுக்கான விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்ய வருகை தரும் விவசாயிகள் தம்முடன் எடுத்து வரவேண்டிய ஆவணங்கள் தொடர்பான விபரங்களை ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

உரமானிய கொடுப்பனவுக்கான விண்ணப்பப் படிவங்கள் தொடர்பான கால அட்டவணை ஏற்கனவே விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் விண்ணப்பப்படிவங்களை நிரப்ப வரும் போது, தேசிய அடையாள அட்டையின் பிரதி, கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம், காணி உறுதிப் பத்திரத்தின் நிழற்பிரதி, அவ்வாறு இல்லாவிடின் பிரதேச செயலாளரிடம் விண்ணப்பித்ததற்கான பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி, இலங்கை வங்கி அல்லது மக் கள் வங்கி கணக்குப் புத்தகத்தின் நிழற்பிரதி ,நிலவரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின்பிரதி ஆகியவற்றுடன் விவசாயிகள் தமக்கான கூட்டங்கள் நடைபெறும் திகதியில் தவறாது சமுகம் தருமாறு அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5-15)

## இராணுவ கட்டுப்பாட்டிலிருந்த காணி பிரதேச செயலகத்திடம் ஒப்படைப்பு மூட்டை கட்டியது படைத்தரப்பு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலக பிரிவிலுள்ள மல்லாவி நகரப் பகுதியில் பேருந்து நிலையத்திற்கு அருகில் இயங்கி வந்த இராணுவத்தினரின் குடிபான விற்பனை நிலையம் மற்றும் ஜெனசல கணனி பயிற்சி நிலையம் என்பன மூடப்பட்டு அங்கிருந்து அனைத்துப் பொருட்களையும் அகற்றியுள்ளதுடன் அவை அமைக்கப்பட்டிருந்த காணியினை துணுக்காய் பிரதேச செயலகத்திடம் கையளித்துள்ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழிருந்து வந்த மேற்குறித்த பகுதியில் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர், யுவதிகளுக்கான ஜெனசல எனும் கணனிப் பயிற்சி நிலையம் இயங்கி வந்தது.

அத்தோடு குளிர்பான விற்பனை நிலையம் என்பவற்றுடன் இயங்கி வந்த இராணுவ காவலரண் என்பன முற்றாக அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளதுடன் அவை அமையப் பெற்றிருந்த காணியினை துணுக்காய் பிரதேச செயலகத்தரிடம் கையளித்துள்ளனர். (இ-5-15)

பாதிக்கப்பட்ட **122** கடைகளில்

# 90 கடைகள் எரிந்து நாசம்

(பரந்தன்) ------------------------

**கிளிநொச்சி பொதுச் சந்தையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பாரிய தீ அனர்த்தத்தினால் 122 இற்கும் மேற்பட்ட கடைகள் பாதிக்கப்பட்டுள்ளதோடு 90 கடைகள் முற்றுமுழுதாக எரிந்து சாம்பலாகியுள்ளன.**



கடந்த கால யுத்தத்தினால் தமது வர்த்தக உடைமைகளையும் சொத்துக்களையும் முற்றுமுழுதாக இழந்து எவ்வித நட்டஈடுகளும் கிடைக்கப்பெறாது வங்கியிலிருந்து கடன் பெற்று தமது வியாபார நடவடிக்கைகளை பல சிரமங்களுக்கு மத்தியில் கட்டியெழுப்பி வரும் நிலையில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனால் வர்த்தக உரிமையாளர்களின் சொத்துக்கள் அழிவடைந்ததோடு வாழ்வாதாரம் சிதைக்கப்பட்டுள்ளது.

எனவே இவர்களுக்கு உதவுவதற்கு முன்வர வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தினை மீளக்கட்டியெழுப்புவதற்கு கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளது.

இதனடிப்படையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக விசேட வாழ்வாதாரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கிளிநொச்சி மாவட்டத்தில் பணி புரியும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் பணி புரியும் உத்தியோகத்தர்கள் தமக்கான ஒரு நாள் வேதனத்தினை மனமுவந்து வழங்க முன்வர வேண்டும் எனவும், குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தொண்டு நிறுவனங்கள் உதவுவதற்கு முன்வருதல், புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் உதவுவதற்கு முன்வருதல், கடன் வழங்கிய வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் கடனை மீளப் பெறும் செயற்பாடுகளை தாமதித்தலும் வட்டியினை விலக்களித்தலும் போன்ற நடவடிக்கைகளினால் வர்த்தகர்களுக்கு ஒத்துழைப்பை வழங்க முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வழங்கப்படும் உதவிகளை சேவைச் சந்தை வர்த்தக சங்கத்தின் ஊடாக வழங்க முடியும் என கிளிநொச்சி பிரஜைகள்குழுவினால் இக்கோரிக்கையானது முன்வைக்கப்பட்டுள்ளது. (இ-5-312-277)




## தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு

(மல்லாவி)

தியாகதீபம் திலீபன் நினைவு நாள் நிகழ்வு இன்று கிளிநொச்சியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என ஜனநாயக போராளிகள் கட்சி தெரிவித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஜனநாயகப் போராளிகள் கட்சியும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள குறித்த நினைவேந்தல் நிகழ்வு கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி ஏ-9 வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் குறித்த நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புகள், பிரதேச மக்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறும் நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்ள உள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5-15-312)

## காலபோக நெற்செய்கைக்கான கூட்டங்களின் கால அட்டவணை

(மல்லாவி)

துணுக்காய் கமநலசேவைக்குட்பட்ட சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் 2016- 2017 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கைக்கான கூட்டங்கள் நடைபெறவுள்ள கால அட்டவணையை துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.பிரபாகரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

நாளை மறுதினம் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேறாங்கண்டல் கமக்கார அமைப்பின் கீழ் உள்ள கரம்பைக் குளம் விவசாயிகளுக்கான கூட்டம் தேறாங்கண்டல் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு அனிஞ்சியன் குளம் கமக்கார அமைப்பின் கீழ் உள்ள சொக்கன் குளம், அனிஞ்சியன் குளம் ஆகிய குளங்களின் கீழ் உள்ள விவசாயிகளுக்கு அனிஞ்சன் குளம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு துணுக்காய் கமக்கார அமைப்பின் கீழ் உள்ள முருங்கன் குளம், துணுக்காய் குளம் ஆகிய குளங்களின் கீழ் உள்ள விவசாயிகளுக்கு துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறும்.

இதேவேளை எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உயிலங்குளம் கமக்கார அமைப்பின் கீழ் உள்ள மணல் குளம், உயிலங்குளம் புதுக்குளம், கொல்லன்குளம் ஆகிய குளங்களின் கீழ் உள்ள விவசாயிகளுக்கு உயிலங்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 11.30 மணிக்கு புத்துவெட்டுவான் கமக்கார அமைப்பின் கீழ் உள்ள மணல்குளம் விவசாயிகளுக்கு புத்துவெட்டுவான் காளிகோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு ஆலங்குளம் கமக்கார அமைப்பின் கீழ் உள்ள வேட்டையடைப்பு, ஆலங்குளம், பட்டங்கட்டி ஆகிய குளங்களின் கீழ் உள்ள விவசாயிகளுக்கு ஆலங்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது எனவும் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தமது பகுதி குளங்களுக்கான காலபோக கூட்டம் நடைபெறும் நாளன்று தவறாது சமுகம் தருமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5-15)

## பூநகரி பிரதேச செயலக கட்டடம் டிசெம்பரில் திறப்பு

கிளிநொச்சி. பூநகரி பிரதேச செயலக புதிய கட்டடப் பணிகளை எதிர்வரும் நவம்பர் மாதம் நிறைவுசெய்து டிசெம்பரில் திறப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக பூநகரிப் பிரதேச செயலாளர் சந்திரன் கிருஷ்ணேந்திரன் தெரிவித்துள்ளார்.

பூநகரிப் பிரதேச செயலகத்தின் கட்டடப் பணிகள் 2010 இல் ஆரம்பிக்கப்பட்டன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் என்ரிப் திட்டத்தின் கீழ் இவ் வேலைகள் தொடங்கப்பட்ட போதிலும் தொடக்கப் பணியுடன் மூன்றாண்டுகளுக்கு மேலாக கட்டடப்பணிகள் முன்னெடுக்கப்படாமல் தடைப்பட்டிருந்த நிலையில் நிதி, திறைசேரிக்குத் திரும்பியிருந்தது.

இந் நிலையில். கடந்த ஆண்டு கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மேற்கொண்ட முயற்சிகள் காரணமாக கிடைக்கப்பெற்ற பதினைந்து மில்லியன் ரூபாய் நிதியில் தற்போது பிரதேச செயலகக் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பூநகரி வாடியடியில் இக் கட்டடப் பணிகள் நடைபெறுகின்றன. (இ-5)

## 5 இராணுவத்தினர் உட்பட பலர் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச் சந்தையில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு ஏற்பட்ட பாரிய தீ விபத்துக் காரணமாக 90 கடைகள் முற்றாக எரிந்து அழிந்துள்ளன.

இத்தீயை கட்டுப்படுத்த முயன்றவேளையில் 5 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.

இராணுவத்தின் நீர்த் தாங்கிகளும் சேர்ந்து தீயை அணைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டன.

இதேவேளை கொக்காவில் இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தின் தீ அணைக்கும் வாகனமும் கொண்டுவரப்பட்டு கடும் போராட்டத்துக்கு மத்தியில் தீ தொடர்ந்தும் பரவாது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்ட இராணுவத்தினரில் ஐந்து பேர் தீக் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதேவேளை உடைமைகளை பாதுகாக்க முற்பட்ட வர்த்தகர்கள், பொதுமக்கள், பொலிஸார் உள்ளிட்ட பலரும் தீக் காயங்களுக்கு உள்ளாகினர். (இ-5)

ஏர் ஏறாது; காளை இழுக்காது; எனினும் அந்தப் பாறை பிளந்து பயன்விளைவிப்பான் என்னுரரான். — மகாகவி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கிளிநொச்சியில் எரிந்த கடைகளுக்கு இழப்பீடுகளைக் கொடுங்கள்

வீழ்ந்த தமிழன் கைஊன்றி தலைநிமிர்த்தி எழும்ப முற்படும்போதெல்லாம் அவனை ஒரு சக்தி அமிழ்த்தி வீழ்த்தி விடுவதான நிலைமையை எம்மால் உணரமுடிகிறது.

இந்த வகையில் போரினால் பெரும் பாதிப்பைச் சந்தித்த கிளிநொச்சி வர்த்தகர்கள் மீண்டும் தொடங்கும் மிடுக்கு போல வெற்றுநிலத்திலிருந்து தங்கள் வர்த்தக முயற்சிகளை ஆரம்பித்த நிலையில், நேற்று முன்தினம் இரவுப்பொழுதில் கிளிநொச்சிச் சந்தையில் உள்ள நூறு வர்த்தக நிலையங்கள் எரிந்து தீக்கிரையாகின என்ற செய்தி எங்கள் இதயத்தை எரித்து விட்டன.

தீ விபத்து எப்படி ஏற்பட்டது? என்பது விசாரணைகள் மூலம் கண்டறியப்பட வேண்டும். குறிப்பாக தீய நோக்குடன் இச் சம்பவம் நடந்ததா? அல்லது தீ விபத்தை ஏற்படுத்திய காரணி என்ன என்பது கண்டறியப்படுவது அவசியம்.

இதற்கு அப்பால் வன்னிப் பெரும் நிலப்பரப்பில் நடந்த யுத்தம் அப்பகுதி மக்களை பெரும் பாடுபடுத்திவிட்டது.

தேடிய தேட்டம், செய்த தொழில் முயற்சிகள் அனைத்தும் அடியோடு நிர்மூலமாக்கப்பட்டதுடன் உறவுகளின் உயிரிழப்பு; அங்கவீனத்தின் பாதிப்பு என்ற துன்பங்களோடு; எப்படியாயினும் வாழ வேண்டும் என்ற நோக்கோடு எத்தனையோ பாடுகளின் மத்தியில் வர்த்தக நிலையங்களை ஆரம்பித்து தொழில்செய்கின்ற வேளையில் ஓர் இரவுப் பொழுதில் உங்கள் கடை முற்றுமுழுதாக எரிந்து விட்டது என்பதே மறுநாள் செய்தியாக இருக்குமாயின், இதனை விட வேதனை எதுவாக இருக்க முடியும்?

நம்பிக்கையோடு ஆரம்பிக்கப்பட்ட தொழில் முயற்சிகளுக்கு இப்படியொரு பேராபத்து ஏற்படுமாக இருந்தால் அந்த மக்களால் ஒருபோதும் மீள முடியாது.

கருகிப்போன தங்கள் வர்த்தக நிலையங்களைப் பார்த்து இனி நாம் என்ன செய்யமுடியும்? எங்கள் பிள்ளைகளின் வாழ்வு எப்படியாகும்? நாம் பட்ட கடனை எப்படி அடைக்கப்போகிறோம் என்ற ஏக்கத்தோடு எரிந்து போன தங்கள் முதலீட்டைப் பார்த்து கண்ணீர் வடிக்கின்றவர்களை ஆற்றுப்படுத்துவது ஒவ்வொருவரினதும் தலையாய கடமை.

தீ விபத்தினால் இழந்துபோன அவ்வளவு தொகைக்குமான இழப்பீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைத்தாக வேண்டும்.

இது விடயத்தில் வடக்கு மாகாண சபை எந்த விதமான காலதாமதங்களுமின்றி அவசர அவசரமாக் மாகாண சபையைக் கூட்டி ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வது எவ்வாறு என தீர்மானிக்க வேண்டும்.

அந்தத் தீர்மானம்; எங்களுக்கு ஒரு அரசு இருந்ததால் நாங்கள் பாதுகாக்கப்பட்டோம் என்ற மன நிலையை பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதாக அமையும்.

அதேவேளை கிளிநொச்சியில் ஏற்பட்ட தீ விபத்தை மத்திய அரசுக்குத் தெரியப்படுத்துவதுடன் சம்பவ இடத்தை ஜனாதிபதி அல்லது பிரதமர் அல்லது முக்கிய அமைச்சர்கள் பார்வையிடுவதற்கும் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வதற்கும் மத்திய அரசின் உதவித் தொகையைப் பெறுவதற்குமான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுவது காலத்தின் தேவை.

இவற்றின் மத்தியில் இது போன்ற தீ விபத்துச் சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்கும் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் தீ விபத்து ஏற்படும் பட்சத்தில் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான தற்காப்பு நடவடிக்கைகளும் செய்யப்படுவது அவசியமாகும்.

இதற்காக மாவட்டங்கள் தோறும் நகரங்கள் தோறும் வர்த்தக மையங்கள் தோறும் தீயணைப்புப் படைப்பிரிவை அந்தந்தப் பிரதேச சபைகளில் ஆரம்பிப்பது அவசியம் என்பது உணரப்பட வேண்டும்.

இச் சந்தர்ப்பத்தில் தங்கள் தொழில் நிலையங்களை தீயில் பறி கொடுத்தவர்களை ஆறுதல்படுத்த அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த நாம் யாரும் தவறிவிடக் கூடாதுஎன்பது நம் தாழ்மையான வேண்டுதல் ஆகும்.

# 'ஒரு மணிநேரம் எழுந்து நிற்போம்'

## 10 ஆம் திகதி கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தால் எதிர்வரும் 10ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள 'ஒரு மணிநேரம் எழுந்து நிற்போம்' என்னும் கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரனால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் அனைத்து அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அரச ஊழியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் யுத்தத்தின் பின்னர் ஏற்படும் உயிர் அழிவுகள் அளவு கடந்து செல்கின்றன. இதற்கான முழுக்காரணமும் சட்டம் ஒழுங்கு சீராக பேணப்படாமை, அளவுக்கு அதிகமான போதைப் பாவனை. இவை இரண்டும் கட்டுக் கடங்காமல் எம்மினத்தில் உயிர் அழிவுகள் பெருகிச் செல்கின்றன.

யுத்தத்தால் அழிவடைந்த எம் இனம் தொடர்ந்தும் அழியும் நிலைமைகளை நாம் வேடிக்கை பார்க்க முடியாது.

எம் இனத்தில் அங்கீகரிக்கப்பட்ட முழு உரிமையும் உள்ள உயிர் காப்புப் பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துள்ள வைத்தியர்கள் அஞ்சும் அளவுக்கு நிலைமை மோசமடைந்து செல்கின்றது. அதற்கு அவர்களே முழுச் சாட்சிகள்.

நாளுக்குநாள் ஒவ்வொரு உயிர் இழப்புகளையும் கண் கூடாகப் பார்க்கும் வைத்தியர்களால் முன்னெடுக்கப்படும் கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு நாம் முழு ஆதரவையும் வழங்க வேண்டும்.

இது எமது கட்டாய பொதுவான, தனிப்பட்ட அவசியமான பங்களிப்பாகும்.

ஆகையால் எதிர்வரும் ஒக்டோபர் 10 ஆம்திகதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் பாடசாலைகளுக்குச் சென்று முற்பகல் 10 மணிமுதல் முற்பகல் 11 மணிவரை பாடசாலைநுழைவாயிலில்அனைவரும் ஒன்றுகூடி அமைதியான முறையில் 'போதை ஒழிப்பு' 'சட்டத்தை மீறுவோர் மீது நடவடிக்கை எடுத்தல்' 'வீதி ஒழுங்கை முறையாகப் பின்பற்றுதல்' போன்ற வாசகங்களுடன் கவனயீர்ப்பில் ஈடுபடுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுக்கின்றது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை யாழ். பிரதேசத்தில மாதனைப்பிரதேசம், கறுக்காய் பிரதேசம், வாழைத் தோட்டம்ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் உயிலங்குளத்திலிருந்து அடம்பன் வரைக்கும், இத்திக் கண்டல், வேட்டையன் முறிப்பு, மினுக்கன், பாப்பாமோட்டை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் கரவெட்டிக்கு இரண்டாம் இடம்

(கரணவாய்)

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் நடத்தப்படும் 2015இற்கான தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் அரச துறையில் பிரதேச செயலகங்களிற்கு இடையே வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகம் தேசிய மட்டத்தில் 2ஆம் இடத்தை பெற்றுக்கொண்டது.மற்றும் 2014ஆம் ஆண்டிற்கான தேசிய போட்டித் தொடரிலும் 2ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. (இ-60)

# 'முன் மதியோடு செயற்பட முயல்வோம்'

இன்று எமக்குத் தரப்படும் பைபிள் பகுதி இயேசு கூறிய நீதியற்ற வீட்டுப் பொறுப்பாளர் உவமானக் கதையாகும்: செல்வர் ஒருவருக்கு வீட்டுப் பொறுப்பாளர் ஒருவர் இருந்தார். அவர் தம் தலைவரின் உடைமைகளைப்பாழாக்கியதாக அவர்மீது பழி சுமத்தப்பட்டது. தலைவர் அவரைக் கூப்பிட்டு, 'உம்மைப்பற்றி நான கேள்விப்படுவது என்ன? உம் பொறுப்பிலுள்ள கணக்கை ஒப்படையும். நீர் இனி வீட்டுப் பொறுப்பாள ராய் இருக்க முடியாது" என்று அவரிடம் கூறினார். அந்த வீட்டுப் பொறுப்பாளர், 'பிறர் என்னைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும் என எனக்குத் தெரியும்" என்று அவர் தமக்குள்ளே சொல்லி பின்பு அவர் தம் தலைவரிடம்


## பரமபிதா காட்டிய பாதை

கடன்பட்டவர்களை ஒவ்வொருவராக வரவழைத்தார். முதலாவது வந்தவரிடம், 'நீர் என் தலைவரிடம் எவ்வளவு கடன்பட்டிருக்கிநீர்?" என்று கேட்டார். அதற்கு அவர், 'நூறு குடம் எண்ணெய்" என்றார். வீட்டுப் பொறுப் பாளர் அவரிடம், 'இதோ உம் கடன் சீட்டு உட்கார்ந்து ஐம்பது என்று உடனே எழுதும்" என்றார். பின்பு அடுத்தவரிடம், 'நீர் எவ்வளவு கடன்பட்டிரு க்கிநீர்?" என்று கேட்டார். அதற்கு அவர், 'நூறு மூடை கோதுமை" என்றார். அவர், 'இதோ, உம் கடன் சீட்டு எண்பது என்று எழுதும்". என்றார். நேர்மையற்ற அந்த வீட்டுப் பொறுப்பாளர் முன்மதியோடு செயற்பட்டதால், தலைவர் அவரைப் பாராட்டினார். இவ்வாறு உவமை கதை தொடர்கிறது. இயேசு கூறிய உவமைக்கதைகளுள் புரிந்து கொள்ள மிகவும் கடினமான ஓர் உவமை இது என்று விவிலிய ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

மேற்படி செல்வரின் இந்தப் போக்கு, இரு கோணங்களில் நம்மைச் சிந்திக்க வைக்கிறது. ஒன்று அவரது மென்மையான மனதைக் காட்டுவதாக உள்ளது. மற்றையது அவருக்கும் வீட்டுப் பொறுப்பாளருக்கும் இடையே உருவாகியிருந்த ஆழ்ந்த நம்பிக்கை உறவைக் காட்டுவதாக உள்ளது. இது இரக்கம் நிறைந்த விண்ணகத் தந்தையின் மன்னிக்கும் இயல்புடன் இயல்பாகவே நேர்மையற்றவரான மனிதனின் உறவையும் படம் பிடித்துக்காட்டுவதாயுள்ளது. நேர்மையற்ற முறையில் நடந்துகொண்ட வீட்டுப் பொறுப்பாளரை அவரது தலைவர் பாராட்டுவதாகக் கூறப்படுவது அவரது விவேகத்தை அல்லது முன்மதியையே எனலாம். இயேசுவும் அவரது அறிவுத் திறனை, முன்மதியைப் எடுத்துக்காட்டி விண்ணக செல்வங்களை சேர்ப்பதற்கு விவேகத்துடன் செயற்பட வேண்டும் என்று எமக்கு கற்றுத்தருகிறார். அந்த வீட்டுப் பொறுப்பாளர் முன்மதியோடு செயலாற்றியது நமக்கு ஒரு பாடமாக அமையவேண்டும் என்பதை இயேசு சுட்டிக்காட்டுகிறார் எனலாம்.

நேர்மையற்ற செல்வத்தைக் கொண்டு உங்களுக்கு நண்பர்களைத் தேடிக் கொள்ளுங்கள். இங்கு இயேசு கூறமுனைவது: இவ்வுலக கரார்ரியங்களை சொத்துக்களை, நம்மிடத்தில் உள்ள திறமைகள், ஆற்றல்கள், பணம இவற்றைக் கொண்டு நல்ல நண்பர்களை, குறிப்பாக மறுவுலக வாழ்வுக்கான நண்பர்களைத் தேடிக் கொள்ள வேண்டும். எனவே, செல்வம் சேர்த்து வைப்பதற்கல்ல.மாறாக, இறைவனுக்காகப் பயன்படுத்துவதற்காகவே. அதை மனதில் கொள்வோம். இரண்டாவது நேர்மையற்ற செல்வத்தைக் கையாள்வதிலேயே நம்பத்தகாதவராய் இருந்தால், உண்மைச் செல்வத்தை யார் ஒப்படைப்பார்?

எனவே, நிதியை, குறிப்பாக பொது நிதியைக் கையாள்வதில் நேர்மையாகவும், வெளிப் படையாகவும் இருக்க வேண்டும். நிதியை நேர்மையோடு கையாள்பவர் மற்ற அனைத்தையும் கையாள்வதில் நம்




பிக்கைக்குரியவராய் இருப்பார்.

4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித Asterius என்ற ஆயர், 'வீட்டுப் பொறுப்பாளர்" உவமைக்கு தரும் விளக்கம், இயேசுவின் சிந்தனைகளை எதிரொலிக்கிறது:'பணம் அல்லது செல்வம், மரணத்திற்குப் பின் ஒருவருக்கு முற்றிலும் பயனற்றுப் போகின்றன. எனவே, அவை பயன்தரும் காலம் வரையில், அதாவது, இவ்வுலகில் செல்வத்தை பயன்படுத்த நம்மால் முடிந்த காலம் வரையில், அதன் சக்தியைத் தகுந்த வகையில் பயன்படுத்த வேண்

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

டும. அவற்றை முக்கிய மாக ஏழை மக்களுக்காகப் பயன்படுத்தவேண்டும். அவ்விதம் செய்தால், அந்த ஏழை மக்கள் அடுத்த உலகில் நம்மை வரவேற்கத்தயாராக இருப்பார்கள்." நேர்மையாளராய் வாழ்வோம்

# அன்னையிடம் ஆசி





(அகமதாபாத்)

பிரதமர் நரேந்திர மோடி தனது பிறந்தநாளான நேற்று குஜராத்தில் வசித்துவரும் தனது தாயார் ஹிரா பென்னின் காலில் விழுந்து வணங்கி அவரிடம் ஆசி பெற்றார்.

பிரதமர் நரேந்திர மோடி ஒவ்வொரு ஆண்டிலும் தனது பிறந்தநாளின்போது குஜராத் மாநிலம், காந்தி நகரில் தனது சகோதரருடன் வசித்து வரும் தாயார் ஹிரா பென்னை சந்தித்து அவரிடம் நல்லாசிகளை பெறுவது வழக்கம்.

அவ்வகையில், ரய்சன் பகுதியில் உள்ள தனது சகோதரர் பங்கஜ் மோடியின் வீட்டுக்கு நேற்று காலை சென்ற பிரதமர் மோடி, தற்போது 97 வயதாகும் தாயார் ஹிரா பென்னின் கால்களில் விழுந்து ஆசி பெற்றார். அவரிடம் சுமார் அரைமணி நேரம் பேசிக் கொண்டிருந்த மோடி, அங்கிருந்து புறப்பட்டு குஜராத் மாநில ஆளுநர் மாளிகைக்கு சென்றார்.

அங்கிருந்து தஹோட் மாவட்டத்துக்கு சென்ற அவர் பழங்குடியின மக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.(இ-7)

## பிரதமர் மோடிக்கு ஜெயா வாழ்த்து



பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் ஜெயலலிதா பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடிக்கு நேற்று சனிக்கிழமை 66 ஆவது பிறந்த தினமாகும்.

இதையொட்டி அவருக்கு உலகத் தலைவர்கள், இந்தியாவில் உள்ள பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், பா.ஜ.க. மூத்த தலைவர்கள் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தனர். தொடர்ந்து அவருக்கு பிறந்த நாள் வாழ்த்து குவிந்தது.

பிரதமர் மோடிக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அனுப்பியுள்ள பிறந்த நாள் வாழ்த்து செய்தியில் கூறி இருப்பதாவது.

மகிழ்ச்சியான உங்கள் பிறந்த தினத்தில், மிகச் சிறப்பான எதிர்காலத்துக்கு எனது இதயம் கனிந்த நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் மேலும் பல ஆண்டுகள் நல்ல உடல் நலத்துடன் வாழ்ந்து நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் சேவையாற்ற இறைவனிடம் பிரார்த்திக்கிறேன். இவ்வாறு அந்த வாழ்த்து செய்தியில் முதலமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார்.(இ-7)

# மசூதியில் தற்கொலைத் தாக்குதல் 5 குழந்தைகள் உட்பட 30பேர் பலி





(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் மசூதியில் ஜும்மா தொழுகையின்போது நிகழ்த்தப்பட்ட தற்கொலைப் படை தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளது.

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் நாடுகளுக்கிடையிலான எல்லைப்பகுதியில் பழங்குடியின மக்கள் அதிகமாக வசிக்கும் மொஹ்மாண்ட் என்ற குடியிருப்பு பகுதி அமைந்துள்ளது.

இப்பகுதிக்கு உட்பட்ட அம்பர் தாலுக்காவில் உள்ள மசூதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நூற்றுக் கணக்கான மக்கள் ஜும்மா தொழுகைக்கு கூடியிருந்தனர்.

பிற்பகல் 2 மணியளவில் வழிபாட்டுக்கு வந்த கூட்டத்தில் இருந்த ஒருவன் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்ததில் 15 இற்கும் அதிகமானோர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி பலியாகினர். படுகாயங்களுடன் சுமார் 40 பேர் அருகாமையில் உள்ள பஜாவுர், சர்சாடா மற்றும் பெஷாவர் நகரில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

சிகிச்சை பலனின்றிசிலர் அடுத்தடுத்து உயிரிழந்ததால் இந்தத் தாக்குதலில் 5 குழந்தைகள் உட்பட 30 பேர் பலியானதாக பாகிஸ்தான் ஊடகங்கள் நேற்று செய்தி வெளியிட்டுள்ளன.(இ-7-10)

# அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்; ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு





ஈராக் அரசாங்கம் நாட்டில் வலுப்பெற்றுள்ள ஊழலை கட்டுப்படுத்துவதற்கும், தொழில்நுட்ப வல்லமை பொருந்திய கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கும் முன்வர வேண்டும் என்று கூறி ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஈராக்கின் முக்கியமான ஒருவராக திகழும் மதகுரு Moqtada al-Sadr இன் ஆதரவாளர்களே அரசாங்கத்திற்கு எதிரான இந்த ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டுள்ளனர்.

ஈராக் தலைநகர் பக்தாத்தில் அமைந்துள்ள தாஹீர் சதுக்கத்தில் நேற்று முன தினம் வெள்ளிக்கிழமை கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் அரச நிறுவனங்களில் பரிபூரணமான ஒரு மாற்றம் தேவை என வலியுறுத்தினர்.

அரசாங்கத்தை சீரமைக்க வேண்டும் என்ற மக்களின் கோரிக்கையை இந்த அரசு அலட்சியம் செய்கின்றது. அரசியல்வாதிகளே ஊழல்களில் ஈடுபடும் போது அதை சரி செய்யும் வல்லமையை அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ள முடியாது. இதை விட இந்த அரசாங்கம் இராஜினாமா செய்துவிட்டு புதிய தொழில்நுட்ப தேர்ச்சி பொருந்திய ஒரு அரசாங்கத்தை தேர்வு செய்ய வழி அமைக்க வேண்டும். அதுவே நல்லது' என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

இதேவேளை, தலைநகரில் மாத்திரமன்றி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அரசாங்கத்திற்கு எதிரான பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் முன் வைத்த அவர்கள் ஊழல்நிறைந்த அரசியல் கலாசாரத்திற்குள் நாடு தள்ளப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, ஈராக்கின் முக்கிய ஊடகநிறுவனமான அல் பக்தாதியா தொலைக்காட்சி அலைவரிசை வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், 'ஈராக்கில் அதிகரித்துள்ள ஊழல்களினால் இளைஞர்களின் வேலைவாய்ப்பு பாதிக்கப்படுவதுடன், தேசிய தொழில் கட்டமைப்பிலும் பாரிய அளவில் சேதம் விளைவிப்பதாக தெரிவித்துள்ளது. (இ-7)

# காஷ்மீரில் வன்முறையால் 82பேர் இதுவரை மரணம்



காஷ்மீரில் வன்முறை மற்றும் போராட்டம் 70-வது நாளை எட்டியுள்ள நிலையில் வன்முறைக்கு பலியானோர் எண்ணிக்கை 82 ஆக உயர்ந்துள்ளது.

காஷ்மீரில் பயங்கரவாத தளபதி பர்கான் வானி கொல்லப்பட்டதை கண்டித்து நடந்து வரும் வன்முறை மற்றும் போராட்டம் 70-வது நாளை எட்டியுள்ளது. புல்வாமா மாவட்டத்தில் கடந்த 5 ஆம் திகதி நடந்த வன்முறையில் காயமடைந்த பசிப் முக்தார் என்ற இளைஞர் கடந்த வியாழக்கிழமை வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

இத்துடன் காஷ்மீர் வன்முறைக்கு பலியானோர் எண்ணிக்கை 82 ஆக உயர்ந்துள்ளது. பசிப் முக்தார் இறந்ததை தொடர்ந்து புல்வாமா மாவட்டத்தில் நேற்று முன் தினம் பல இடங்களில் மீண்டும் போராட்டம் வெடித்தது. எனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்டம் முழுவதும் ஏராளமான பொலிஸாரும், பாதுகாப்பு படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

மாநிலத்தில் ஆங்காங்கே மீண்டும் வன்முறை சம்பவங்கள் தலைதூக்குவதால் பல இடங்களில் மீண்டும் ஊரடங்கு உத்தரவு நிலை பிறப்பிக்கப்பட்டது. குறிப்பாக ஸ்ரீநகர் மற்றும் மாநிலத்தின் முக்கியமான நகரங்களில் இந்த தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது. மாநிலத்தின் பல பகுதிகளில் இணையத்தளம் முடக்கப்பட்டுள்ளதால் இளைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே காஷ்மீரில் சுயநிர்ணய உரிமை கேட்டு நடத்தப்படும் போராட்டங்களை 22 ஆம் திகதி வரை நீடித்து பிரிவினைவாதிகள் அறிவித்துள்ளனர். பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் உள்ள மசூதிகளை நோக்கி பேரணி நடத்துமாறும் அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளதால் பல இடங்களில் பதற்றம் நிலவுகிறது.(இ-7)

# ஜனாதிபதி இன்று அமெரிக்கா பயணம்!



(கொழும்பு)

ஐ.நா பொதுச்சபையின் 71ஆவது அமர்வில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று அமெரிக்கா பயணமாகிறார். பொதுச் சபை அமர்வு நாளை 19 முதல் 23 வரை நடைபெறுகிறது. இதில் பங்கேற்க 194 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த அமர்வில் பங்கேற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 21 ஆம் திகதி உரையாற்றவுள்ளார்.

பயணிகள் விமானத்தில் நியூயோர்க். ஜோன் கெனடி விமான நிலையத்திற்கு செல்லவுள்ள ஜனாதிபதிக்கு அங்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட இருக்கிறது. இந்த அமர்வில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பாராளுமன்ற விவகார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக, உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் மற்றும மனித உரிமை பேரவை பரிந்துரைகளை செயற்படுத்த எடுத்துள்ள திட்டங்கள் பற்றியும் ஜனாதிபதி தனது உரையில் தெரிவிக்கவுள்ளதாக அறிய வருகிறது. (செ)

## பாதிக்கப்பட்ட...

கிளிநொச்சி பொதுச் சந்தையில் ஏற்பட்ட தீ அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சந்தை வியாபாரிகளுக்கு நட்ட ஈடுவழங்குவதற்கு இரண்டொரு மாதங்களில் நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உறுதியளித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு தீயினால் எரிந்து அழிந்துள்ள பொதுச் சந்தையை பார்வையிட்ட பின்னர் வியாபாரிகள் மத்தியில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நட்டஈடு தொடர்பில் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு எங்கிருந்து பணம் பெறுவது என்ன செய்வது என்பது தொடர்பில் ஒரு மயக்க நிலை உள்ளது. இருந்தபோதும் ஓரளவுக்கு எங்கிருந்து பணத்தை பெற்றுக்கொள்ளலாம் என்பதனை நாம் அடையாளப்படுத்தியிருக்கின்றோம். எனவே அவர்களுக்கு கொடுக்க கூடிய நட்டஈடு தொடர்பில் ஆராய்ந்து பார்த்து ஒவ்வொருவரும் எவ்வளவு நட்டத்தை அடைந்திருக்கின்றார்கள் என்பதை பார்த்து நட்டஈட்டை வழங்ககூடிய நிதி நிறுவனங்களுடனும் பேசி விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். எனத் தெரிவித்த அவர்.

இங்கு தீயணைப்பு வசதிகள் இல்லாமையே பெரும் அனர்த்தத்திற்கு வழிகோலியுள்ளது. கரைச்சி பிரதேச சபைக்கு தீயணைப்பு வசதிகள் வழங்கமாட்டார்கள். அதற்கு சட்டத்தில் இடமில்லை. ஆனால் கரைச்சி பிரதேச சபையை நகர சபையாக மாற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. என்வே எதிர்காலத்தில் இவ்வாறானதொரு அனர்த்தம் ஏற்படாத வகையில் இங்கு ஒரு தீயணைப்பு படையை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்தோடு உடனடியாக இன்று (நேற்று) பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் இருபதாயிரம் ரூபாய் உடனடி நிவாரணத்தை வழங்குகின்றோம். இரண்டாவதாக மிக விரைவில் மீண்டும் வர்த்தக நடவடிக்கையை ஆரம்பிக்கும் வகையில் தற்காலிகமாக கடைகள் அமைத்து வழங்கப்படும் எனவும் தெரிவித்த முதலமைச்சர். வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் பெற்ற கடன்கள் தொடர்பில் அவர்களுடன் பேசி சில சலுகைகளை பெற்று தருவது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

மேலும் நெல்சிப் திட்டத்தில் இடம்பெற்ற பாரிய மோசடியே புதிய திட்டங்களுக்கு நிதியை பெற்றுக்கொள்வதில் தடங்கல்களை ஏற்படுத்துகிறது. இருந்து போதும் சந்தைக்கான நிரந்தர கட்டடம் அமைத்து தருவதற்கும் நாம் முயற்சிகளை மேற்கொள்வோம் எனவும் குறிப்பிட்டார். (செ-312,15)

## சுவீகரிக்கப்படும்...

தமது அமைச்சினால் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் நான்கு மாடி கட்டட திறப்புவிழா நடைபெற்றது.

இந்நிகழ்வின் முடிவில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே மீள்குடியேற்ற அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மக்களுடைய காணிகளை சுவீகரித்துவிட்டு அதற்கு நஷ்ட ஈடு வழங்குவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். வேண்டுமென்றால் அவர்களுக்கு மாற்று காணிகளை எம்மால் வழங்க முடியும்.

இராணுவம் சுவீகரிக்கும் காணிகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவது என்ற தீர்மானம் தொடர்பில் இதுவரை நாம் எந்த முடிவும் எடுக்கவில்லை என மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்தார். இதேவேளை ஒருசில வாரங்களுக்கு முன்னர் உயர்பாதுகாப்பு வலயத்தில் இராணுவம் நிரந்தரமாக சுவீகரிக்கவுள்ள காணிகளுக்கு இலாபகரமான நஷ்ட ஈடு தருவதாக கூறி.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரினால் கடிதம் ஒன்று நலன்புரி முகாம்களில் வாழும் காணி உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த கடிதத்தை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்த அந்த மக்கள். தமது காணிகளே தமக்கு வேண்டும் எனவும் வலியுறுத்தி இருந்தனர். இது தொடர்பில் வடக்கு மாகாண சபையும் கரிசனை செலுத்தி.

குறித்த கடிதத்தின் மேல் நடவடிக்கைகளை நிறுத்துமாறு கோரி வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடிதம் ஒன்றும் அனுப்பப்பட்டும் இருந்தது. இந்த நிலையிலேயே நஷ்ட ஈடு வழங்குவதாக தாம் எந்த தீர்மானமும் எடுக்கவில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் பரவிப்பாஞ்சானில் ஐந்து ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும். மேலும் காணிகள் விடுவிக்க வேண்டுமென்றால் அதற்கு இராணுவத்தின் அனுமதி தேவை எனவும் அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். (செ-4)

## 135 வர்த்தகர்களுக்கு...

ங்கி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி சந்தை கட்டத்தொகுதியில் வைத்து இக்கொடுப்பனவுகளை வடக்கு மாகாண முதலமைச்சர் வழங்கி வைத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன். வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டுள்ளனர்.

கிளிநொச்சி பொதுச். சந்தையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு ஏற்பட்ட பாரிய தீ காரணமாக புடைவை மற்றும் பழக் கடைகள் என்பன முற்றாக எரிந்து தீக்கிரையாகின.

நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட பாரிய தீ விபத்துக் காரணமாக சந்தையின் அனைத்து பழக் கடைகளும். 60க்கு மேற்பட்ட புடைவை கடைகளும். அழகுசாதன பொருட்கள் விற்பனை நிலையங்களுமென 90 கடைகள் முற்றாக எரிந்து தீக்கிரையாகின. இதில் 250 மில்லியன் ரூபாய் வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டு உள்ளது. (செ-4,281)

# ஏறாவூர் இரட்டைப் படுகொலை; சந்தேக நபர்கள் ஐவர் கைது

## பொலிஸ் நிலையம் முன் மக்கள் திரள்வு

ஏறாவூரில் கடந்த 11ஆம் திகதி ஞாயிற்றுக கிழமை அதிகாலை இடம் பெற்ற இரட்டைப் படுகொலையுடன் சம்பந்தப் பட்ட சூத்திரதாரிகள் என சந்தேகிக்கப்படும் மேலும நால்வர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலைச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்ட செய்தி ஏறாவூர் நகரம் முழுவதும் தீயாகப் பரவியதும் பொது மக்கள் சந்தேக நபர்களை நேரில் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்திலும் தண்டிக்க வேண்டும் என்ற கோபததிலும் பொலிஸ் நிலையத்தைச் சூழ்ந்து கொண்டனர்.

எனினும். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும், சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகருமான சிந்தக பீரிஸ் மற்றும் மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.எம்.சுபைர் ஆகியோர் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக பிரசன்னமாகி பொதுமக்கள் பொலிஸாரின் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கும் வண்ணம் அமைதி காக்குமாறு கேட்டுக் கொண்டனர். அதற்கமைய பொது மக்கள்கலைந்து சென்றனர்.

கடந்த ஒரு வாரகாலமாக தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த தீவிர விசாரணைகளையடுத்து ஏறாவூரின் நகர மத்தியில் மறைந்திருந்த கொலைச் சந்தேக நபர்கள் நால்வர் சாதுர்யமாக மடக்கிப் பிடிக கப்பட்டுள்ளனர்.

ஏற்கெனவே கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவனின் சகோதரன் கைது செய்யப்பட்ட நிலையில் 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளான்.

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவு ஏறாவூர் நகர் முகாந்திரம் வீதி முதலாவது ஒழுங்கையில் உள்ள வீட்டில் ஒன்றாக வசித்து வந்த நூர் முஹம்மது சித்தி உஸைரா (வயது 56) மற்றும் அவரது மகளான ஜெனீரா பானு மாஹிர் (வயது 32) ஆகியோர் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 2 மணியளவில் மர்மமான முறையில் பொல்லால் தாக்கப்பட்ட நிலையிலும் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட நிலையிலும் படுகொலை செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே. (செ)

## கஞ்சாவுடன்...

பனை செய்வதாகக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றை அடுத்து முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிநடத்தலின் கீழ் முல்லைத்தீவு மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கருணாரத்தினம் ஜெசிந்தன் தலைமையிலான பொலிஸ் கொஸ்தாபர்களான ஜயசேகர (47532), குலதுங்க (36447). இந்திர ரத்ன (38688) . குமார (84817). ஜனனன் (88582) மற்றும் பொலிஸ் கொஸ்தாபர்(சாரதி) பண்டார (15843) ஆகியோரை உள்ளடக்கிய பொலிஸ் அணியினரின் சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேக நபர் 350 கிராம் கஞ்சாவுடன கைது செய்யப்பட்டுள்ளார்.

தடயப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் மேலதிக விசாரணைக்காக முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-15)

## நிரந்தர அரசியல்...

யாழ்.மாவட்ட செயலக வளாகத்திற்குள் புதிதாக கட்டப்பட்ட நான்கு மாடி கட்டட திறப்பு விழா நேற்று முற்பகல் பதினொரு மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். வடக்கில் யுத்தத்திற்கு பின்னர் சிவில் நிர்வாகத்திற்கு தேவையான நடவடிக்கைகளை புதிய அரசு எடுத்து வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே சில தினங்களுக்கு முன்னர் பொலிஸ் நிலையம் ஒன்றும் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் பிறந்த தினமாகும். அவர் அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதற்காக பதின்மூன்றாம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தினார். இதன் காரணமாக வடக்கு தெற்கு உட்பட நாடு முழுவதும் அவருக்கு எதிராக போராட்டங்கள் இடம்பெற்றன. அவரை கொலை செய்ய போவதாகவும் மிரட்டினார்கள்.

ஆனால் அவர் பின்வாங்கவில்லை. அதேபோல் பதின்மூன்றாம் திருத்த சட்டத்தையும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பதின்மூன்றாம் திருத்த சட்டம் அனைவராலும் ஏற்றுக்கொள்ள கூடியதாகவே உள்ளது. இதனை அடிப்படையாக வைத்து 2009 இற்கு பின்னர் நிரந்தர தீர்வு எட்டப்படும் என நாம் நம்பியிருந்தோம் ஆனால் மகிந்தவினால் அதனை செய்வோம் என கூறமுடிந்ததே தவிர செய்து காட்ட முடியவில்லை.

எனினும் நாம் அப்படியல்ல. ஒரு நிரந்தர அரசியல் தீர்வை எட்டுவதற்காகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தி அதில் வெற்றியும் கண்டோம். தற்போது அவர் நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார். அவருடன் நானும இணைந்துள்ளேன். ஐக்கிய தேசிய கட்சியின் 70 வது மாநாட்டின் போதும் ஜனாதிபதி நிரந்தர அரசியல் தீர்வை வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு நாட்டில் நீண்டகாலமாக நிலவும் பிரச்சினையை தீர்ப்பதற்கு தேசிய அரசை அமைத்து கலந்தாலோசித்தும் வருகின்றோம். புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு பாராளுமன்ற குழு ஒன்றை அமைத்து அந்த உபகுழுக்களில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களான சுவாமிநாதன். சுமந்திரன். டக்ளஸ் ஆகியோரினையும் இணைத்துள்ளோம்.

நாட்டில் கடந்த காலங்களில் பிரச்சினைக்குரிய விடயங்களாக இருந்த அனைத்து விடயங்களுக்கும் அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். தேர்தல் முறைமை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை. புதிய அரசியலமைப்பு ஆகியவை தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமைக்கு பதிலாக இரண்டு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதோடு. மத்திய மாகாண உறவுகள் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றன.

புதிய அரசியலமைப்பில் மத்தியால் வழங்கப்படும் அதிகாரங்களை மீள பெற முடியும் என்ற அச்சங்களும் உள்ளன. அவை தொடர்பிலும் ஆராய்ந்து வருகின்றோம்.

புதிய அரசியலமைப்பின் மூலம் தேசியக் கொடி. பௌத்தம் என்பன புறக்கணிக்கப்படுவதாக குற்றம் சாட்டப்படுகின்றது. இவை தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்த வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கெனவே அனைத்தும் தீர்மானிக்கப்பட்டுவிட்டன. இதேபோல் ஏனைய சமயத்தவர்களும் தமது சமயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு.

தமிழ் மக்களை பழிவாங்கும் எண்ணம் எமக்கு இருந்ததில்லை. தமிழ் மக்களுடைய மனங்களில் என்ன உள்ளன என்பதனை அறிந்து அவர்களுக்கு மன நிம்மதியை கொடுப்பது தான் எமது நோக்கம். கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பது தொடர்பில் உண்மையை கண்டறியும் அதேவேளை நல்லிணக்கத்திற்கான செயலணி ஒன்றையும் உருவாக்கி நடவடிக்கை எடுப்போம் என்றார் பிரதமர் ரணில். (செ-4)

## ஐ.நா விசேட...

மக்களின் பிரச்சினைகள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தொடர்பாக ஆராயவுள்ளார்.

அத்துடன் வடமாகாணத்துக்கும் பயணம செய்யவுள்ள இவர், இங்குள்ள நிலைமைகள் தொடர்பிலும் ஆய்வு செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பயணத்தின் போது அரசாங்கத் தரப்பினர். எதிர்த்தரப்பினர். சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் ஆகியோரையும் ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் ரீட்டா ஐசாக் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அதேவேளை, ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் தொடர்பான ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் மைனா கை அடுத்த வருடம் முதல் பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ)

# சைவத் தமிழ் குடியிருப்புக...



க்கழக தொல்லியல் துறை பேராசிரியர் பா.புஸ்பரட்னம் தெரிவித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை பேராசிரியர் பா.புஸ்பரட்னம் தலைமையில் யாழ் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை பட்டதாரி மாணவர்களும் இறுதியாண்டு மாணவர்களும் இணைந்து மன்னார் கட்டுக்கரை குள முகப்பு பகுதியில் கடந்த முதலாம் திகதி முதல் அகழ்வு பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இது தொடர்பாக நேற்றைய தினம் மன்னாரில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக யாழ் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை பேராசிரியர் பா.புஸ்பரட்னம் கருத்துத் தெரிவிக்கையில்,

மன்னார் கட்டுக்கரை முகப்பு பகுதியில் 4 வாரங்களாக கள் ஆய்வு மேற்கொண்டு வருகிறோம். முதல் இரண்டு வாரங்களில் 3 இடத்தில் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்ட போது பல்வேறு காலகட்டங்களுக்கு உரிய அதாவது ஆயிரத்து 400 ஆண்டுகளுக்கு முற்பட்டதான தொல்பொருள் சான்றுப் பொருட்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக சமய வழிபாட்டுக்குரிய ஆலயமான ஐயனார் ஆலய தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதனை ஒத்த ஆலயம இந்தியாவின் மதுரை போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த சான்றுப்பொருட்கள் குறித்த குளத்தை அண்டி வாழ்ந்த மக்களுடைய வழிபாட்டு ஸ்தலமாக இருக்கலாம். ஏனெனில் முன்னைய காலங்களில் யானைகளின் தொல்லையில் இருந்து குடிமனைகளை பாதுகாப்பதற்கும், இயற்கை அனர்த்தத்தில் இருந்து தம்மை பாதுகாத்துக்கொள்வதற்கும், தமது விவசாயம் செழிக்கவும் நீர் நிலைகளை அண்டிய பகுதிகளில் இதே போன்ற ஐயனார் ஆலயங்களை அமைத்து வழிபடுவது வழக்கம். அதனடிப்படையிலேயே குளக்கட்டை அண்மித்த பகுதியில் வசித்த குடியினரால் இந்த வழிபாட்டு இடம் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆலயம் ஐயனாருக்குரியதாக இருந்தாலும் வைரவர், பிள்ளையார், சிவன் போன்ற தெய்வங்களுடைய குறியீட்டுச் சின்னங்கள் பெருமளவும் நந்தியுடன் தொடர்புடைய சான்றுப்பொருட்களும் அதிகளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த தொல்பொருள் சான்றுப்பொருட்கள் வட இலங்கையில் தெளிவில்லாமல் இருந்த புராதன கால வரலாற்றினை வெளிச்சத்துக்கு கொண்டுவந்துள்ளது என்றே கூற முடியும்.

மேலும் இன்றைய தினம்(நேற்று) குறித்த பகுதிக்கு மத்திய கலாசார திட்டப்பணிப்பாளர் லக்ஷ்மன் வருகை தந்திருந்தார். தற்போது மீட்கப்பட்டுள்ள தொல் பொருட்களின் பாகங்களை பாதுகாத்தல்,வரலாற்று சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் மீட்கப்படுகின்ற பொருட்களை பாதுகாத்து மக்களுக்கு தெளிவு படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக மத்திய கலாசார திணைக்களத்தில் இருந்து நிதியினை ஒதுக்கீடு செய்து தருவதாகவும் தெரிவித்துள்ளார் என பேராசிரியர் புஸ்பரட்னம் மேலும் தெரிவித்தார். (செ-4-9-281)

# மக்கள் நலனில்...

எதுவும் செய்யாமல் பாரமுகமாக இருக்கிறது.

எனவே இந்த அரசாங்கத்தையும் மாற்ற வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

நாட்டின் எதிர்காலமும், இடதுசாரிகளின் கடமையும் எனும் தொனிப்பொருளில் மக்கள விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திசாநாயக்காவின் தலைமையில் பகிரங்கக் கருத்தரங்கொன்று நேற்று சனிக்கிழமை முற்பகல் 11.15 மணி தொடக்கம் யாழ்.சங்கானை குபேரன் பிளாஸா மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கட்சியின் யாழ். ம்ாவட்ட அமைப்பாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகர், கட்சியின் மூளாய்ப் பிரதேச அமைப்பாளர் எஸ்.பரமலிங்கம், கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் சின்னத்துரை இராஜேந்திரன், வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் நா.திரிலோகநாதன், இலங்கை மின்சார சபை தொழிற் சங்கத்தின் வடமாகாண தொழிற் சங்கத்தலைவர் தோழர் இளங்குமரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் யாழ். சங்கானைக்கு நேற்று வருகை தந்தமையை முன்னிட்டு சங்கானை நகரம் விழாக் கோலம் பூண்டிருந்ததுடன், தொண்டர்கள் வெடிகொளுத்தி அவருக்கு வரவேற்பளித்தனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஜே.வி.பியின் தலைவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

1948 ஆம் ஆண்டு தொடககம் மாறி மாறி ஆட்சி புரிந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் தற்போது ஒன்றாக ஆட்சி செய்கிறார்கள் என்றும் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகள் தோல்வியடைந்தவையாகவேயுள்ளன.

மகிந்த ராஜபக்ஷ, சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க,மைத்திரிபால சிறிசேன ஆகியோர் தனி நபர் குறைபாடுகளால் தான் அவர்களின் ஆட்சிகள் தோல்வியடைந்தவையாக இருக்கவில்லை. அவர்கள் ஒவ்வொருவரின் கொள்கைகளும் தான் நாட்டில் நெருக்கடிகள் ஏற்படுவதற்குக் காரணம்.

முதலாளித்துவ ஆட்சியில்நாம் எவ்வாறு ஜனநாயகத்தை எதிர்பார்க்க முடியும்?எங்கள் மக்கள் கஷ்டப்பட்டு, வியர்வை சிந்தி உழைத்த பணத்தை அதிகாரத்திலுள்ள ஒரு சிறிய கும்பல மூட்டை கட்டிக் கொண்டு வீடு செல்கின்றது.

கடந்த கால ஆட்சிக் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் தாராளமாக நடைபெற்றன. மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுனா மகேந்திரன் பதவியிலிருந்த போது அவரது மருமகன் அலோசியஸ் மகேந்திரனுடன் இணைந்து மத்திய வங்கியின் முறிகள் மோசடியானமுறையில் விற்கப்பட்டன.

இதன் மூலம் அர்ஜுன மகேந்திரனின் மருமகனுக்கு 168கோடி ரூபாய் வருமானமாகக்கிடைத்தது. இவ்வாறு நாங்கள் உழைக்கின்ற பண மெல்லாம் மோசடியாகப் பயன்படுத்துவதை நாங்கள் எவ்வாறு அனுமதிக்க முடியும்?

மகிந்த ராஜபக்ஷவின் மகன். முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தவின் பிள்ளைகள் ஆகியோர் வெளிநாடுகளில் தான் கல்வி பயின்றார்கள். நாட்டினை ஆட்சி செய்யும் ஆடசியாளர்களின் பிள்ளைகள் இங்குள்ள பாடசாலைகளில் கற்பதில்லை. அவர்களது பிள்ளைகள் எங்கள் பிள்ளைகளோடு பிள்ளைகளாகக் கல்வி பயிலுவதில்லை, எங்கள் பிள்ளைகள் செல்லும் பஸ் வண்டிகளில் அவர்களது பிள்ளைகள் பயணம் செய்வதில்லை.

ஏனெனில், அவர்கள் எங்கள் வர்க்கமல்ல. அவர்கள் மேல் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். மகிந்த ராஜபக்ஷ, ஹக்கீம், தொண்டமான், விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைந்து முன்னைய ஆட்சியைநடத்தினார்கள்.

அவர்கள் இனவாதத்திற்கு துணை போனதுடன், மக்களின்உணர்வுகளுக்கும் மதிப்பளிக்காத வகையில் மோசமான ஆட்சியை நடத்தினார்கள். அவர்களில் மகிந்த ராஜபக்ஷவைத தவிர ஏனைய அனைவரும் தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கிறார்கள்.

ஆகவே, தற்போதைய ஆட்சிக் காலத்திலும் நாம் நீதியை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(செ)


**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

சகல நாடுகளுக்கும் மிகக் குறைந்த கட்டணத்தில்
UK 11 kg மேற்பட்ட பொதிகள் 550/=
விடுமுறை நாட்களிலும் சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்.

**திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd**
271A, K.K.S, Road Jaffna.
0777554528/ 0212227835
(5946)

**சித்த தமிழ் வைத்திய நிலையம்**

வன்னி,திருமலை புகழ்மிகு சித்த வைத்தியர் திரு. இரா.மாதவராசா (RIMP) அவர்களின் வைத்திய சேவை இடம்பெறுகிறது. எவ் வகையான பக்கவிளைவற்ற மூலிகை வைத்தியம், எல்லா வித நோய்களுக்கும் தீர்வுகிட்டும்.

இடம் -
சீதாதேவி, கங்காதரன் ஆரோக்கிய அகம்
வண்ணார்பண்ணை
(கங்காதரன் வைத்தியசாலைக்கு அருகில்)

நேரம் :
தினமும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை

தொடர்புகளுக்கு :
077 1374 728

**A/L வரலாறு**

2017 மற்றும் 2018 பிரிவுகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

ஆசிரியர் :- யாழ் பிரபல ஆசான்
M. பத்மன் M.A (History)
இடம் :- D.M.I யாழ்ப்பாணம்.
(5936)
உயர்கலைக் கல்லூரி, குளப்பிட்டி.

**CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062
(C-5740)

**தேவை**

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் 2 பேர் கொண்ட குடும்பத்திற்கு பெண் வேலையாள் தேவை. காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை.

சம்பளம் நேரில் பேசித் தீர்க்கலாம்

தொடர்புகளுக்கு :- 021 221 3021 / 0777 656918
(5941)

**கணினி இயக்குநர் தேவை**

பிரபல்யமான எரிவாயு (Gas) விநியோக நிறுவனத்திற்கு கணினி இயக்குநர் தேவை. கணினியில் முன்னனுபவமுள்ளவர்கள் 24.09.2016க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

S.V. முருகேசு
106, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-5802)

**LONDON METROPOLITAN COLLEGE**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**IELTS LIFE SKILLS (A1)**

Speaking & listening
**Duration : 48 hours** (week & week ends)
UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப settlement விசாக்களுக்கான **IELTS A1** புதிய பாடத்திட்டம் தற்போது கற்பிக்கப்படும்.
- ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம்
- இதுவரை பயின்ற அனைத்து மாணவர்களுமே சித்தி அடைந்துள்ளனர்.

**IELTS**

Academic & General
**Duration : 48 hours** (week & week ends)
மாணவர்களின் ஆங்கில அறிவுக்கேற்ப ஒவ்வொருவருக்கும் விசேட கவனிப்பு முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
**IELTS 5.5 - 6.5 Band** பெறுவதற்கான உத்தரவாதம் ஒரே தரத்திலேயே தேவையான Band இனை பெற்றுக்கொள்ளலாம்.
லண்டனில் உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகள் வழங்கப்படும்.

அனைத்து கற்கை நெறிகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.தவணை அடிப்படையிலான மிகக் குறைந்த கட்டணம்.

LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road, parameswara junction, Jaffna.
HOTLINE : 021 753 8395
(C-5794)

**காணி விற்பனை**

1. சபாபதி லேன் கொக்குவிலில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
2. பலாலி வீதி, திருநெல்வேலியில் 6 1/2 பரப்புக் காணி துண்டுகளாகவும் மொத்தமாகவும் விற்பனைக்கு உண்டு.
3. கே.கே.எஸ் வீதி, கொக்குவிலில் 8 பரப்பு. 13 குழி விற்பனைக்கு உண்டு.

077 1671 174
077 7286 061
(5804)

**V2 TRAVELS**

குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.
- வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
- வெளிநாட்டு விசா (UK,கனடா,சுவிஸ்,ஜேர்மனி,பிரான்ஸ்) விண்ணப்ப படிவம்(Online form) நிரப்புதல்.
- இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.

தொடர்புகளுக்கு: 0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(சி-5796)

**வேலையாள் தேவை (Salesmen)**

எமது நிறுவனத்திற்கு வேலையாள் தேவை. விண்ணப்பிக்க விரும்புவோர், சுய விபரத்துடன் கீழ் வரும் முகவரிக்கு நேரில் வரவும்.
(5940)
சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்
இல.70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P 021 222 2763

**விற்பனை பிரதிநிதி தேவை (Sales Rep)**

எமது நிறுவனத்திற்கு விற்பனை பிரதிநிதி தேவை. விண்ணப்பிக்க விரும்புவோர், கீழ்வரும் முகவரிக்கு சுய விபரக்கோவையை அனுப்பி வைக்கவும்.
(5940)
சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்
இல.70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P 021 222 2763


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி

# சங்குநாதம்

Sankunatham


நாதம் 83

வள்ளுவர் ஆண்டு 2047 18.09.2016 தொலைபேசி : 021 222 3378

## திலீபனின் தியாகம்











## மட்டக்களப்பில் முத்தமிழ் விழா

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் அறிவிக்க அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**விதானையார்:** தமிழ் மக்கள் பேரவையின்ர ஏற்பாட்டில மட்டக்களப்பில் முத்தமிழ் விழா மிக சிறப்பாக நடந்துள்ளது. எங்கட கலை கலாசாரங்களை பாதுகாக்க வேணும் எண்டால் இப்படியான முத்தமிழ் விழாக்களை ஏற்பாடு செய்து நடத்துகிறது மிகமிக அவசியம்.

**கங்காணி:** மட்டக்களப்பு நடந்த முத்தமிழ் விழாவின்ர முதல் நாள் பிரதம விருந்தினர் எங்கட வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஐயா தானாம்.

அவருக்கு முத்தமிழ் விழாவில வைத்து மிகப்பெரிய வரவேற்பு வழங்கப்பட்டதாக அறிந்தனான்.

**விதானையார்:** கிழக்குத் தமிழ் மக்கள் வடக்கோட இணைய வேண்டும் என்ற நிலைப்பாட்டில மிகவும் உறுதியாக இருக்கினம்.

**மூப்பர்:** அது சரி எங்கட யாழ்ப்பாண மத்திய கல்லூரியின்ர 200 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த 9 ஆம் திகதி நடைபெற்றதல்லோ.அன்றைய தினம் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையமும் திறந்து வைக்கப்பட்டது.

**சாத்திரியார்:** யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையம் மிகப் பிரமாண்டமாக கட்டப்பட்டிருக்குது. இப்ப பொலிஸ் நிலையங்கள் தானே அவசியமா இருக்கு.

**மூப்பர்:** சாத்திரியார் நான் அது பற்றிச் சொல்ல வரல்ல. கடந்த 9 ஆம் திகதி பொலிஸ் நிலையத்தை திறந்து வைத்த பிறகு இரவு முழுவதும் ஒரே பிரித்தோதல். அதால யாழ்ப்பாண மத்திய கல்லூரியின்ர இரவு நிகழ்ச்சிக்கும் இடையூறு ஏற்பட்டதாக கேள்வி.

**வாத்தியார்:** என்ன மூப்பர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில இரவு முழுவதும் பிரித்தோதலோ. அப்ப எங்கட இந்து சமய சடங்குகள், கிறிஸ்தவ கீதங்கள் எதுவும் கிடையாதோ?

**மூப்பர்:** யாதேனும் கிடையாது. இது பௌத்த சிங்கள நாடு என்று தானே சொல்லுகினம்.

**கங்காணி:** பௌத்த சிங்கள நாடு என்பதற்காக... யாழ்ப்பாணத்தில அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையத்தில பிரித்தோதலுக்கு கொடுக்கின்ற முன்னுரிமையை விட இந்து சமய கிரியைகளுக்குத்தானே முன்னுரிமை கொடுக்க வேணும். அதேபோல கத்தோலிக்க சடங்குகளும்



## யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் இந்து சமய சடங்கு புறக்கணிப்பு

செய்ய வேணும்.

**விதானையார்:** கங்காணியார் நீங்க சொல்லுறது போல எல்லாம் நடக்காது கொழும்பில இருக்கின்ற மல்கம் ரஞ்சித் ஆண்டகை சொல்லுறார் புதிய அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தில பௌத்த மதத்திற்கான முன்னுரிமை இம்மியும் குறையக்கூடாது எண்டு. அப்படி எண்டால் எப்படி இந்த நாட்டில் சமய சமரசம் ஏற்பட முடியும்.

**பண்டிதர்:** சரி... சரி.. எதுவா இருந்தாலும் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய திறப்பு விழாவுக்குப் பின்னர் விடியவிடிய பிரித்தோதுவதை விட இது தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற வடக்கு மாகாணம் என்ற வகையில தமிழ் மக்களின்ர சமய சடங்குகளை ஏற்பாடு செய்து அதனை நடைமுறைப்படுத்துவதுதான் ஒழுங்கு. என்ன செய்யிறது இந்த நாட்டில சமயம் தானே பிரச்சினை.

**சாத்திரியார்:** பண்டிதர் ஐயா மலேசியாவில இலங்கைத் துதுவர் தாக்கப்பட்டதற்கு எங்கட சம்பந்தர் ஐயா உடனடியாக கண்டித்தவர் அல்லோ.

**பண்டிதர்:** அவர் இலங்கையின்ர நல்லதொரு எதிர்க்கட்சித் தலைவராக தன்னைக் காட்டிக்கொள்ளுகிறார் அவ்வளவு தான்.

**சாத்திரியார்:** பண்டிதர் ஐயா அதை நான் சொல்ல வரல. மலேசியத் துதுவர் தாக்கப்பட்ட சம்பவம் ஒரு செற்றப்பாம்.

**மூப்பர்:** அட நாசமறுப்பு. சங்கதி அப்படியோ!

**சாத்திரியார்:** ஓம் மூப்பர். மலேசியாவுக்கான இலங்கைத் துதுவரை அடிப்பது போல அடிக்கிறது. அதன் மூலம் மலேசியாவில விடுதலைப் புலிகள் இருக்கினம் என்றொரு காட்டாப்பைக் காட்டுவது. இது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின்ர செல்வாக்கை தென்பகுதியில் வலுப்படுத்தும் என்று நினைக்கினம்.

**கங்காணி:** நான் ஒரு இணையத்தளத்தில பார்த்தனான். இலங்கைத் துதுவருக்கு அடிவிழுகிறதை. அப்ப அந்த அடியெல்லாம் பெரிய பிளான்தான்.

**சாத்திரியார்:** அவங்க பிளான் போட்டுச் செய்ய எங்கட சம்பந்தர் ஐயா ஒண்டும் தெரியாமல் கண்டிக்கிறோம் என்கிறார்.

**விதானையார்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில சிங்கள மாணவர்கள் கண்டி நடனத்தை அரங்கேற்ற முற்பட்டதால மாணவர்களிடையே ஏற்பட்ட கலகத்தைக் கண்டிக்க சம்பந்தர் ஐயா மறந்து போனது தான் அதிசயம்.

**வாத்தியார்:** எல்லாரும் தந்திரமாகச் செயற்படுகினம். தமிழ்மக்களின்ர உரிமை என்ற விடயத்தில தமிழ் அரசியல் தலைவர்களுக்கு எந்த அக்கறையும் கிடையாது. அவர்கள் ஆளும் தரப்போட இணங்கிப்போவதுதான் ஒரேவழி என்ற நிலைப்பாட்டில மிகவும் உறுதியாக இருக்கினம்.

எங்கட அரச அதிகாரிகளும் தங்கட கடமையைச் செய்ய வேணும் என்பதைவிட ஆட்சியாளர்கள் குறை நினைக்காமல் தங்கட பணியை முன்னெடுக்கவேணும் எண்டும் நினைக்கினம்.

**விதானையார்:** வாத்தியார் சொல்லுறது நூறுவீதம் உண்மை. ஆரியகுளம் சந்திப் பகுதியில அண்மையில சிக்னல் லைற் பொருத்தினவியள் அல்லோ. அங்க பார்த்தியள் எண்டால் வீதியின்ர மேற்குப் பக்கம் இருக்கிற சிக்னல் லைற் சனத்திற்குச் தெரியவில்லை.

அந்தச் சந்தியில இருக்கிற அரச மரக்கொப்புகள் அந்தச் சிக்னல் லைற்றை மறைச்சுப் போட்டுது. இருந்தும் அந்தக் கொப்புகளை வெட்டி சிக்னல் லைற் தெரியக் கூடிய தாகச் செய்யிறதுக்கு இங்க ஒருத்தரும் இல்லை.

**சாத்திரியார்:** ஏன்? விதானையார் அரச மரத்தில ஏறிக் கொப்பு வெட்டுறதுக்கு இங்க ஆட்கள் இல்லையோ.

**விதானையார்:** சாத்திரியார் கனடாவில இருந்துபோட்டு வந்த உங்களுக்கு இதுகள் விளங்காது. அரச மரக்கொப்புகளை வெட்டினால் அந்த விகாரையின்ர சாது கோபிப்பார், பொலிஸார் நடவடிக்கை எடுப்பினம் எண்ட பயம்தான்.

**கங்காணி:** ஆரியகுளச் சந்தியில இருக்கிற அரச மரக்கொப்புகளை வெட்டுவதற்குப் பயம் கொள்ளும் எங்கட அரச அதிகாரிகள் இப்ப அந்தச் சந்தியில ஒரு அம்மன் கோயில் இருந்து அதில ஒரு வேப்பமரம் நிண்டிருந்தால் வேம்பையே அடியோடு வெட்டித் தறிச்சிருப்பினம்.

அதுமட்டுமல்ல தறிச்ச கூலியையும் அந்தக் கோயில் தான் கொடுக்கவேணும் எண்டு சொல்லுவினம்.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா என்னைப் பொறுத்தவரை அந்த அரச மரக் கொப்புகளை வெட்டுவதற்கு அந்த விகாரையின்ர சாதுவோ அல்லது மற்றவர்களோ எதிர்ப்பினம் எண்டு நான் சொல்லமாட்டன்.

ஏனெண்டால் கொழும்பு மாநகரில அனுமதி எடுக்கப்படாமல் கட்டப்பட்ட விகாரைகளையும் கடைத் தொகுதிகளையும் புல்டோசர் மூலம் உடைத்துத் தரைமட்டமாக்கிய சம்பவங்களும் நடந்திருக்குது.

இது எங்கட அரச அதிகாரிகளிட்ட இருக்கிற கற்பனைப் பயம். ஆகையால ஆரியகுளம் சந்தியில இருக்கிற அரச மரக்கொப்புகளை வெட்டி சிக்னல் லைற் தெரியிறதுக்கு நடவடிக்கை எடுக்கவேணும் எண்டு இந்த ஆலடி மாநாட்டில தீர்மானம் எடுப்பம்.

வாத்தியார் இப்படிச் சொன்னதும் ஆலடியில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின்மீது எங்கட யாழ்ப்பாண அரசாங்க அதிபர் வேதநாயகன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானத்தை பண்டிதர் பரமலிங்கம் வாசித்த போது அதனை ஆமோதிப்பதுபோல ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



உண்ணா விரதம் இருப்பதற்கு முதல் நாள் தேசியத் தலைவருடன்
தியாகி லெப் கேணல் திலீபன்


தியாகி திலீபன், 1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து நல்லூரில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.48 மணிக்கு லெப்டினன் கேணலாக, அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபன் வீரச்சாவடைந்து மாவீரர்களுடன் இணைந்தார்.

**இந்திய அரசிடம் தியாகி திலீபன் முன்வைத்த ஐந்து அம்சக் கோரிக்கை.**

1. மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.
2. சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.
3. அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்.
4. ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும்.
5. தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும் என்பனவாகும்.

# உயிராயுதம் ஏந்தியவன்



## பார்த்தீபன் இப்போதும் பசியோடுதான் இருக்கிறான்

பன்னிரண்டு நாட்கள் பட்டினி கிடந்து உடலை வருத்தி உயிரைத் துறந்த உன்னத ஆத்மா தியாக தீபம் திலீபனின் 29 ஆவது நினைவு நாள் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள தியாகி திலீபனின் நினைவுத்



தூபியில் கடந்த 15 ஆம் திகதி ஈகச் சுடரேற்றி, அகவணக்கம் செலுத்தி மலர் தூபி நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

முன்னாள் போராளிகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நினைவு தின அனுஷ்டிப்பு எதிர்காலத்தில் விடுதலைப் புலிகளின் நினைவுகள் தமிழர் தாயகத்தில் நீண்டு நிலைக்கும் என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

மருத்துவ பீட மாணவனான இராஸ்சயா பார்த்தீபன் எனும் இயற்பெயரைக் கொண்ட லெப்டினன் கேணல் திலீபன் இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து 12 நாட்கள் அஹிம்சைப் போராட்டம் நடத்தி ஆகுதியானவன். தியாகம் என்றால் இதுதான் என்று உலகிற்கு பறைசாற்றியவன் பார்த்தீபன்.

இன விடுதலைக்காக ஆயுதம் ஏந்தியவன், அஹிம்சை வழியில் தனக்கு நிகர் தானே என்பதை இந்த உலகிற்கு ஆணித்தரமாக அறிவித்தான்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திய தியாக தீபம் திலீபன் என்று போற்றப்படும் பார்த்தீபன், இற்றைக்கு 29 ஆண்டுகளுக்கு முன்னர் நல்லூரான் சந்நிதியிலே உண்ணாவிரதப் போராட்டதை ஆரம்பித்தான்.

இறுதிவரை தனது கொள்கையில் உறுதியாக இருந்ததால் எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் என்றும் தமிழரால் நினைவு கூரப்படும் உன்னத நிலைக்கு தியாகி திலீபன் சென்றுள்ளான்.

ஆயுதப் போராட்டம் மௌனித்துவிட்டது என்றாலும் அஹிம்சை வழியில் அவன் காட்டிய இன விடுதலைப் போராட்டத்தின் மறுபக்கத்தை என்றுமே



மறக்க முடியாது.

தன்னலமற்ற நோக்கோடு சாவினைத் தழுவிய தியாகி திலீபன் மாவீரனாய் என்றும் மதிக்கப்படுவான்.

காண்டீபன்

## சினிமா செய்தி

## இளவரசியை அழகால் மயக்கிய அஜித்



தமிழ் சினிமாவில் தனக்கென தனி மாஸ் ரசிகர் களை வைத்திருப்பவர் அஜித். தல என்றழைக் கப்படும் இவரைப்பற்றி அடிக்கடி திரையுலக பிர பலங்கள் தாங்கள் அவரின் ரசிகர்கள் என்று கூறுவதுண்டு.

ஆனால் உலகின் பணக்கார நாடுகளில் ஒன்றான புருனே நாட்டு இளவரசியும் அஜித்தின் ரசிகையாக மாறியுள்ளாராம்.

ஆடம்பர மாளிகையில் வாழும் இவரது அரண்மனையில் வெளிநாட்டு வைர முதலாளி களுக்கான விருந்து நிகழ்ச்சி ஒன்றில் ஆலுமா டோலுமா பாடல் இசைக்கப்பட்டு பலரும் உற்சாகமாக நடனமாடினார்களாம்.

இந்த பாடலை கேட்டு ரசித்த புருனே இளவரசி அங்குள்ளவர்கள் மூலம் அதில் நடித்த அஜித்தின் விபரம், புகைப்படங்கள், நடித்த படங்கள் பற்றியெல்லாம் கேட்டு தெரிந்து கொண்டாராம்.

அஜித்தின் அழகு, கம்பீரம் போன்றவை பிடித்துள்ளதால் அவரை சந்திக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறியுள்ளாராம்.

## ரஜனிக்கு எதிராக விவகாரத்தை கர்நாடகர்கள் செய்த காரியம்!



காவிரி நதிநீர் விவகாரத்தில் கருத்துக் கூறாத நடிகர் ரஜனிகாந்துக்கு இந்து மக்கள் கட்சி உப்பு பக்கெற்றை பார்சல் அனுப்பி கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழகத்திற்கு காவிரியில் இருந்து தினமும் 12,000 கன அடிவீதம் வரும் 20ஆம் திகதி வரை தண்ணீர் திறக்க வேண்டும் என்று கர்நாடகா மாநிலத்திற்கு உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இதையடுத்து, கர்நாடகாவில் தமிழக பதிவெண் கொண்ட வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன.


இதற்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், நடிகர்களும் கண்டனம் தெரிவித்து இருந்தனர். ஆனால் இந்த விடயத்தில் நடிகர் ரஜனிகாந்த் இதுவரை தனது கருத்தை தெரிவிக்கவில்லை.

இந்நிலையில் இதற்கு கண்டனம் தெரிவித்து அவருக்கு இந்து மக்கள் கட்சியினர் உப்பு பக்கெற்றுகளை ரயில்வே பார்சல் மூலம் அனுப்பி இருப்பதாக செய்தி வெளி யாகியுள்ளது.



## விக்ரமின் மகன் துருவாவின் முதல் படம்





தமிழ் சினிமாவில் அசைக்க முடியா ஒரு சினிமா ரசிகன் என்றால் விக்ரம் தான். ஒரு படத்துக்காக எந்த ஒரு எல்லைக்கும் செல்வார்.

தற்போது இவருடைய மகன் துருவாவும் இவரைப் போலவே சினிமா மீது ரசனை கொண்டவராக இருக்கிறார்.

லண்டனில் 6 மாதமாக சினிமா பற்றி படித்துவந்த இவர் முதன்முதலாக ஒரு குறும்படத்திற்கு கதை எழுதி, இயக்கியுள்ளார்.

அந்த குறும்படத்தை அதிகாரப்பூர்வமாக தன்னுடைய யூட்டியுப்பில் வெளியிட்டுள்ளார் துருவ்.

Goodnight Charlie என்று பெயரிடப்பட்டுள்ள இந்த குறும்படம் சமூக வலைத்தளங்களில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

## விவாகரத்து உண்மைதான் முதன்முறையாக மனந்திறந்த சௌந்தர்யா



விவாகரத்து பற்றிய செய்தி உண்மையானதே என சௌந்தர்யா அஸ்வின் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

சுப்பர் ஸ்டார் ரஜனிகாந்தின் மகள்கள் இருவருமே குடும்பத்தை அழகிய முறையில் நடத்தும் சிறந்த குடும்ப பெண்கள் தான்.

இந்நிலையில், ரஜனியின் இரண்டாவது மகள் சௌந்தர்யா அஸ்வின் 2010இல் தொழிலதிபர் அஸ்வின் ராம்குமாரை திருமணம் செய்து கொண்டார்.

கடந்த நான்கு மாதங்களாக இருவர்களுக்குமிடையே உறவில் கசப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் இவர்களுக்கிடையே விவாகரத்து ஏற்பட்டு விட் டதாகவும் செய்திகள் வெளியாகின.

இந்நிலையில், அவ்வாறு வெளியான செய்தி உண்மைதான், நாங்கள் ஒரு வருடத்திற்கும் மேலாக பிரிந்து தான் வாழ்கிறோம் எனவும், இது எங்கள் சொந்த வாழ்க்கை பிரச்சினை. தயவு செய்து இதற்கு மரியாதை கொடுங்கள் என்றும் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவினை வெளியிட்டுள்ளார்.






வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532




## இருமுகன் எத்தனை கோடி வசூல்?

**செல்வி** — **மானிப்பாய்**

**குட்டிக்கதை ஒன்று சொல்லுங்கள்?**

இரு நண்பர்கள் இரண்டு பக்கமாக நின்று மண்ணில் வைரம் தோண்டுகிறார்கள். நெடு நேர போராட்டம். வைரம் கிடைக்கவில்லை. திடீரென ஒருவனின் கிடங்கில் வைரம். வைரம் கிடைத்தவன் சந்தோசத்தில் துள்ளிக் குதித்தான்.

மற்றவனுக்கு ஏமாற்றம். அவனின் கிடங்கில் இன்னும் அரை அடி வெட்டினால் பெரிய வைரம் கிடைக்கும்.

ஆனால் அவன் அதை விட்டுவிட்டு ஏற்கனவே வைரம் கிடைத்த நண்பன் கிடங்கை வெட்டிக் கொண்டிருக்கிறான். வைரம் கிடைக்கும் என்று நம்பிக்கையில். சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெறுவதல்ல உருவாக்கப்படுவது.

**உஷா** — **அல்வாய்**

**பெற்றோரின் சந்தோசத்திற்காக உயிரான காதலை இழக்கலாமா?**

உயிரான காதல் என்று உன்னால் உணரப்படுவது எது? நீ எதைச் செய்கிறாயோ அது நாளை இன்னொருவரால் உனக்குச் செய்யப்படும். அது உன் மகன் அல்லது மகளாகக் கூட இருக்கும். பெற்றவர்களின் மனம் நொந்தால் அந்த பாவம் ஒரு போதும் அழிந்திடாது.

**வாசன்** — **அல்வாய்**

**காவிரி நீர்ப்பிரச்சினை பற்றி?**

காவிரி நீர்ப்பிரச்சினைதான். ஆனால் இரு மாநிலங்களும் பற்றி எரிகிறதே. உலகில் எங்கு பிறந்தாலும் தமிழனாக மட்டும் பிறக்கக் கூடாது. ஏனென்றால் அடிவாங்குவது, அடக்கப்படுவது, தண்டிக்கப்படுவது, காட்டிக் கொடுப்பது, காணாமல் போவது இவை எல்லாம் தமிழரின் வாழ்வில் இணைந்துவிட்ட இலவச இணைப்புக்கள்.

**சிவா** — **திருநெல்வேலி**

**பெண்ணால் பிரச்சினை அதிகரிக்கிறதே என்ன பண்ணலாம்?**

பெண்களை பிடித்து சிறையில் அடைத்து சித்திரவதை செய்யலாமா? உன் அம்மாவும் ஒரு பெண் என்பதை நினைத்துவிட்டு கேள்விக்குப் பதிலைச் சொல்.

**மனோ** — **இணுவில்**

**உடுவில் மாணவர்களின் போராட்டம் பற்றி?**

அதிபரை கேட்பது மாணவர்களின் உரிமை. புதிய அதிபரை நியமிப்பது நிர்வாகத்தின் விருப்பம். ஆனால் மாணவிகள் தாக்கப்பட்டனரா என்பதற்கு நீதியான விசாரணை வேண்டும். அது ஒன்றே போதும்.

## உடுவில் மாணவர்களின் போராட்டம் பற்றி?

**தீபன்** — **தெல்லிப்பழை**

**காதலை ஏன் பெற்றோர் தடுக்கின்றனர்?**

விவாகரத்துப் பெறும் திருமணங்களில் 90 விகிதமானவை காதல் திருமணங்கள். அப்படி யெனின் எந்தப் பெற்றோர்தான் தன் பிள்ளை அழிந்து போவதை விரும்புவார்கள்.

**விஜயகுமார்** — **அல்வாய்**

**இருமுகன் எத்தனை கோடி வசூல்?**

இதுவரை 80 கோடிவசூல் செய்து விட்டது. இதுவரை வந்த விக்ரம் படங்களிலே குறைந்த நாட்களில் அதிகம் வசூலித்த படம் என்ற பெயரை பெற்றுவிட்டது. ஆனாலும் படம் பற்றி கலவையான விமர்சனங்கள் எழுந்துகொண்டே இருக்கிறது. அதை எல்லாம் விக்ரம் என்கின்ற நடிப்பின் சக்கரவர்த்தி மறைத்து விட்டார்.


**உங்கள் கேள்விகளை அனுப்புங்கள்**

**குறுந்தகவல் (SMS)**

**021 567 1532**


**ரஞ்சித்** — **அல்வாய்**

**சொல்வதெல்லாம் உண்மை என்ற தொடர் உண்மையா?**

வீட்டுக்குள் நடக்கும் பிரச்சினைகளை பேசித் தீர்க்கத்தான் வேண்டும். ஆனால் அதை ஆயிரம் பேர் பார்க்க வைத்து அந்தரங்கங்களை கூறவைப்பது எந்தவகையில் நியாயமானது. நான் எனது மனைவி, எனது அப்பா, எனது அம்மா, எனது தங்கை இப்படி நான் சார்ந்து யோசித்துப்பாருங்கள். உங்கள் குடும்பம் பிரச்சினையை அங்கு போய் கூறும் தைரியம் உங்களுக்கு உண்டா?

**அருள்** — **மானிப்பாய்**

**எங்கள் அரசியல்வாதிகள் பற்றி?**

தேர்தலுக்கு முன்பு பொங்குறதும் தேர்தலுக்கு பின்பு பம்முறதும்.

**ஸ்ரிவன் - நிறைஞ்சன்** — **ஆவரங்கால்**

**உண்மையான காதல் தோற்றுப் போகுமா?**

ஓட்டப் போட்டியில் கடைசியாய் வருபவன் கூட தோற்றுப் போவேன் என நினைத்துக் கொண்டு ஓடுவதில்லை.

வெல்லுவேன் என நினைத்துத்தான் ஓடுவான். ஒரு காரியத்தை தொடங்கும் போது அது கைகூடும் என நினைத்துத் தொடங்குவது தானே சிறப்பு

## காவிரி நீர்ப்பிரச்சினை பற்றி?

**ஜெயா** — **கொக்குவில்**

**பொதுச் சொத்தை சேதமாக்குகிறார்களே?**

என்ன செய்ய, இவர்கள் மனிதர்களே இல்லை. யாழ்.மாநகர சபையின் நடவடிக்கையில் யாழ்ப்பாண குறுக்கு வீதிகளில் குவிவுக் கண்ணாடிகளை பொருத்தி சந்திகளில் எதிர் திசையில் வரும் வாகனங்களை இலகுவாய் கண்டுகொள்ள ஏற்றவாறு மிக அருமையான பணி செய்யப்பட்டது. இதனால் விபத்துக்களும் தடுக்கப்பட்டன. ஆனால் விசமிகள் அதை உடைத்து சேதப்படுத்துகிறார்கள். நல்லது செய்தால் கூட இப்படியான செயற்பாடுகள் என்றால் நாம் எங்கே இருக்கின்றோம் என்பதைப் பாருங்களேன்.

**ராதிகா** — **வல்வெட்டித்துறை**

**முதியோர் இல்லங்கள் பற்றி?**

அன்பு, ஆறுதல் கொடுக்கப்படாமல் நிராகரிக்கப் பட்டவர்களின் கோவில்.

**கமல்** — **வல்வெட்டித்துறை**

**போதையற்ற நாடு எப்போது?**

மனித இனம் இல்லாது போன பின்பு கிடைப்பதற்கு வாய்ப்புகள் உண்டு.

**விஜயகுமார்** — **அல்வாய்**

**அஜித் பற்றி உங்கள் கருத்து?**

எந்தவித சினிமா பின்னணியும் இல்லாமல் சினிமாவிற்கு வந்து பல சோதனைகளைச் சந்தித்து இன்று சாதனையின் உச்சியில் இருக்கிறார்.

**நளாயினி** — **கோண்டாவில்**

**இராமன் சீதையை தீக்குளிக்கச் சொன்னது சரியா**


ஊருக்கோ, உலகத்துக்கோ அல்ல. தன்னையல்ல, தன் மனைவியை நிரூபிக்க அப்படி ஒரு வார்த்தையை இராமன் கேட்டுவிட்டான். சீதையும் நெருப்பில் இறங்கினாள். ஆனால் அவள் எரியவில்லையே? கணவன் கேட்டுவிட்டான் என்பதற்காய் இப்போது யாரால் நெருப்பில் இறங்க முடியுமோ அவர்கள் கையைத் தூக்கட்டும் பார்ப்போம்.

**தனுசன்** — **முல்லைத்தீவு**

**பெண்களின் மனதை ஏன் புரிந்துகொள்ள முடிவதில்லை?**

புடைவைக் கடையைக் கடக்கும் போது புடைவைக்கும் நகைக்கடையைக் கடக்கும் போது நகைக்கும் ஆசைப்படும் அந்த மனதை புரிந்து கொண்டு என்ன சாதித்து விடப் போகிறாய்.

# கவிதைக் கலசம்



## தனிமைத் தீ

தனிமை
என்னைத் தீண்டாமல்
பார்த்துக் கொள்கிறேன்...
தனிமைத் தீ
என்னை வாட்டினால்
குளிர்காய- என் மனம்
அவனைத் தேடும்
என்பதால்
வேண்டாம் என்று
தூக்கியெறிந்தவனை
வெட்கமின்றி நாடும்
என்பதால்
தனிமை
என்னைத் தீண்டாமல்
என்னை நானே
பாதுகாத்துக் கொள்கிறேன்

ஜெ.சிந்து

## நிராகரிப்பு

நிலவே!
உன்னைக் காதலித்து
ஏமாந்தவர்கள்
விண்வெளியில் உள்ள
விண்மீன்கள் போலும்
அதனால்தான்
தூரத்தில் நின்று
கண் சிமிட்டுகின்றன
உன்னைக்
காதலிக்க வேண்டாமென்று...

ஏ.வி.கே.பேர்லின்
ஜேர்மன்

## கனவுகள் சுமந்தவள்

பெற்ற மனம்
பேதலிக்கிறது
தத்தெடுக்கவில்லை
பெற்றெடுத்ததனால்
தொப்புள்கொடி உறவு
தொலைதூரம் சென்று
ஒளிந்து கொள்கிறது
தாய்சேய் உறவை
விலைபேசி விற்கும்
தரகர்களால்...?
கருவறைக் கோயிலில்
கனவுகள் சுமந்தவள்
வறுமையின் போது
வாய் வயிறு கட்டி
வளர்த்தவள்- இன்று
கனவுகள் கலைந்து
கருவறை சிதைந்து
வாழ வழியின்றி
வாழ்வுதனை வெறுத்து
முகாரி மீட்டுகின்றாள்...?
முதியோர் இல்லத்தில்

மடத்துக்கடவை
த.மோகன்ராஜ்

## ஓ... தமிழகத்து உறவுகளே!

பிட்டுக்கு மண் சுமந்த ஈசனின்
முதுகில் பட்ட அடி
உலகில் உள்ள
அத்தனை உயிருக்கும் வலித்ததாய்
பாடம் படித்தோம்

இன்று அதை
பட்டதாய் உணர்ந்தோம்
கர்நாடகாவில் எம் தமிழினம்
தாக்கப்படும் போது
எமக்கு வலித்தது

நீர்தான், நீர் தான் பிரச்சினை
நீரால் இன்று பற்றி எரிகிறது
என் இனத்தின் உடைமைகள்
தமிழன் பாவப்பட்டவன் என்பதை
கர்நாடகாவும் காட்டிவிட்டது

நாம் குண்டு மழைதனில்
குருதியில் கிடந்தபோது
தமிழரைத் தாக்காதே என
உம் தேகம் எரித்தீர்
எப்படி அந்தக் கடன் தீர்ப்போம் நாம்

அணை கட்டாமல்
அயர்ந்து தூங்கியதால்
ஈசன் அடிபட்டான்
அணை திறந்ததால்
எம் இனம் அடிபடுகிறது

அடங்கட்டும் வன்முறைகள்
திறந்த அணைக்கட்டு
மூடாமல் இருக்கட்டும்
சீறிப்பாயும் வெள்ளம்
செழிக்கட்டும் என்னினம்

மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்- 319



## கலங்கும் உள்ளம்

வறுமையின் பிடியில் வாடிய உள்ளம்
வாழ்வைத் தேடும் பிஞ்சு நெஞ்சம்
பிள்ளைகள் நால்வர்
பிழையென்ன செய்தார்
இதுவா இங்கு இறைவன் படைப்பு
பசியின் கொடுமை பாரில் இங்கு
யாருக்கேனும் வருதல் வேண்டாம்
விதியெனக் கூறும் வீணரே நீங்கள்
சதியெனக் காண வாரீரோ இங்கு
கலங்கும் உள்ளம் மகிழ
துலங்கும் வாழ்வை வழங்க

சி.திவ்வியா
யா/ப/மெ/ம/வி

## ஆதரிப்பார் யார்?

கொஞ்சி மகிழ வேண்டிய
பிஞ்சுக் குழந்தைகள்
ஊர்தோறும் அலைந்து
மெய்சோரக் கையேந்திச்
சேர்த்து வந்த உணவுதனை
சேர்ந்திருந்து உண்ணுகின்றார்
சகோதர பாசத்தோடு
பெற்றவருமில்லை
பேணிக் காப்பவருமில்லை
அநாதைகளாக்கப்பட்ட
இவர்களை ஆதரிக்க
யார் வருவார்?

துரை
தென்மட்டுவில்

## பாவம்தான் என்னவோ?

தெருவோரங்கள் உங்கள்
உறைவிடம் ஆனதோ
கிடைக்கும் உணவையுண்டு
உயிர் வாழ்க்கையோ
உதவுகின்ற உள்ளங்கள்
ஒருத்தர்கூட இல்லையே
பிஞ்சுகளே! நீங்கள் செய்த
பாவம்தான் என்னவோ?

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## இவர்கள் வாழ்வு என்றுதான் விடியுமோ...

நண்டும் குஞ்சுமாய்
நாலு பிஞ்சுகள்
உணவைச் சுவைத்து
உண்டு மகிழ்ந்தாலும்
அவர்கள் முகத்தில் தெரியும்
ஏக்கம் எம் நெஞ்சை...
நெகிழவே வைக்கிறது
அமரவீடு இல்லை
ஆற நிழல் இல்லை
நாங்கள் அநாதைகள் என்று
அவர்கள் சொல்லாவிட்டாலும்...
அழுக்கான அவர்கள் கோலம
எம் நினைவை அதனோடே
இணைக்கிறது- இறைவா...
இவர்கள் வாழ்வு என்றுதான்
விடியுமோ நாமறியோம்

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

## வெவ்வேறு கவலைகள்

பட்டினியால் பரிதவிக்கும்
பாலகர்கள் ஒருபுறம்
மண்டபத்திருமணங்களில்
உணவை அளிப்போர் மறுபுறம்
ஒருநேர உணவுக்கு
போராடுவோர் ஒருபுறம்
திருமணத்தில் போட்ட உணவு
ருசியில்லை எனும் கவலை மறுபுறம்
கொண்டைப்பூவுக் கழுவது ஒருபுறம்
கூழுக்கழுவது மறுபுறம்

ஸ்கவுட் மாரியப்பா
வட்டுக்கோட்டை

## வயிற்றும் பசியின் தீவிரம்

குறி சொல்லும் குறவர்களின்
குழந்தைகள் போலும்
சேரி வாழ்விடத்தில்
பெற்றோர் தொழிலுக்கு
சென்றனர் போலும்
யாரோ இரங்கி கொடுத்த உணவை
உண்டு வயிற்றுப் பசியாற துடிக்கிறார்கள்
கண்டுகொண்ட பார்வையாளர்களின்
கேள்வி தொக்கி நிற்கிறது
செல்வந்தர்களின் வீடுகளில்
தினம் ரம்மியமான சூழலில் சாப்பாடு
இங்கே யார் கருணை காட்டுவர்
கருணை உள்ளங்களும் ஏழைகளாகிவிட்டால்


சி.சுகிர்தமலர், உரும்பிராய்

## வீசப்பட்ட உணவில் விருந்துபசாரம்

பரந்து விரிந்த இவ்வுலகில்
பசியுடனே பிறந்திட்டோம்
அநாதைகளாய் அவதரித்ததால்
அழுகையையே தினம்
உமிழ்ந்திட்டோம்
யார் உள்ளார் உணவளிக்க?
யார் உள்ளார் உறவுகொள்ள?
வீசப்பட்ட உணவுகளையே
விருந்துபசாரமாய் உண்கிறோம்
அந்நியநாடு உதவ இங்கு
முன்வருகிறது
அன்னையவள் ஈன்றநாடு இன்னும்
ஊனமாய் இருக்கிறது

நி.சிந்துரன்
அளவெட்டி மேற்கு

# மௌனத்தின் தேடல் -320



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 21.09.2016ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# அம்மாடியோ! இப்படியெல்லாம் மேற்றர் இருக்கா!

இங்கே நாம் பார்ப்பதெல்லாம் பணக்கார மேற்றர்கள்தான். நாம் வேணும் என்றால் படிச்சுப் பார்த்து பெருமூச்சு விட்டுக்கலாம்.

## நம்ம ஊருக்கு எப்போ வரும்?




பிரேசிலில் உள்ள சௌபாலோ (Sao Paolo) டிராஃபிக் ஜாமிற்குப் பெயர் போனது. உலகத்திலேயே மோசமான வாகன நெரிசல் உள்ள நகரமாக டைம்ஸ இதழால் இது தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்தப் பிரச்சினையால், இப்போது அங்கே வாடகை ஹெலிகொப்டர் தொழில் சூடு பிடித்துள்ளது. விருப்பப்படுபவர்கள் தங்களது இடத்திலிருந்து கிளம்பி, ஹெலிபேட் அமைந்துள்ள ஹோட்டல்களில் இறங்கிக் கொள்ளலாம். வசதி படைத்தவர்கள் மட்டும்மன்றி நடுத்தர வர்க்கத்தினரும் பயன்படுத்தும் வகையில் உபேர் நிறுவனம், நெரிசல் மிகுதியான குறிப்பிட்ட ஆறு கிலோ மீற்றர் களைக்கடக்க அறிமுகச் சலுகையாக வெறும் 19 டொலர்களை வசூலிக்கிறது. நம்மூருக்கு இது எப்ப வரும் என்பதுதான் எம் கேள்வி.



## நாங்க காட்டடையே உருவாக்குற ஆட்கள்!


30 வருடங்களுக்கு முன் நியூயோர்க் நகரில், சுப்பர் மார்க்கெட் ஒன்றி வேலை பார்த்துக் கொண்டிருந்த பாப் பிராங்கா, இன்று கன்சல்ட்டிங் நிறுவனத்தின் உரிமையாளர். டிசெம்பர் ஆரம்பமானால் செம பிஸியாகிவிடுகிறார். நடிகைகள் முதல் அரசியல் செலிபிரட்டிகள் வரை பெரும்பாலானோர் தங்கள் வீட்டில் வைக்கப்படும் கிறிஸ்துமஸ் மரங்களை அலங்கரிக்க பிராங்காவின் உதவியை நாடுகின்றனர். பட்ஜெட், ஸ்டைல் ஆகியவற்றை ஆலோசித்துவிட்டு விருப்பப்பட்டபடி கிறிஸ்துமஸ் மரங்களை அலங்கரிக்க, இவர் 80 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வரை கட்டணமாகப் பெறுகிறார். இந்தப் பணத்துக்கு மொத்தமா வீட்டையே வாங்கிக் கலாம் நம்மூரில்.



## தரமான இரவு உணவு

உலகத்துலயே காஸ்ட்லியான டின்னரை சிங்கப்பூரில் இருக்கும் 'த மரினா பே சேண்ட்ஸ் ஹோட் டல்' தான் வழங்குகிறது. முன் பதிவு செய்யும் ஜோடிக்கு ஹெலிகொப்டரில் வானிலும், சொகுசுக் கப்பலில் நீரிலும், ரோல்ஸ் ராய்ஸ் காரில் எம் நிலத்திலும் என சிங்கப்பூர் முழுவதையும் சுற்றிக் காட்டுகிறது. 55 அடுக்குகள்கொண்ட இந்த ஹோட்டலின் உச்சியில், 10000 ரோஜா மலர்கள் நிரப்பப்பட்ட அறையில் உலகப் புகழ் பெற்ற விசேஷ உணவுகள் பரிமாறப்படும். எட்டு மணி நேர விருந்திற்குப் பின் வைரக்கற்கள் பதித்த சாப்ஸ்டிக்ஸ் மற்றும் நாற்காலி ஒன்றை ஜோடிக்கு நினைவுப் பரிசாக ஹோட்டல் நிர்வாகம் வழங்குகிறது. இந்த விசேட விருந்திற்கு 20 இலட்சம் அமெரிக்க டொலர்கள் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இந்தப் பணத்துகத இங்கே பத்து தலைமுறைக்கு உட்கார்ந்து சாப்பிடலாமே!

# கொஞ்சம் இதைப் பாருங்க!



## மிகச்சிறிய தொலைக்காட்சி

உலகிலேயே மிகச்சிறிய தொலைக்காட்சி இதுதான். ஜப்பானில் உள்ள 1.5 இன்ச் அளவே கொண்ட இந்த மினியேச்சர் தொலைக்காட்சி இன்றும் வேலை செய்கிறது. இதில் வீடியோ கேம் விளையாடியும் சாதனை படைத்துள்ளார்கள்.




## விலை மதிப்பு அதிகமான தொலைக்காட்சி

28 கிலோ எடைகொண்ட 18 கரட் தங்கம், 72 வைரக்கற்கள் பதிக்கப்பட்ட ஸ்டூவர்ட் ஹ்யூஸ் பிரஸ்டீஜ் ஹெச்.டி. சுப்ரீம் ரோஸ் எடிசன்தான் உலகிலேயே விலை அதிகமான தொலைக்காட்சி. இதன் தற்போதைய மதிப்பு 2.27 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.



## மிகப்பெரிய தொலைக்காட்சி

இங்கிலாந்தைச் சேர்ந்த டைட்டன் ஸ்க்ரீன்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பான 'தி ஜுயஸ்' தொலைக்காட்சிதான் உலகத்திலேயே மிகப்பெரிய தொலைக்காட்சி.1.6 மில்லியன் டொலர் மதிப்பிலான இதன் அளவு 370 அங்குலம் ஆகும்.




## முதல் தொலைக்காட்சி

உலகின் முதல் தொலைக்காட்சி இயந்திரத்துடன் தொலைக்காட்சியின் தந்தை என்றழைக்கப்படும் ஜான் லூயி பெயர்டு!



## ரெயின் ரெயின் கோ எவே!

நம்ம ஊர்ல கல்யாணத் தன்னைக்கு மழை வந்தா, முகூர்த்த நேரம்தாண்டி மெதுவா போகலாம்னு வீட்ல உட்கார்ந்துடுவோம். ஆனால் 'ஆலிவர்ஸ் ட்ராவல்ஸ்' என்ற நிறுவனம், வசதி படைத்தவர்களின் திருமணத்தில் மழை இடையூறு செய்யாதபடி, திறமையான வானியல் நிபுணர்களின் உதவியோடு மேகத்தில் சில்வர் அயோடைட் இரசாயனக் கலவையைத் தூவி, மழையை அருகிலுள்ள வேறு இடத்தில பொழியச் செய்கிறார்கள். இதற்கு அவர்கள் வாங்கும் ஊதியம் 'வெறும்' ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்கள மட்டுமே. பரவாயில்லை. நாங்க குடையே பிடிச்சிக்கிட்டு தாலியை கட்டுகிறோம்.



## அங்கு என்ன தெரிகிறது?

பிரேசில் நாட்டின் 'ஏர்ஷிப் கியோடோ' விமானத் தயாரிப்பு நிறுவனம், கார்களில் உள்ளது போல் வானத்தைப் பார்க்கும் வகையில், தனியார் விமானங்களிலும் சன்ரூப் டாப் வசதியை 2015 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் விமானத்தில் இயற்கை ஒளியையும், இரவு நேரத்தில் நட்சத்திரங்களையும் கண்டுகளிக்க முடியும் என்கிறது இந் நிறுவனம். புதிதாக 1000E ரக விமானம் வாங்குபவர்கள் விருப்பப்பட்டால், விமானத்தல் சன்ரூப் வசதியை அமைத்துத்தரும். இந்த விமானத்தின் விலை என்ன தெரியுமா? 53 மில்லியன் டொலர்கள். வானத்துல பறந்துக் கிட்டே வானத்தைப் பார்க்கிறதா! இது புதுசா இருக்கே!

# நம்பினால் நம்புங்கள்





☯ **இ**துவரை அறியப்பட்ட அடிப்படையில் பிரபஞ்சத்தில் 10 கோடி கலக்சிகள் இருக்கக்கூடும் என விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர்.

☯ **வி**ண்வெளி வீரர்கள் விண்வெளியில் ஜீரோ கிராவிட்டி நிலையில் நீண்டகாலம் இருக்கும் போது அவர்களின் இதயம் கோள வடிவத்திற்கு மாற்றம் பெறுவதோடு தசைகளின் நிறை குறையும்.

☯ **உ**லகின் ஒட்டுமொத்தத் தபால்களில் 47 சதவீதத்தை அமெரிக்க அஞ்சல் துறையே கையாள்கிறது.

☯ **ஓ**நாய்களே 27 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நாய்களாக பரிணாமம் பெற்றுள்ளன.

☯ **பூ**மியின் வளிமண்டலம் ஏறத்தாழ 21 சதவீத ஒட்சிசனால் உருவாகி இருந்தது.

☯ **ந**மது நுரையீரலால் 5 நிமிடங்களுக்கு தேவையான ஒட்சிசனை சேமித்து வைத்திருக்க முடியும்.

☯ **க**ணிதவியலாளர் பாஸ் ஏர்டோஸ் ஒருமனிதனின் வயதைக் கொண்டு அவர் இதுவரை எத் தனை விநாடிகள் வாழ்ந்திருக்கிறார் எனத் துல்லியமாக மனக்கணக்கிலேயே சொல்லிவிடுவார். இத் திறமை அவருக்கு 4 வயதிலேயே இருந்தது என்பது தான் ஆச்சரியம்.

☯ **வீ**ட்டிலுள்ள பல பொருட்களை விடவும் விமான இருக்கைக்கு முன்னுள்ள தட்டுக்களில் அதிக



பக்றீரியாக்கள் காணப்படுகின்றன.

☯ **அ**ப்பலோ – 11 மூலமாக விண்கலம் நிலவில் சென்று ஏற்றிய கொடி அமெரிக்காவில் ஒரு சிறிய கடையில் வாங்கப்பட்டது. விலை 5.50 டொலர்.

☯ **ச**வுதி அரேபியப் பெண்கள் விமானத்தைச் செலுத்த முடியும் ஆனால் கார் ஓட்டுவதற்கு நேரடி அனுமதி கிடையாது.

☯ **நி**யூயோர்க் அருகிலுள்ள மன்ஹாட்டன் உலகின் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட பகுதிகளில் ஒன்று. ஆனால் 100 ஆண்டுகளுக்கு முன் இங்கிருந்த மக்கள் தொகை அடர்த்தியை விட இப்போது 25 சதவீதம் குறைவு!

☯ **இ**ங்கிலாந்தில் 50 வயதுக்குட்பட்ட பெரும்பாலான ஆண்களில் மரணங்களுக்கு பெரும்பாலும் தற்கொலையே காரணமாக இருக்கிறது.

☯ **தெ**ளிவான நீரில் மனிதர்களை விட சுறாக்களால் 10 மடங்கு கூர்மையாகப் பார்க்க முடியும்.

☯ **ஆ**ல்பர்ட் ஹிட்ச்காக் ஒரு முறை கூட சிறந்த இயக்குநருக்கான ஓஸ்கார் விருது வென்றதில்லை.

☯ **1970** இற்குப் பிறகு முதன் முறையாக உலகப் புகழ்பெற்ற மெக்டொனால்டன் நிறுவனம் அமெரிக்காவில் ஏராளமான கிளைகளை அடுத்த ஆண்டு திறக்க அல்ல மூட இருக்கிறது.

☯ **சி**ப்பிகளின் பாதுகாப்பு இயக்கத்தின் வெளிப்பாடாகவே முத்துக்கள் உருவாகுகின்றன.

☯ **அ**மெரிக்காவில் வர்ஜினியாவில் உள்ள ஆரம்பப்பள்ளி மாணவர்கள் உருவாக்கிய செயற்கை கோளை நாசா இந்த ஆண்டில் விண்வெளிக்கு அனுப்பியுள்ளது.

☯ **சி**ல வகை கான்சர்களை எதிர்த்துப் போராடும் தன்மை ஊசி மூலம் உடலுக்குள் செலுத்தப்படும் தங்கத்துக்கு உண்டு.

☯ **ம**ஞ்சள் நிறத்தைக் கண்டாலே சிலருக்கு பயம் ஏற்படும் இப்பிரச்சினைக்குப் பெயர் xantkop hobia

☯ **பொ**துநிதி மூலம் ஐரோப்பிய யூனியனில் செய்யப்படும் அறிவியல் ஆராய்ச்சிகளின் முடிவுகள் 2020 ஆண்டு முதல் அனைவருக்கும் இலவசம்!

☯ **இ**ரண்டாம் உலகப் போரில் நாஜிகளால் கொல்லப்பட்ட யூதர்களை விட ஜப்பானியரால் கொல்லப்பட்ட சீனர்களின் எண்ணிக்கை அதிகம்.

☯ **அ**மெரிக்க குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கான விண்ணப்பத்தை நான்கே நிமிடங்களில் பூர்த்தி செய்து விடலாம் ஒரு பக்கம் மட்டுமே!



☯ **ப**ண்டைய எகிப்தில் மலத்தைப் பார்வையிட்டு எதிர்காலத்தைக் கணித்துச் சொல்லும் Scato waxey என்ற முறை இருந்தது.

☯ **அ**மெரிக்காவில் ஏழைகள் என அறியப்பட்ட 5 சதவீத்தினர் உலகில் உள்ள 58 சதவீதத்தினரை விடவும் பணக்காரர்களே!

☯ **ஒ**ருவருக்கான இணைய உரிமையைத் துண்டிப்பதையும் மனிதவுரிமை மீறலாகவே பார்க்கிறது ஐ.நா. சபை ●



☯ **அ**மெரிக்கர் மின்னலால் தாக்கப்பட்டு இறப்பதும் ஜப்பானியர் துப்பாக்கியால் சுடப்பட்டு இறப்பதும் இணையான அபாயமே.

☯ **ஒ**ருவரது கைரேகை மூலமாக அவரது பாலினத்தை அறிய முடியும். ஆண்களை விடப் பெண்களுக்கு இரு மடங்கு அமினோ அமிலம்சுரப்பதே இதற்கானவாய்ப்பு.

☯ **வி**ண்வெளிக்குச் சென்ற முதல் விலங்கினம் பழஈ. 1947 இல் அமெரிக்க ரொக்கெட் மூலம் அனுப்பப்பட்டது.

☯ **கு**ரங்குகளால் தந்திரமாகவும் வஞ்சகமாகவும் கூட செயற்பட முடியும்.



# கடி கடி



நமக்குத் தெரியாமல் பல்லக்கை வாடகைக்கு விடுறாங்களா?
ஏன் மன்னா?
பல்லக்கின் உள்ளே மீற்றர் கட்டணம்ன்னு எழுதியிருக்கு...!



டாக்டர்... எப்படியாவது என்னைக் காப்பாத்துங்க...
கவுன்டர்ல பணத்தைக் கட்டிட்டு சொல்லாமக் கொள்ளாம ஓடிடுங்க!



எதிரிகளை மன்னித்தாலும் மன்னிப்பேனே தவிர துரோகிகளை மன்னிக்க மாட்டேன்னு மன்னர் புலம்பிட்டிருக்காறே...
ஏன்? பதுங்குகுழின்னு சொல்லி பாதாளக் கிணத்துல தள்ளிவிட்டாங்களாம்!



கட்சியில் வாழ்த்த வயது இல்லாதவர்கள் எண்ணிக்கை பெருகி விட்டதால் தலைவர் அவர்கள் வேறு கட்சி மாற வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டார் என்பதை...



யோவ் வரலாறு காணாத கூட்டம்னு சொன்னே... பத்து பேர்தானே இருங்காங்க?ஒரு பயலுக்கும் வரலாறு கிடையாது தலைவரே!



தலைவருக்கு தினம் தினம் கொலை மிரட்டல் வருது...
எப்போதான் கொல்வாங்க?



ஏன் தலைவரே அவன் கன்னத்துல அறைஞ்சீங்க? போன எலெக்ஷன்ல நாம வெச்சிருந்தோமே அந்தக் கூட்டணிக் கட்சியை இப்போ யார் வெச்சிருக்காங்கனு கேட்கிறான்!



தலைவர் தான் பிறந்த ஊர் எதுங்கிறதைச் சொல்லவே மாட்டேங்கிறாரே ...ஏன்?
பிறந்த ஊருக்குக் கெட்ட பேர் வாங்கித் தர மாட்டாராம்!



ஜெயில்ல இருக்கிற நம்ம தலைவரோட தண்டனைக் காலத்தை அதிகரிச்சுட்டாங்களா... எதுக்கு?
ஜெயில்ல தோட்ட வேலை பார்க்குற சாக்குல அங்கே கஞ்சா செடி பயிரிட்டுட்டாராம்!



டியர் நேற்று ஒருத்தனோட பைக்குல உட்கார்ந்து நீ போனதைப் பார்த்தேன் இனி இந்த மாதிரி நடக்காம பார்த்துக்க! அதுக்கு நான் அவரை விவாகரத்துத்தான் பண்ணனும் ஏன்னா... அவர்தான் என் புருஷன் டியர்!

# பெங்களூர் ஏன் எரிகிறது



## காவிரி வெறும் நீர்ப்பிரச்சினையில்லை ஒரு சமூகவியல் பிரச்சினையும் கூட!

அவர்கள் படையாய் சென்றார்கள். உடல் மண்ணுக்கு, உயிர் காவிரிக்கு என்ற கோஷம் இல்லை அது. எமக்கு மிஞ்சித்தான் தான தர்மம் என்கிற கோஷமாக கன்னட அமைப்புகள், விவசாயிகள் எழுப்பிய கோபக் குரலாகத் தான் ஆரம்பித்தது அது. எங்களுக்கே குடிக்க நீர் இல்லை, வ்வசாயத்துக்கு இல்லை எனும போது தமிழ்நாட்டுக்கு கர்நாடகம் காவிரி நீரை 15 நாட்களுக்கு (செப். 5 இலிருந்து செப்.20 வரை) விநாடிக்கு 15,000 கன அடி நீர் விட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் எப்படிச் சொன்னது என்கிற அதிர்ச்சியும் கோபமும் கலந்த எதிர்ப்பாகத்தான் முதலில் இருந்தது. காவிரி நதி நீர்ப் பங்கீடு தீர்ப்பாணையத்தின் வாதமே கர்நாடகத்துக்குப் பாதகமானது, தமிழ்நாட்டுக்குப் பட்சமானது என்கிற அவர்களது மற்றும் .கர்நாடக அரசுகளின் நிலைப்பாட்டில் 40 வருடங்களுக்கு மேலாக மாறுதல் இல்லை.

நீர் என்பது உணர்வுபூர்வமான விடயம். வெறுப்பைக் கக்கும் அபாயம் அதனுடன் பிணைந்திருப்பது. 'தமிழனுக்கு ஒரு சொட்டு நீர் கிடையாது' என்கிற வட்டாள் நாகராஜின் வாக்கியம் வெறியேற்றுவது. ஆனால், கன்னட அமைப்புகளே திகைக்கும் வகையில் பிரச்சினை சென்ற வாரம் கைமாறி, தீயாய்ப் பரவி, மாநிலத்தை, அதன் கௌரவத்தைப் பொசுக்கிற்று. ஊரடங்குச் சட்டம் போடும் அளவுக்குத் தகவல் தொழில்நுட்பத் தலைநகரமான பெங்களூர் ரணகளமாகிப் பற்றி எரிந்தது. தொலைக்காட்சிப் பதிவுகளைப் பார்க்கும்போது காட்சிகள் காஷ்மீர் பள்ளத்தாக்கில் நடக்கும் கலவரத்தைவிட மோசமானதாக வயிற்றைக் கலக்கிற்று. 40 வாகனங்களுக்கு மேல் தீக்கு இரையாகிப்போனது நம்ப முடியாத அராஜகமாகத் தோன்றிற்று. அவர்களை அடக்க நடந்த பொலிஸ் துப்பாக்கிச்சூட்டில் இரண்டு பேர் மரணமடைந்தார்கள். அவர்கள் அப்பாவிகள் என்று செய்தித்தாள் சொல்கிறது.

### மீள முடியாத துக்கம

கர்நாடகத்தில் பிறந்து வளர்ந்த எனக்கு அதிர்ச்சியிலிருந்தும் துக்கத்திலிருந்தும் மீள முடியவில்லை. இப்படிப்பட்ட அராஜகங்களும் குண்டாயிசமும் நான் வளர்ந்த காலத்தில் நடந்ததில்லை. தமிழ்நாட்டுக்கும் கர்நாடகத்துக்கும் இடையே இருக்கும் காவிரிப் பிரச்சினை நூறு ஆண்டுகள் பழசு. மழை பொய்க்காத காலங்களில் கபினியில் கரைபுரண்டு வழிந்தோடும் உபரி நீரை கர்நாடகம் தாராளமாகத் தமிழ்நாட்டுக்கு அனுப்பும். மேட்டூர் அணை நிரம்பும். விவசாயிகள் மனம் குளிர்வார்கள். மழை பொய்த்துப் போனால், திரும்ப முளைக்கும் இரு மாநிலங்களுக்குமான தகராறு. ஆனால், இப்போது நாம் காண நேர்ந்தது வெட்கக்கேடான அராஜகம், அட்டூழியம்.

அதை ஊதிப் பெரிதாக்குவது அரசியல் மட்டுமல்ல, பெங்களூரின் பொருளாதார வரைபடத்தை அலைக்கழிக்கும் சமூகவியல் காரணங்களும் தான்.

வன்முறை என்பது கடந்த 30 ஆண்டுகளாகத்தான். ஒரு சிறு பொறியைக் காரணம் காட்டி வெடிக்க ஆரம்பிப்பது. தமிழ்நாட்டுப் பேருந்துகளை சுட்டுப் பொசுக்கியவர்களுக்கும் காவிரிப் பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை என்பதுதான் இதில் இருக்கும் நகை முரண். தலைக்குத் தலை அம்பலமாக சட்டத்தைக் கைக்குள் எடுத்து ராட்சச வெறியுடன் அலைந்தவர்கள் எல்லாம் கன்னட இளைஞர்கள். விவசாயம் பொய்த்துப் போன கிராமப் பகுதிகளிலிருந்து வேலை தேடித் தகவல் தொழில்நுட்பத் தலைநகரமான பெங்களூருக்கு வந்தவர்கள். ஆட்டோ ஓட்டிகள், பெற்றோல் பங்கில் வேலை செய்பவர்கள், வேலை கிடைக்காமல் அலைபவர்கள்.

50 ஆண்டுகளுக்கு முன் இருந்த பெங்களூர் இல்லை இப்போது. எங்கள் குடும்பம் ஐந்து தலைமுறைகளாக கர்நாடகத்தில் வசிக்கிறது. என்னுடைய தாயும் அவருடன் பிறந்தவர்களும் கன்னடம்தான் படித்தார்கள். என்னுடைய பாட்டி பிசிபேளா ஹுளி அன்னாவையும் ஒப்பட்டுவையும் செய்து, யுகாதியை, கன்னட வருடப் பிறப்பைக் கொண்டாடுவார். தமிழரும கன்னடியரும் வெகு இணக்கமாக இருந்த காலம். தமிழர்கள் கன்னட சமூகத்துடன் ஒன்றியிருந்த காலம்.

### முகம் மாறிய கன்னடம்

இப்போது இருக்கும் பெங்களூர் தகவல் தொழில்நுட்பத் தலைமுறைக்கும் கன்னடியருக்குமே ஒட்டு உறவு இல்லை. தகவல் தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சி கன்னட முகத்தையே மாற்றிவிட்டது. பூங்காவிலும் மால்களிலும் திரையரங்குகளிலும் கன்னட மொழி காதில் படுவதில்லை.

அவர்களுக்கு விளங்காத ஆங்கிலமும் இந்தியும்தான் ஒலிக்கிறது. வறண்ட கிராமங்களிலிருந்து வேலை தேடி பெங்களூர் வந்து வேலை கிடைக்காமல் திண்டாடும் இளைஞர்கள் எல்லா வேலை வாய்ப்புகளையும் வெளி மாநிலத்தவர் அபகரித்துவிட்டதாகக் கருத ஆரம்பித்துவிட்டார்கள். தங்கள் வயதொத்த வாலிபர்கள், யுவதிகள் மாதத்துக்கு ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் சம்பளம் வாங்குவதாகக் கேள்விப்படுகிறார்கள்.

பெங்களூரின் நிலத்தையெல்லாம் வெளியூர் ஆட்கள் வாங்கி, அடுக்குமாடி கட்டுகிறார்கள். தகவல் தொழில்நுட்ப இளைஞர்கள் வேலைக்குச் சேர்ந்த ஓர் ஆண்டுக்குள் / ப்ளாட் வாங்குகிறார்கள். கப்பல் போல வாகனம் வைத்துக் கொள்கிறார்கள். அவர்களது வருகையால் அடுக்குமாடிகள் பெருகிவிட்டன. நிலம், நீர் வறண்டுவிட்டது. குடிசைப் பகுதிகளில் தண்ணீர்ப் பஞ்சம் இருக்கும் போது, பணம் உள்ளவர்களுக்கு டாங்கரில் நீர் செல்கிறது.

### கோபத்தின் வடிகாலா அராஜகம்?

பெங்களூரன் ஒரு பகுதி அக்னிகுண்டமாக மாறி வருவதைச் சமூகவியலாளர்கள் கவலையுடன் கவனித்து வருகிறார்கள்.

கன்னட நடிகர் ராஜ்குமார் இறந்த அன்றும் மறுநாளும் இப்படித்தான் ஒரு வெறியாட்டம் நடந்தது. துக்கம் கோபமாக, வெறியாக உருப்பெற்றது. பன்னாட்டு நிறுவனங்களின் கண்ணாடிகள் நொறுக்கப்பட்டன. தமிழ்நாட்டு வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன. நான் அப்போதுதான் சென்னையிலிருந்து அங்கு குடிபெயர்ந்திருந்தேன்.

தமிழ்நாட்டு பதிவுஎண் உடைய என்னுடைய காரை காரேஜில் மூடி வைக்க வேண்டியிருந்தது.

இந்த வெறியர்களுக்கு எந்த உணர்வுபூர்வமான விடயமும், அவர்களது உள்ளார்ந்த கோபத்துக்கு வடிகாலாகி விடுவதுதான் சோகம்.

இது வெறும் நீர்ப் பிரச்சினை இல்லை. ஒரு சமூகவியல் பிரச்சினை. அதன் தீவிரத்தை உணராமல் கன்னட அமைப்புகளும் அரசுகளும் அரசியல் செய்தால் கர்நாடகத்துக்கு மட்டுமல்ல நாட்டுக்கே ஆபத்து. ஜனநாயகப் பண்புகளுக்கு ஆபத்து!

> ஒரு இயந்திரம் ஐம்பது பணியாளர்களின் வேலையைச் செய்து முடித்து விடலாம்; ஆனால், தன்னிகரற்ற ஒரு ஊழியனின் வேலைக்கு ஈடு கொடுக்க எந்த இயந்திரமும் இதுவரை படைக்கப்படவில்லை!
> -எல்பர்ட் ஹூப்பார்ட்

# கிடைத்த வேலையை வெறுக்காதீர்கள்!



பணி இடத்தில் உங்கள் மேல் நிலை அலுவலர் பணி தொடர்பான ஒரு வேலையைச் செய்யச் சொல்கிறார். அது உங்களுக்கு உடன்பாடாக இல்லை. வெட்டி வேலையாகத் தோன்றுகிறது. அதைச் செய்ய வேண்டிய தேவையில்லை என்பது உங்கள் கருத்து. நீங்கள் மெல்ல உங்களது எதிர்ப்பைத் தெரிவித்துப் பார்க்கிறீர்கள். பலனில்லை. சொன்னதைச் செய்யுங்க... என்ற பதில் வருகிறது.


பணிபுரிகிற எல்லோருக்கும் இது போன்ற இக்கட்டான தருணங்கள் வரும். வராமல் இருந்தால் தான் ஆச்சரியம். அதாவது , உங்கள் பாஸ் சொல்லுகிற வேலையைச் செய்ய மறுக்கிற சூழ் நிலைகள்.

இந்த இடத்தில் உங்கள் மனநிலை எப்படி இருக்கும் என்றால், மனசுக்கு ஒவ்வாத ஒரு செயலைச் செய்ய நேர்கிற போது எழுகிற வேதனை... அதை மறுத்தால் மேல் அலுவலர் என்ன நினைப்பாரோ என்ற கவலை... இதனால் எழுகிற மன உளைச்சல்.. நமது கருத்து மதிக்கப்படாததால் உருவாகிற சுய பரிதாபம் ... இதெல்லாம் ஒரு பிழைப்பா என்ற குமுறல்... எல்லாவற்றையும் விட நமது வாதம் எடுபடவில்லையே என்பதால் நம்முள் தூண்டப்படுகிற நமது ஈகோ...இதனால் ஏற்படுகிற எரிச்சல், இதிலிருந்து கிளம்புகிற கோபம். கோபம் என்பது பயத்தின் முகங்களில் ஒன்று என்பதால் உங்களைச் சூழுகிற பீதி... இப்படியாக, நிம்மதியான மனநிலையில் வேலை செய்ய முடியாத படி எதிர்மறை உணர்ச்சிகள் உங்களைத் தாக்கும். நீங்கள் செயலற்றுப் போய் பணி இடத்தையே வெறுக்கத் தொடங்குவீர்கள்.

> **“ உங்களது புத்திசாலித்தனம் அவரது முட்டாள்தனத்தை வெளிப்படுத்துவதாக அமைந்து விடக்கூடாது. உண்மையில் ஒரு புத்திசாலி தான்புத்திசாலிஎன்பதைவெளிப்படுத்திக்கொள்ளவேமாட்டான் என்பது வேறு விடயம். உங்களது வெற்றி அவரது தோல்வியாக மாறிவிடக் கூடாது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ”**

கவலைப்பட வேண்டாம். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தெரிந்து வைத்திருப்பது பணி இட நிம்மதிக்கு உதவும். அதற்கு முன்னால் உங்களுக்குச் சில விடயங்கள்.

நீங்கள் ஒரு பைக்கை வாங்குகிறீர்கள், வாகனத்தின் நோக்கம் பயணம். ஆனால், அது உங்களுக்கு பயணத்தை மட்டுமா தருகிறது? தவறான பாதையில் வந்து உங்களை நிலை குலையச் செய்கிற எதிர் வாகனக்காரனிலிருந்து , உங்களது அவசரம் புரியாமல் வழி மறிக்கும் பொலிஸ்காரர் வரை சில பிரச்சினைகளையும் கொண்டு வருகிறது தானே? பார்க்கிங்கில் பெற்றோல் திருடப்படுவது, சைலன்சரில் சுட்டுக் கொள்வது, ஒழுங்காப் பாத்துப் போடா... வீட்ல சொல்லிட்டு வந்துட்டியா...? போன்ற வார்த்தைகளையும் உள்ளடக்கியது தான் உங்கள் வாகனம். அதே போன்றதுதான் பணி இடமும்.



நிறையப் பேர் என்ன நினைக்கிறார்கள் என்றால்,பணி இடம் என்றால் காலையில் போவது, வேலை செய்வது , வீடு திரும்புவது என்றிருக்கும் என ..! நினைவில் கொள்ளுங்கள்... எழுதப்படாத பல பல அலுவலக அரசியல் பிரச்சினைகளையும் உள்ளடக்கியது தான் உங்கள் வேலை. நீங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இவற்றை எதிர்கொண்டே தீர வேண்டும். இந்த மன நிலைக்கு வருவது, மேல் அதிகாரிகளுடன் உரசலைத் தவிர்க்கும் முதல் படி!

அடுத்ததாக , உங்கள் கருத்து தேவையில்லை என்று அந்த மேலதிகாரியே நினைக்கிற போது ஏன் நீங்கள் வீணாகக் கவலைப்பட வேண்டும்.? பேசாமல் சொன்னதைச் செய்து விட்டுப் போவதே நல்லது. ஏனென்றால் பணி இடத்தின் பொறுப்பாளர் என்ற முறையில் உங்களது வேலைக்கும் அவர் தானே பொறுப்பு....?

உங்களுக்கு மனசாட்சி கேட்கவில்லை. அந்த வேலையில் இப்படி இப்படி எல்லாம் பிரச்சினை வரும் என்று சொல்வது உங்கள் கடமை என்று நினைக்கிறீர்கள். சரி, சொல்லுங்கள். அவர் உங்கள் கருத்தைக் கேட்பவராக இருந்தால், சூழ் நிலையைப் பொறுத்து இதில் இந்தந்த மாதிரி பிரச்சினை வர வாய்ப்பிருக்கிறது என்று சொல்லிப் பாருங்கள். சூழ்நிலையின் இறுக்கத்தில் உங்கள் பாஸ், நான் சொன்னதை செய்யுங்க... எனக்கு உங்க அறிவுரை தேவையில்லை.... என்று கத்தக் கூடும். ஏதோ வேகத்தில் சொல்லப்படும் இதுபோன்ற வார்த்தைகளைப் பொருட்படுத்தாதீர்கள். உங்களால் செய்ய முடிந்த இந்த வேலையை செய்ய முடியாது என்று ஒரு போதும் சொல்லாதீர்கள். செய்யிறேன்... என்று ஒப்புக் கொள்ளுங்கள்.

இந்த இடத்தில் நீங்கள் இப்படிச் செயற்படுங்கள்.அவரது வேகத்தைத் தள்ளிப் போடும் விதமாக, இந்த வேலையைச் செய்கிறேன்... இதோ செய்யப் போகிறேன் என்று சில தினங்கள் இழுத்தடிக்கலாம். நீங்களும் இந்த இடைவெளியில் உங்கள் பக்கம் ஏதாவது தவறு இருக்கிறதா என்று சோதித்துப் பாருங்கள். இருந்தால் மறு பேச்சுக்கே இடமில்லை. பணிக்கப்பட்ட வேலையைச் செய்து விட்டுப் போங்கள். இப்போதும் உங்கள் கருத்துத்தான் சரி என்றால் கொஞ்சம் பொறுங்கள். அவர் திரும்பவும் நான் செய்யச் சொன்ன வேலை என்ன ஆச்சு? என்பார்.

இப்போது உங்கள் கருத்து எடுபடலாம். இந்த இடைவெளியில், நீங்கள் குறிப்பிடுகிற தவறை அவர் உணர்ந்து விட்டிருக்கக் கூடும். பழையதினத்தின் அழுத்தம் எல்லாம் விலகி உங்கள் பாஸ் வேறு ஒரு மனநிலையில் இருக்கலாம். இப்போதும் அவர், இல்ல, நான் சொன்னதை செய்யுங்க... என்ற பழைய பாட்டையே பாடினார் என்றால் அந்த வேலையைச் செய்து விட்டுப் போங்கள். உங்களுக்கென்ன வந்தது?

இப்போதும் உங்கள் மனச்சாட்சி அநியாயத்திற்கு வேலை பார்த்து கடமை உணர்வுடன் துடித்தது என்றால், நீங்கள் வெகு எச்சரிக்கையுடன் வார்த்தைகளை உபயோகிக்க வேண்டும்.உயர் நிலை அலுவலர்களுடன் வாதங்களில் பரிமாறப்படும் வார்த்தைகள் சாகாத இயல்புடையவை. அவை காலம் கடந்தும் சாம்பலில் இருந்து எழும் பீனிக்ஸ் பறவையைப் போன்றவை. எனவே, சாதுரியமாக உங்கள் மனச்சாட்சியைக் களத்தில் இறக்குங்கள்.

நீங்கள் சொல்வது தப்பு என்று ஒருவர் சொல்லும் போது உங்களுக்கு எப்படி வருத்தம் ஏற்படுமோ, அதே தோல்வி உணர்வு கண்டிப்பாக அவருக்கும் ஏற்படும். அதை அவர் தன் உள்ளத்தில் எதிர் காலத் தேவைக்கு பத்திரப்படுத்தி வைப்பதற்குள் அவரை வெளியே கொண்டு வந்து , திசை திருப்பிவிட வேண்டும். ஏனென்றால், தன் கீழ் வேலை பாரப்பவர் தன்னை விட புத்திசாலியாக இருப்பதை நிறையப் பேர் விரும்பமாட்டார்கள். எனவே, நீங்கள் அவரை விட உங்களை புத்திசாலியாகக் காட்டிக் கொள்ள முயலாதீர்கள்.

எனவே, உங்கள் பாட்டில் பிழை இருக்கிறது ... என்று நேரடியாகப் பேசாதீர்கள். உங்களுக்குத் தெரியாத தில்லை சார்.... உங்களுக்கு நான் சொல்லித் தெரியணும்னு இல்ல..., உங்களுக்கே தெரியும்... போன்ற மென்மையான வார்த்தைகளை உபயோகியுங்கள். அவருக்கும் அந்தக் குறைபாடுகள் ஏற்கனவே தெரியும் என்பது போல் பேசுங்கள்.உங்கள் கருத்துக்கு அவரையும் உரிமையாளர் ஆக்குங்கள்.இந்த இடத்தில் அவர் உங்கள் வழிக்கு வர வாய்ப்பு இருக்கிறது.

இந்தக்கட்டத்திலும் அவர், தான் சொன்னதே சரி என்று வாதிட்டாலோ, இல்ல நான் சொன்னதையே செஞ்சுட்டுப் போங்க என்றாலோ, இனி இந்த விடயம் உங்கள் கையில் இருந்து அவரது கைக்குப் போய் விட்டது என்று அர்த்தம். அவரது செயல்களுக்கு அவரே பொறுப்பேற்கத் தயாராகி விட்டார். நீங்கள் கவலைப்பட ஏதுமில்லை. நீங்கள் வருந்துவதற்கும் ஒன்றுமில்லை.உங்கள் மன சாட்சியைச் சாந்தப்படுத்தி விட்டு, சொன்ன வேலையைச் செய்துவிட்டுப் போய்க் கொண்டே இருங்கள்.

இதை இத்தோடு விடுங்கள். நான் அப்படிச் சொன்னேன்...இந்த ஆள் கேக்கவே இல்லை என்றெல்லாம் அடுத்த வரிடம் சொல்லிக் கொண்டிராதீர்கள்●





# விடை பெறுகிறார் டில்சான் மனம் திறந்த சில கணங்கள்

துடுப்பாட்டத்தில் அதிரடியாகவும் களத்தடுப்பில் புலியாகவும் செயற்பட்ட இலங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரும் ஜாம்பவானுமாகிய திலகரட்ன டில்ஷான் சர்வதேச கிரிக்கெட்டுக்கு விடைகொடுத்தார்.

1999 இல் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் காலடி எடுத்து வைத்த டில்சான், தனது 17 வருடகால கிரிக்கெட் வாழ்க்கையில் இலங்கை அணிக்காகவும் நாட்டுக்காகவும் பல சேவைகளை செய்துள்ளமை யாவரும் அறிந்த உண்மை.

தனக்கென ஒரு துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய டில்ஸ்கூப் மன்னன் டில்சான் சரியான ஒரு தருணத்தில் தனது ஓய்வை அறிவித்துள்ளார். துடுப்பாட்டத்தில் அதிரடியை காட்டியது போன்று ஓய்வின் போதும் அதிரடியான பல கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

**■ தோல்வியுடன் விடைபெறுகின்றீர்கள். கவலை இல்லையா?**

கடந்த போட்டிகளில் வெற்றி பெற முயற்சித்தோம். எனினும் முடியாமல் போனது. இன்றைய போட்டியில் இன்னும் 20 ஓட்டங்களை பெற்றிருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம்.

தோல்வியுடன் விடைபெறுவது கவலையாகத்தான் உள்ளது. எனினும் ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் எதிரணிக்கு சவாலளித்தே தோல்வியைத் தழுவினோம். இதனையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். தலையில் உள்ள பாரத்தை இறங்கி வைத்தது போன்று நினைக்கின்றேன். தற்போது சுதந்திரமாகவுள்ளேன்.

**■ திறமையான இளம் வீரர்கள் அணியில் உள்ளனரா?**

தனஞ்சய டி சில்வா மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோர் சிறப்பாக செயற்படுகின்றனர். தனஞ்சய டி சில்வாவுக்கு நல்ல திறமை உள்ளது. அவருக்கு இன்னும் நல்ல பயிற்சியை வழங்க வேண்டும் என தெரிவித்துள்ளேன்.

விளையாடி னேன். கடந்த கால போட்டிகள் இன்று விளையாடியது போன்று உள்ளன.

**■ இன்னும் ஒரு வருடத்துக்கு விளையாடி இருக்கலாம். உங்களின் ஓய்வுக்கு கிரிக்கெட் தேர்வு குழு அழுத்தம் கொடுத்ததா?**

தேர்வுக் குழு எவ்விதத்திலும் அழுத்தம் கொடுக்கவில்லை. எதிர் வரும் ஜனவரி மாதம் வரையில் எவ்வித சர்வதேச போட்டிகளும் இல்லை. எனவே தான் தற்போது ஓய்வுபெற முடிவெடுத்தேன். அவ்வாறு இன்னும் ஆறு மாதங்கள் காத்திருந்தால் என்னால் சிறப்பாக களத்தில் செயற்பட முடியுமா என்ற சந்தேகமும் உள்ளது.

கடந்த கலங்களில் பெரும்பாலான கிரிக்கெட் வீரர்கள் அழுத்தம் காரணமாகவே ஓய்வு பெற்றனர். எனவே எனக்கு அவ்வாறான நிலையொன்று வருவதற்கு முன்னரே நான் ஓய்வு பெறுவது சந்தோசமாகவுள்ளது.

இந்த இரு வீரர்களுக்கும் சிறப்பான பாதை ஒன்றை அமைத்து கொடுத்தால் இலங்கை கிரிக்கெட் இவர்களிடமிருந்து சிறந்த பெறுபேற்றை எதிர்பார்க்கலாம்.

**■ உங்களுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம் எதுவும் உள்ளதா?**

சுமார் 17 வருடகால கிரிக்கெட் வாழ்க்கையில் மறக்க முடியாத பல அனுபவங்கள் உள்ளன. குறிப்பாக முதல் டெஸ்ட் போட்டியை மறந்து விட முடியாது. பலத்த கஷ்டங்களுக்கு மத்தியிலேயே அணிக்குள் இடம் கிடைத்தது.

இதேபோன்று லோட்ஸ் மைதானத்தில் இடம் பெற்ற போட்டியில் 193 ஓட்டங்களை குவித்ததை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது.

இதேபோன்று என்னுடைய சகல போட்டிகளையும் என்னால் மறந்து விட முடியாது. ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெறவேண்டும் என்ற எண்ணத்துடனேயே

**■ இலங்கை அணி தற்போது பாரிய பின்னடைவை சந்தித்துள்ளது. இலங்கை இருபதுக்கு - 20 அணி மீண்டெழ எவ்வளவு காலம் எடுக்கும்?**

இலங்கை அணி தனது பின்னடைவில் இருந்து மீண்டெழ சிறிது காலம் எடுக்கும். இலங்கையில் பிரிமியர் லீக் போன்ற இருபது- 20 போட்டிகளை நடத்தினால் திறமையான வீரர்களை இனம் கண்டு கொள்ள முடியும்.

குறிப்பாக இந்தியா, தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் தனது நாடுகளில் இருபது-20 போட்டிகைள நடத்தி திறமையான வீரர்களை இனம் கண்டுள்ளன.

ஐ.பி.எல். போட்டிகளின் மூலம் வெளியுலகிற்கு வந்தவரே மக்ஸ்வெல். இதுபோன்று இலங்கையிலும் கூடுதலான இருபது -20 போட்டிகள் நடத்த வேண்டும். வெளிநாடுகளிலிருந்து சிரேஷ்ட வீரர்களை நாட்டுக்கு வரவழைத்து அவர்களின் மூலம் நிறைய விடயங்களை கற்றுக் கொள்ளலாம். இவ்வாறான செயற்பாடுகளை செய்வதன் மூலம் ஒரு சிறப்பான அணியை கட்டியெழுப்ப முடியும்.

**■ அணியில் அடித்து ஆடக் கூடிய வீரர்கள் தற்போது உள்ளனரா?**

எமது அணியில் முக்கிய ஒரு பிரச்சினையாக இந்த விடயம் உள்ளது. அணியில் அடித்து ஆடுமளவிற்கு எந்த வீரர்களும் இல்லை. அடித்து ஆடுவதற்கு பலம் தேவை. ஏனைய நாட்டு அணிகளிலும் இந்த பிரச்சினையுள்ளது. இதுவரை எமது அணியில் அடித்து ஆடுமளவிற்கு வீரர்களை நான் இனம்காணவில்லை.

திசர பெரேராவுக்கு அடித்தாடும் திறமையுள்ளது. அவருக்கும் இன்னும் பயிற்சிகளை வழங்க வேண்டும். ஒரு இருபது-20 அணியில் பின்வரிசையில் அடித்தாடும் வீரர்கள் கட்டாயம் தேவை. இது தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும்.

**■ பயிற்சியாளராக செயற்பட விருப்பம் உள்ளதா?**


எதிர்காலத்தில் பயிற்சியாளராக செயற்படமாட்டேன் என நான் தனிப்பட்ட முறையில் தீர்மானித்து விட்டேன். எனினும் யாருக்கும் என்னிடமிருந்து தனிப்பட்ட முறையில் உதவிகள் தேவைப்படுமாயின் நான் பயிற்சி வழங்க தயாராக உள்ளேன்.

**■ அரசியலுக்கு வருவீர்களா?**

அரசியல் தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. அரசியல் தெரியாமல் அதற்குள் காலடி எடுத்து வைத்து துன்பத்துக்குள்ளானவர்கள் நிறையப் பேர் உள்ளனர். இனம், மதம், பேதம் இல்லாமல் எனக்கு ஆதரவுள்ளது. இதை இல்லாமல் செய்துகொள்ள எனக்கு விருப்பம் இல்லை. அரசியல்வாதி என்ற பெயர் இல்லாமல் கூட என்னால் மக்களுக்கு சேவை செய்ய முடியும் ●

# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்:-அரச கட்டளை
பாடல்:-புத்தம் புதிய புத்தகமே
இசை:-
பாடகர்கள்:-ரி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா




புத்தம் புதிய புத்தகமே
உன்னை புரட்டி பார்க்கும் புலவன் நான்
பொதிகை வளர்ந்த செந்தமிழே
உன்னை பாட்டில் வடிக்கும் கவிஞன் நான்
பள்ளியறை என்னும் பள்ளியிலே
இன்று புதிதாய் வந்த மாணவி நான்
ஏட்டை புரட்டி பாட்டை படிக்கும்
வீட்டு புலவன் நாயகி நான்
பள்ளியறை என்னும் பள்ளியிலே...

அஞ்சு விரல் பட்டால் என்ன
அஞ்சுகத்தை தொட்டால் என்ன
தொட்ட சுகம் ஒன்றா என்ன
துள்ளும் உள்ளம் பந்தா என்ன
தொட்ட சுகம் ஒன்றா என்ன
துள்ளும் உள்ளம் பந்தா என்ன
செவ்விதழை கண்ணால் என்ன
தேனெடுத்து உண்டால் என்ன
கொத்து மலர் சென்டா என்ன
கொஞ்சும் மன்னன் வண்டா என்ன

புத்தம் புதிய புத்தகமே
உன்னை புரட்டி பார்க்கும் புலவன் நான்
ஏட்டை புரட்டி பாட்டை படிக்கும்
வீட்டு புலவன் நாயகி நான்
புத்தம் புதிய புத்தகமே...

கையணைக்க வந்தால் என்ன
மெய்யணைத்து கொண்டால் என்ன
கையணைக்க வந்தால் என்ன
மெய்யணைத்து கொண்டால் என்ன
முத்தமழை என்றால் என்ன
சொர்கம் ஒன்று உண்டா என்ன
முத்தமழை என்றால் என்ன
சொர்கம் ஒன்று உண்டா என்ன
வெட்கம் வரும் வந்தால் என்ன
வேண்டியதை தந்தால் என்ன
வெட்கம் வரும் வந்தால் என்ன
வேண்டியதை தந்தால் என்ன
இன்னும் கொஞ்சம் சொன்னால் என்ன
இன்பம் இன்பம் என்றால் என்ன

புத்தம் புதிய புத்தகமே
உன்னை புரட்டி பார்க்கும் புலவன் நான்
ஏட்டை புரட்டி பாட்டை படிக்கும்
வீட்டு புலவன் நாயகி நான்
புத்தம் புதிய புத்தகமே..

# பழங்கஞ்சியின் அற்புத பலன்கள்



முதல் நாள் சோற்றில் நீரூ ற்றி. மறுநாள் சாப்பிடும் இந்த பழைய சாதத்தில் தான் பி6. பி12 ஏராள மாக இருக்கிறது என்கிறார் அமெரி க்காவில் இருக்கும் ஒரு மருத்து வர்.

தவிரவும் உடலுக்கு. குறிப்பாக சிறு குடலுக்கு நன்மை செய்யும் 'ட்ரில்லியன்ஸ் ஆஃப் பக்றீரியாஸ்' ('மில்லியன்' அல்ல 'ட்ரில்லியன்') பெருகி நம் உணவுப் பாதையையே ஆரோக்கியமாக வைத்திருக்கிறதாம்!

கூடவே இரண்டு சிறிய வெங் காயம் சேரும்போது. நோய் எதி ர்ப்பு சக்தி அபரிமிதமாக பெருகு கிறதாம். அப்புறம் பன்றிக் காய் ச்சல் என்ன. எந்தக் காய்ச்சலும் நம்மை அணுகாது!

பழைய சாதத்தின் மகத்துவ த்தைப் பற்றி அமெரிக்க விஞ் ஞானி ப்ரதீப் கூறியதில் இருந்து சில.

♦ "காலையில் சிற்றுண்டியாக இந்த பழைய சாதத்தைக் குடிப்ப தால். உடல் லேசாகவும். அதே சம யம் சுறுசுறுப்பாகவும் இருக்கிறது.

♦ இரவே தண்ணீர் ஊற்றி மூடி வைப்பதால் இலட்சக்கணக்கான நல்ல பக்றீரியாக்கள் இதில் உருவாகிறது.

♦ மறுநாள் இதை குடிக்கும்போது உடல் சூட்டைத் தணிப்பதோடு குடல்புண். வயிற்று வலி போன்றவற் றையும் குணப்படுத்தும்.

♦ அதுமட்டுமல்லாமல் இதிலிருக் கும் நார்ச்சத்து. மலச்சிக்கல் இல்லாமல் உடலை சீராக இயங்கச் செய்கிறது.

♦ இந்தப் பழைய சாதம் உணவு முறையை சில நாள் தொடர்ந்து நான் சாப்பிட்டதில் நல்ல வித்தியா சம் தெரிந்தது. இரத்த அழுத்தம் கட்டுக்குள் வந்துவிட்டதோடு. உடல் எடையும் குறைந்தது" என்கிறார்.

♦ மிகவும் முக்கியமான விட யம் என்னவென்றால் உட லுக்கு அதிகமான சக்தியை தந்து நாள் முழுக்க சோர்வின்றி வேலை செய்ய உதவியாக இருக்கிறது.

♦ அலர்ஜி. அரிப்பு போன்றவை கூட சட்டென்று சரியாகி விடும்.

♦ அல்சர் உள்ளவர்களுக்கு இதைக் கொடுத்து வர. ஆச்ச ரியப்ப டும் அளவிற்குப் பலன் கிடைக்கும்.

♦ எல்லாவற்றிற்கும் மேலாக நோய் எதிர்ப்பு சக்தி அதிகளவில் கிடைப்பதால். எந்த நோயும் அரு கில்கூட வராது.

♦ ஆரோக்கியமாக அதே சம யம் இளமையாகவும் இருக்கலாம்

# மலிவாய் கிடைக்கும் உடல் ஆரோக்கியம்



பழுத்த அல்லது கறுப்பு புள்ளி விழுந்த வாழைப்பழம் கெட்டு விட்டது என எண்ணி நம்மில் பலர் தூக்கி எறிவது. சிலர் அதை அருவ ருப்பாகவும் காண்பார்கள்.

ஆனால். உண்மையில் நன்கு பழுத்த வாழைப்பழத்தில் எவ்வளவு சிறப்புகள் இருக்கு என்பது யாரு க்குத் தெரியும்.

**மன அழுத்தம்!**

வாழைப்பழத்தில் டிரிப்டோ பென் அதிகமாக இருக்கிறது. இது நாட்பட்ட மன அழுத்தத்தால் பாதி க்கப்பட்டுள்ளவர்களால். இயற் கையான முறையில் தேவை யான அளவு செரோடோனின் சுரக்க வைக்க முடியாது.

வாழைப்பழம் உண்பதன் மூலம் டிரிப்டோ பென். செரோடோனினாக மாற்றப்பட்டு. மன அழுத்தம் குறை யவும் உதவுகிறது.

**உடற்சக்தி!**

எல்லா பழங்களிலும் அதிக மாக இயற்கை சர்க்கரை அளவு இருக்கிறது. ஆனால். வாழை ப்பழத்தில் தான் ஃப்ருக்டோஸ். குளுக்கோஸ் மற்றும் சுக்ரோஸ் என மூன்றின் கலவையும் அதி கமாக இருக்கிறது. இது உடலுக்கு தேவையான சக்தியை முழுமை யாக அளிக்கிறது. மேலும். உடலில் வளர்சிதை மாற்றம் சீராக இருக்க வும் உதவுகிறது.

**மூளை நலன்!**

தினமும் இரண்டு வாழைப்ப ழம் சாப்பிடு வதால். மூளைக்கு தேவையான அளவு சக்தி கிடைக்க பெறுகிறது. இதில் இருக்கும் அதிக ளவிலான பொட்டாசியம் நியூரல் செயற்திறனை. செல்லுலார் செயற் பாட்டினை சீராக்குகிறது.

**கோப்பி வேண்டாம்!**

இடைவேளையில் கோப்பி குடி க்கும் பழக்கம் உள்ளவர்கள் அத ற்கு பதிலாக ஒரு வாழைப்பழம் சாப் பிடலாம். இது. உடல் மற்றும் மூளையை சுறுசுறுப்பாக இயங்க வைக்கும்.

**இரத்த அழுத்தம்!**

தினமும் இரண்டு வாழைப்பழம் சாப்பிடுவதால் குறைந்த இரத்த அழுத்தத்தை சீராக்க மற்றும் இதய நலனை மேம்படுத்த உதவுகிறது.

**இரத்தமும். எலும்பும்!**

இதில் இருக்கும் உயந்த அள விலான விற்றமின் மற்றும் கனிம சத்துக்கள் ஒட்டுமொத்த உடல் நலனை ஊக்குவிக்கிறது. மேலும். இர த்த சுழற்சி மற்றும் எலும்புகளின் வலிமையை அதிகப்படுத்துகிறது.

வாழைப்பழத்தில் இருக்கும் கல்சியம் சத்து எலும்பின் அடர்த் தியை சீராக்குகிறது. மேலும். இரத்த சோகை மற்றும் குறைந்த வெள்ளை இரத்த அணுக்கள் எண்ணிக்கை உண்டாகாமல் காக்கிறது.

**நோய் எதிர்ப்பு!**

வாழைப்பழத்தில் இருக்கும் ஆண்டி-ஆக்ஸிடெண்ட் நோய் எதிர்ப்பு சக்தியை ஊக்குவித்து. இதய நோய். புற்றுநோய் மற்றும் தசை கோளாறுகள் உண்டாகாமல் பாதுகாக்கிறது.


எங்கும் கிடைக்காத அதிசிறந்த விலைகள்
காகில்ஸ் புட்சிட்டி இடமிருந்து மட்டுமே
ஏதேனும் சுப்பர் மார்க்கட் வலையமைப்பு கீழுள்ள உற்பத்திகளுக்கு எம்மிலும் குறைந்த விலை தந்தால்
அவர்களை விட சிறந்த விலை தர நாம் தயார்.*
அனைத்து சலுகைகளும் 2016 செப்டெம்பர் 15 முதல் 22 வரை மட்டுமே. புத்தம்புது உற்பத்திகள் தொடர்பான சலுகைகள் செப்டெம்பர் 18 வரை மட்டுமே.
75/-
கடலை 1kg**
253/-
பயறு 1kg**
185/-
135/-
காகில்ஸ் மெக்கரல் 425g**
ரூ.64.00 45/500g
ரூ.109.00 84/500g
ரூ.192.58 159/500g
ரூ.203.00 179/500g
Kotmale
ரூ.200.00 ரூ.180.00
ரூ.375.00 ரூ.299.00
NESPRAY
ரூ.810.00 ரூ.770.00
ரூ.195.00 ரூ.175.00
ரூ.320.00 ரூ.272.00
Maggi Chicken
ரூ.50.00 ரூ.42.00
Chocolate Cream
ரூ.190.00 ரூ.169.00
ரூ.460.00 ரூ.368.00
ரூ.179.00
ரூ.225.00 ரூ.200.00
Sunlight
ரூ.155.00 ரூ.139.00
ரூ.160.00 ரூ.140.00
ரூ.96.00
ரூ.1288.00 ரூ.1094.00
Seven Seas 100 capsules
காகில்ஸ் லோயல்டி மெம்பர்கள் 30% கழிவை அனுபவிக்கலாம்
2016 செப்டெம்பர் 15 முதல் 29 வரை மட்டுமே.
ரூ.350.00 ரூ.245.00
ரூ.670.00 ரூ.469.00
CORN FLAKES
ரூ.465.00 ரூ.325.50
Horlicks
ரூ.395.00 ரூ.276.50
MilCo CHEESE
ரூ.550.00 ரூ.385.00
ரூ.210.00 ரூ.147.00
ரூ.590.00 ரூ.413.00
ரூ.525.00 ரூ.367.50
KRISCO
ரூ.270.00 ரூ.189.00
ரூ.570.00 ரூ.399.00
ரூ.215.00 ரூ.150.50
ரூ.1850.00 ரூ.1295.00
இப்பொழுதே காகில்ஸ் லோயல்டி மெம்பராகினால்
ரூ.500 பெறுமதியான ஷொப்பிங்
இலவசம்
Cargills
Cargills food city
வீடு செல்லும் போது

சிறுகதை

# அம்பலவாணர் கட்டமைப்பு



சிற்றூர்தியில் ஏறிய அம்பலவாணர், தம்பி என்னை ஒருக்கா அரசடிச்சந்தியில் இறக்கிவிடும் என்று கூறினார். யாழ்ப்பாணத்திலிருந்து நாவற்குழி தச்சன் தோப்பு, தனங்கிளப்பூடாக சாவகச் சேரி செல்லும் சிற்றூர்தி அது.

அரசடிச்சந்தியா? அது எங்கை ஐயா இருக்கு...

தச்சன்தோப்பு தபாறகந்தோர், பிரதேசசபை கடந்ததும் வாற முதல் சந்தி தம்பி.

ஐயா, அது மருதடிச்சந்தி ஐயா, அரசடிச்சந்தியென ஒரு இடம் இந்த வழிப் பயணத்தில் இல்லை ஐயா.

சிற்றூர்தியில் நிறைந்திருந்தவர்களுக்கும் இவர் குறிப்பிடும் இடம் தெரியவில்லை.

A9, நெடுஞ்சாலையிலிருந்து, நாவற்குழியில் பிரிந்து மன்னார் செல்லும் A32 பாதையில், நாவற்குழி சந்தியிலிருந்து 3KM தூரப் பயணத்தில் தான் இறங்க வேண்டிய இடம் இருப்பது அவருக்கு நன்றாக ஞாபகம் இருக்கின்றது. ஆனால் நடத்துநருக்கு எவ்வாறு புரிய வைப்பதென்று குழம்பிக் கொண்டிருந்த போது.

ஐயா, நீங்கள் வேலன் பராய்க்கா செல்ல வேண்டும். நானும் அங்குதான் செல்கின்றேன். அமைதியாயிருங்கள் என்று முதியவர் ஒருவர் கூறவே

ஆமாம். ஆமாம் என ஆர்வத்துடன் திரும்பிப்பார்த்துக் கூறினார்.

வேலன்பராயில் யாரைச் சந்தி க்கப் போகின்றீர்கள்.

அப்படி அல்ல. அங்கு எனக்குத் தெரிந்தவர்கள் இருப்பார்கள் என நான் நம்பவில்லை. 35 வருடங்களுக்கு முன்னர் நாங்கள் ஊரை விட்டுட்டுப் போய் விட்டம். 2000 ஆண்டு அங்கு நடந்த செல் வீச்சுகளுக்குப் பயந்து ஏனையவர்களும் இடம் பெயர்ந்து விட்டதாக அறிந்தேன். என்னு டைய காணி ஒன்று அங்கே உள்ளது. அதைப்பார்த்து வரலாம் என்று தான்...

இவர்களது பேச்சு தொடர்வதைக் கண்ட இளைஞன் ஒருவன் எழுந்து ஐயா இங்கே வந்து இவரருகில் இருந்து பேசுங்கள் என தனது இருக்கையை விட்டு எழுந்தான்.

நல்லது தம்பி, நன்றி, நீர் எங்கை தம்பி படித்தனீர்.

நான் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் படித்தனான். இப்ப யாழ்ப்பாணத்தில் தொழிற்கூடம் ஒன்றை நடத்தி வருகின்றேன்.

உங்களைப்போன்ற மாணவர்களால்தான் பாடசாலைக்குப் பெருமை வந்து சேர்கிறது. மூத்தவர்களை மதிக்கும் இயல்பும், பண்பும் உங்கள் பாடசாலை நன்றாக உங்களுக்குப் பயிற்றுவித்திருக்கிறது.

ஐயா, நானும் தற்போது வேலன் பராயில்தான் வசிக்கின்றேன் ஒரு போதும் உங்களை நான் காணவில்லை. அங்கு உறவுகள் யாரா வது இருக்கிறார்களா?

இல்லை, நாங்கள் பிறந்த இந்த மண்ணைப் பிரிந்து போய் 35 வருடங்களாகின்றது. இப்ப கனடாவில் வசிக்கிறம். ஆரம்ப நாட்களில் அங்கு வசதியாக வாழ லாம் என்றுதான் எண்ணின னான். தொழில் செய்யும் வரை வசதியாகத்தான் இருந்தம். ஓய்வு காலத்தில் மிகவும் சிரமம். தனிமை, வெறுமை, ஒதுக்கப்படுகிறோம், ஒரம்கட்டப்படுகின்றோம் என்ற உணர்வு ஏற்படுகின்றது. பிள்ளைகள் நல்லாய்த்தான் பராமரிக்கிறார்கள் உணர்வுகளை எண்ணங் களைப் பங்கிடத்தான், புரிந்து கொள்ளத்தான் யாரும் இல்லை. ஒருவர் இருவர் சந்தித்தாலும் சந்தோசத்துடன் தான் பழக வேண் டியிருக்கு. அதனாலை ஊரிலை உள்ள சுத்தமான காற்று, அன் பான மனிதர்கள், சத்தான உணவு, சுதந்திரமான வாழ்க்கை எல்லாம், அடிக்கடி மனதில் எழுந்து அரிக்கும். அதனால்தான் பிள்ளைகள் எனது பயண ஒழுங்குகளை எல்லாம் செய்து தந்து அனுப்பினவை.

இங்கை உறவுகள் யாருமில்லை என்றால் எங்கு தங்கப் போகிறீர்கள்?

யாழ்ப்பாணத்திலை ஒரு ஹோட்டலில் தங்கியுள்ளேன். காணியைப் பார்த்துக் கொண்டு இன்றைக்கே யாழ்ப்பாணம் போய் விடுவேன்.

தம்பி, மருதடிச்சந்தியிலை நீபாட்டும் நாங்கள் இறங்க வேணடும்

விலத்திக் கொண்டு முன்னுக்கு வாருங்கோ ஐயா இறக்கிவிடுறன் என்று கூறி இறக்கி விட்டுட்டு செல்கிறான் நடத்துனன்.

தம்பி நீ யொருவன்தான் முன்னுக்கு வாங்கோ என்று கூறுகிறாய் மற்ற நடத்துனர்கள் எல்லாம் பின்னுக்குபோ, பின்னுக்குப்போ என்று கூறுகிறார்கள். ஏன் உள்ளே போங்கோ என்று கூறலாம் தானே என்று கூறியவாறு, இறங்கிச் செல்கின்றனர் இருவரும்.

ஐயா நான் தர்மலிங்கம் 90 ஆண்டு வரை மயிலிட்டியில் சிறப்பாக வாழ்ந்துவந்தனான். யுத்தம் காரணமாய் இடம்பெயர்ந்து இந்த ஊருக்கு வந்தம். ஊரிலை அப்ப கொஞ்ச மக்கள்தான் இருந்தவை. அனேகர்இங்கிருந்து இடம் பெயர்ந்து விட்டனர். வந்த எங்களது பிள்ளைகளும் இங்கே இருந்த பிள்ளைகளும் படிப்பில்லாமல் திரியவே அவர்களை ஒன்றி ணைத்துப் பாடம் சொல்லிக் கொடுத்தம். இந்தப் பகுதியிலை போராளிகளின் பெரிய முகாம் ஒன்றிலிருந்தது. செழியன் என்பவர் பொறுப்பாக இருந்தார். அவர் இந்தப் பிள்ளைகளின் கல்வி, சமூகமேம்பாடு, நல்லொழுக்கம் போன்றவற்றில் அதிக அக்கறை எடுத்தார். அவரது காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வாசிகசாலை, நூலகம், தொழிற்பயிற்சிக் கூடம் என்பன நிறுவுவதற்குக் காணி இல்லாமல் இருந்தது. அப்போது தான் கனடாவுக்குப் போய்விட்ட ஒருவரின் காணி இருக்கென்று கூறி அதற்குள் அமைத்துச் செயல்பட்டோம். கிட்டத்தட்ட 30 பரப்புக்காணி காடு மண்டிக் கிடந்தது. துப்பரவு பண்ணிப் பண்ணி நாம் மெல்லமெல்ல வளர்ந்து பூங்கா, பாற்பண்ணை, கோழிப்பண்ணை என விரிவடைந்து ஏறக்குறைய அவருடைய காணி முழுவதையும் பயன்படுத்தி வருகிறோம். அது சிலவேளைகளில் உங்கள் நிலமாகவும் இருக்கலாம். வந்து பார்த்தால் தெரிந்து விடும். அதற்கு முன்னர் எங்கடைவீட்டை போவம் ஆறுதலெடுத்துவிட்டுப் பின்னர் காணியைப் பார்ப்பம் என்றார்.

பார்வதி இங்கே வாரும், இரண்டு பேருக்குக் குடிப்பதற்கு ஏதாவது தாரும்.

யாரப்பா வந்திருக்கிறது என எட்டிப்பார்த்த பார்வதி, ஐயா மோர் கொண்டு வரவா

இந்த வெயிலுக்கு நன்றாயிருக்கும் தாருங்கள் என வாங்கிக் குடித்தார். மோர் என்றால் இதுதான் மோர்! உப்பு, புளி, காரம் எல்லாம், ஒன்றையொன்று முந்தப் பார்த்து சமனான அளவில் சுவையாகவும் இருக்கு தென்பாகவும் இருக்கு. நாங்களும் மோர் என்று ஒரு பானம் பைக்கட்டில் வரும் அதைத்தான் குடிப்பது.

இன்னும் கொஞ்சம் தரவா ஐயா

ஐயையோ இதுவே அதிகம். நன்றாயிருந்ததால் முழுவதையும் குடித்து விட்டேன்.

சரி.சரி காணியை ஒருக் காப் பார்த்துவரலாமா? நீங்களும் உடன் வருவீர்களா?

ஓமோம், பார்ப்பம், அதற்கு முன்னர் மதிய உண வெடுப்பம்.

இல்லை இல்லை உங்களுக்குச் சிரமம் வேண்டாம். நான் பழங்களும் பிஸ்கற்றுகளும் வைத்திருக்கிறன்.

அவை இருக்கட்டும். மதிய நேரத்தில் வீட்டுக்கு வந்தவரைச் சாப்பிடப் பண்ணாமல் அனுப்பமுடியாது.

செழியன் எங்களுக்கு எல்லாவகையிலும் உதவினவர் என்றெல்லோ கூறினனான். இந்தப்பகுதிக் கிணற்று நீர் உவராக மாறிவருவதை அறிந்து, மக்கள் குடிதண்ணீருக்காக தூரம் செல்ல வேண்டியிருந்ததைக் கண்டு, இப்பகுதிக் குளங்கள் அனைத் தையும் மக்களையும் ஈடுபடுத்தி தூர் எடுத்து ஆழமாக்கி மழை நீர் முழுவதையும் அதிலே சேமித்தார். தற்காலிக தண்ணீர் தொட்டிகள் அமைத்துக் குடிநீர் வழங்கினார். ஆனால் நீண்டகாலத் தேவைக்காக மழை பெய்ய வைக்கவும் உபாயம் கண்டார். மரங்கள் நாட்டி வளர்க்கும் செயற்பாடு வேகமாக நடந்தது. இந்தப்பகுதி உவர் மண்ணில் செளித்து வளரக்கூடிய வரட்சியைத் தாக்குப்பிடிக்கக் கூடிய மருத மரங்களை வீதி ஓரங்களிலும் வெறும் காணிகளிலும் நாட்டி வளர்க்கத் தூண்டினார்.

ஓமோம் நானும் பார்த்தன். தெரு ஓரம் எல்லாம் மருதமரங்கள் செளித்து வளர்ந்திருக்கு.

அவ்வாறான மரநடுகை செயற்பாட்டின்போது தூரத்திலிருந்து குறிபார்த்துச்சுடும் சுடுகலனால் அவரைக் கொன்று விட்டார்கள். வெகுண்டெழுந்த மக்கள் தாமாகவே மேலும் மேலும் மரம் நாட்டி வளர்த்து வரு கின்றனர். இந்த வீதிக்குச் செழியன் வீதி எனப் பெயர் சூட்டினார்கள். சந்தியில் மருதமரம் நாட்டி மருதடிச்சந்தி என்று பெயரும் இட்டு அழைத்தார்கள். நீங்கள் அதிககாலம் இங்கு இல்லாததால் உங்களுக்கு இவை ஒன்றும் தெரிந்திருக்காது.

விபரங்களை அறிந்து கொண்ட அம்பலவாணர், தான் அடையாளம் வைத்திருந்த எல்லைகளையும் அயலவர்கள் தந்த விபரங்களுடனும், தனது காணியுள் தான் சமூக மன்றுகள் பண்ணைகள் அமைந்திருப்பதை அறிந்து கொண்டார். ஒருபக்கம் ஏமாற்றமாகவும் மறுபுறம் சந்தோசமும் அடைந்தார்.

காணிச் சொந்தக்காரன் வந்து நிற்பதறிந்து, சனசமூக நிலையத்தலைவர், தொழிற் பேட்டைப் பொறுப்பாளர் பண்ணை மேற்பார்வையாளரும் ஊர்மக்களும் குவிந்தனர்.

ஐயா உங்கள் காணியுள் உங்கள் அனுமதியின்றிப் பிரவே சித்தது மிகப் பெரிய குற்றம் ஆனால் யாரை எப்படித் தொடர்புகொள்வது என்று தெரியாமலிருந்தது. எமது செயற்பாடுகளுக்கு ஏற்ற இடமாகவும் இருந்தது. ஆதலால் எல்லாவற்றையும் இதனுள் நிறுவிவிட்டோம். இப்ப என்ன செய்யலாம்.

நானும் அதுதான் யோசிக்கின்றேன். என்ன செய்வதென்று புரியவில்லை.

ஐயா இதற்கான விலையை நாங்கள் தருவதற்குச் சம்மதமாயிருக்கிறோம். நீங்கள் அதற்கு இணங்கினால் நீங்கள் கூறும் விலையைத் தருகிறோம் என்றார் சனசமூக நிலையத் தலைவர்.

எவ்வளவு தருவீர்கள் இங்கு ஒரு பரப்புக் காணி 10 இலட்சம் பெறுமா இந்தப் பகுதியில்?

பத்தல்ல, இருபது கேட்டாலும் நாங்கள் தரக்கடமைப்பட்டுள்ளோம். ஐயா. ஆனால் அந்தளவு போகாது.

சரி. ஒரு பேச்சுக்குப் பத்துஇலட்சம் என்று வைத்தாலும் கூட ஒரு மூன்று அல்லது மூன்றரைக் கோடிதான் வரும் இந்த மூன்று அல்லது மூன்றரை ஏன் ஐந்து கோடி ரூபா இருந்தாலும், இவ்வளவான ஒரு கட்டமைப்பை இக்கிராமத்தில் இனிக் கட்டி எழுப்பமுடியாது. ஊருக்கு மத்தியிலே இரு ஊரணிக்கும் (நீர்ச்சுனை) போல இக்கிராம மக்கள் அனைவரையும் வாழவைத்துக் கொண்டிருக்கும் இந்தக் கட்டமைப்புக்கு எனது குடும்பம் அன்பளிக்கின்றது என வைத்துக் கொள்வோமா?

ஐயா, ஐயா என எல்லோரும் உணர்ச்சிப் பெருக்கால் பேசமொழியின்றித் தடுமாறினர்.

அப்போது முன்வந்த தர்மலிங்கம், ஐயாவின் விருப்பப்படி அவர் காணியை எமக்கு இலவசமாகத் தரட்டும் ஆனால் நாங்கள் இந்தக் கட்டமைப்புக்கு அம்பலவாணர் கட்டமைப்பு எனப் பெயரிடுவோம். சரியா.

சரி சரி அதுதான் சரி என மக்கள் குதூகலித்தனர்.

அம்பலவாணர் காணியைச் சட்டப்படி வழங்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினார்.

**மயூரதன்**
**யாழ்ப்பாணம்.**

facebook

# உண்மை அன்பு மட்டுமே

ராஜா இரவில் மாறுவேடத்தில் நகர்வலம் வந்தார். இரண்டு மெய்க்காப்பாளர்களும் கூடவே சென்றனர்.

திடீரென்று கடுமையான மழையும், காற்றும் அடித்தன. வானம் இருண்டு போனது . ராஜா காவலாளிகளை விட்டு வழி தவறிப் போய்விட்டார்.

எங்கும் காரிருள்,சற்று தொலைவில் ஒரு சிறு குடிசை தெரிந்தது. அதிலிருந்து லேசான வெளிச்மும் வந்து கொண்டிருந்தது. ராஜா வேகமாக அதனை நோக்கி நடந்தார்.

அதற்குள்ளே கந்தல் ஆடை அணிந்த ஒரு மனிதனைத் தவிர வேறு யாருமில்லை. ராஜா உள்ளே நுழைந்தும் அவன் எந்த சலனமும் இல்லா -மல் அமர்ந்திருந்தான்.

மாறு வேடத்தில் இருந்த போதிலும், அவன் மரியாதை தராமல் அமர்ந்திருந்ததில் ராஜாவுக்குக் கொஞ்சம் கோபம் வந்தது . ஏம்ப்பா! உன் வீட்டுக்கு வந்திருக்கேன் , நீ மரியாதையே இல்லாம, ஒரு வணக்கம் கூட சொல்லாம உக்காந்திருக்கியே?" என்றார்.

பதிலுக்கு அவன், "நீதான் என் வீட்டுக்குள்ள அடைக்கலமா நுழைஞ்சிருக்க. உனக்கு எதுக்கு நான் வணக்கம் சொல்லணும்?" என்றான்.

ராஜாவால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் எப்போதும் நகர்வலம் போகையில் ஒரு பொற்காசு மூட்டையை உடன் வைத்திருப்பார்.

அதை அவனிடம் பிரித்துக் காட்டி விட்டு "பார்த்தாயா? நான் எவ்வளவு பெரியவன் என்பதை இப்ப எனக்கு வணக்கம் சொல்வாயா என்றார்.

அவனும் பதிலுக்கு, ஒரு ஏழை பக்கத்தில இருந்தும் ஒரு மூட்டை பொற்காசை நீயே வச்சிருக்கியே, உனக்கு எப்படி வணக்கம் சொல்வது? என்றான். ராஜா கோபமாய் ஒரு காசை அதிலிருந்து எடுத்து அவனிடம் வீசி, "இப்ப வணக்கம் சொல்வாயா?" என்றார்..

காசைத் தொடாமல் அவன் சொன்னான்,

"ஒரு மூட்டை காசை வச்சுக்கிட்டு அற்பமா ஒத்தக் காசை வீசுறியே, உனக்கா வணக்கம் சொல்வேன்?"

அரசர் இன்னும் உக்கிரமானார். பாதி மூட்டையை அவனருகே பிரித்துக் கொட்டி விட்டுக் கேட்டார், "எங்கிட்ட இருந்ததுல சரி பாதியைக் கொடுத்துட்டேன். இப்பவாவது வணக்கம் சொல்வியா?"

மெல்லிய புன்னகையுடன் அவன் சொன்னான், "உங்கிட்ட இருக்கிற அளவுக்கு இப்ப எங்கிட்டேயும் இருக்கே! இப்ப நீயும் நானும் சமமாயிட்டோமே. சரி சமமா இருக்கிற உன்னை எதுக்கு நான் மதிக்கணும்? "

ராஜாவுக்கு ஆத்திரம் கண்ணை மறைத்தது. மிச்சமிருந்த மூட்டையும் அவனிடத்தில் வீசி விட்டார், "இருந்த எல்லாத்தையுமே கொடுத்துட்டேன். இப்பவாவது வணக்கம் சொல் என்றார்..

அவன் சிரித்துக் கொண்டே சொன்னான் , இப்ப உங்கிட்ட ஒன்னுமே இல்லை. ஆனா எங்கிட்ட ஒரு மூட்டை தங்கம் இருக்கு. இப்ப நீதான் எனக்கு வணக்கம் சொல்லணும்?" என்றான். ராஜா வாயடைத்துப் போனார்.

# போராட்டம்

நம்மூரு தண்ணீய திறந்து விட்டா, நாம வேடிக்கையா பார்த்துக்கிட்டு இருக்க முடியும் டேய், நாளைக்கு போராட்டம்டா, நம்ம கட்சி சார்பாக எப்படியும் ஒரு இலட்சத்துக்கு மேல ஆட்களை கூட்டி வந்துடு, எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. எப்படியும் ஒரு் கைபார்த்துடும்டா.

அந்த கட்சியின் தலைவர் தனது தொண்டருக்கு கட்டளையிட்டு விட்டு மறு வேலைக்கு புறப்பட்டார். தலைவரின் கட்டளைப்படியே தொண்டர் கூட்டத்தை சேர்த்து ஒரு திடலில் அமர்த்தி விட்டார்.

எங்க ஊரு தண்ணீ எங்களுக்கே, எங்களுக்கே தண்ணீ இல்லே, இதுல மத்தவங்களுக்கு எப்படி தரமுடியும்" அப்படின்னு விராவேசமாக ஆளுக்கு ஆள் முழங்கினார்கள். ஒட்டுமொத்தமாக தண்ணீர் பாயும் கால்வாய்களின் ஓரம் குவிந்து ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

பொலிஸ் தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைத்தார்கள். கண்ணீர் புகைக்குண்டுகள் வசினார்கள். கூட்டம் ஆங்காங்கே சிதறி ஓடியது. கூட்டத்தை ஏற்பாடு செய்த அந்தக் கட்சியின் தலைவரும் தலைதெறிக்க ஓடி, ஒரு வீட்டிற்குள் புகுந்து கொண்டார்.

அவருடைய தொலைபேசி கிணுகிணுத்தது. என்னம்மா சொல்லும்மா, என்ன் விடயம், நான் இங்க போராட்டத்துல இருக்கேன் என்றார்.

"என்னாங்க, இங்க, உங்க அம்மா திடிர்ன்னு உடம்புக்கு முடியாம,"அடியே, ஒரு வாய் தண்ணி குடுடி, நா-வறட்டுது அப்படின்னு தடுமாறி தடுமாறி கேட்டாங்க. நானும், அவங்களுக்கு, தண்ணீ கொடுக்கலாம்ன்னு சமையல் அறைக்கு போனேன்.

"அங்கே,தண்ணீர்க் குழாயில் தண்ணீரே வராம நின்னு போயிருந்தது. வழக்கமா அது மெயின்டனென்ஸ் நாளு" எனக்கும் ஞாபகமில்லாம தண்ணீ பிடிச்சு வெக்காமேயே விட்டுட்டேன். இப்ப உங்க அம்மாவுக்கு இழுத்திட்டிருக்கு" நீங்களாவது கொஞ்சம் தண்ணீ எடுத்துட்டு வாங்க"ன்னு அழுதபடியே சொன்னாள் தலைவரின் மனைவி.

வீட்டிற்குள் ஒளிந்திருந்த தலைவர், வெளியே வந்து, ஒரு பாட்டிலாவது தண்ணீர் எடுத்து போகலாம்ன்னு ஓடும் கால்வாயை நோக்கி போனார்.

"கால்வாயை நோக்கி போனவரின் கால்களைப் பதம் பார்த்தது, ஒரு காவலரின் தடியடி. அப்படியே சுருண்டு விழுந்து "தண்ணீருக்கு" போராட்டமா? என்று முனகியபடியே மயங்கி கீழே விழுந்தார்.


## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 839

Search for people, places and things Nagendram Home

சப்திகா



மது



சாரோன்



பிரேம்நாத்




சத்தியன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 51

## டெங்குக் காய்ச்சல்

### 1) டெங்குக் காய்ச்சல் என்றால் என்ன?

டெங்குக் காய்ச்சல் என்பது வைரஸ் மூலம் பரவுகின்ற ஒரு தொற்றுநோயாகும். இதை ஏற்படுத்தும் வைரஸ்களாவன, **DEN1, DEN2, DEN 3, DEN4** என்பனவாகும். இந்த வைரஸ்களின் காவிகளாக ஈடிஸ் வகையைச் சேர்ந்த **( Aedes Algypti, Aedes Albopictos )** நோய்த் தொற்றுள்ள பெண் நுளம்புகள் செயற்படுகின்றன.

### 2) டெங்குக் காய்ச்சல் எவ்வாறு பரவுகின்றது? எவ்வாறு உண்டாகின்றது?

இது நுளம்புக்கடியின் மூலமாக மட்டுமே ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவும். ஈடிஸ், ஜிப்டி வகை நுளம்புகள் ஒரு வகை வெள்ளை நிற உடம்பு மற்றும் கால்களுடன் இருக்கும். இந்த நுளம்பு டெங்கு நோயாளியினுடைய இரத்தத்தை உறிஞ்சும் போது டெங்கு வைரஸையும் பெற்று விடுகின்றது. பின்பு இதே நுளம்பு இன்னொருவருடைய இரத்தத்தை உறிஞ்சும் போது இந்த டெங்கு வைரஸை அவருடைய இரத்தத்தில் பாய்ச்சுவிடுகின்றது. டெங்கு வைரஸானது இரத்தத்திலிருந்து நிணநீர் நாளங்களுக்கு சென்று அங்கு பெருக்கம் அடைகின்றன. போதிய எண்ணிக்கையில் பெருக்கம் அடைந்தவுடன் அறிகுறிகளை தோற்றுவிக்கின்றன.

### 3) டெங்குத் தொற்று ஏற்பட்ட எல்லோருக்கும் அறிகுறிகள் ஏற்படுமா? ஏற்படுமாயின் வைரஸ் தொற்றிய தினத்திலிருந்து எத்தனை நாட்களுக்குப் பின் அறிகுறிகள் ஏற்படும்?

சிலருக்கு இது எவ்வித அறிகுறியையும் உண்டாக்குவதில்லை. மேலும் சிலருக்கு சில அறிகுறிகள் மட்டுமே இருக்கும். டெங்கு நோயின் அடைப்புக்காலம் **(Incubation Perid )** அதாவது வைரஸ் தொற்றிய தினத்திலிருந்து நோய் அறிகுறிகள் உண்டாகும் தினம் வரையான காலம் 3-14 நாட்களாகும்.

### 4) நோய் அறிகுறிகளை கொண்ட நபர்களுக்கு எவ்வாறான நோய் நிலைமைகள் ஏற்படலாம்?

i. சாதாரண வைரஸ் காய்ச்சல் நிலைமை **(undifferentieted fever )**
ii. டெங்குக் காய்ச்சல் **(dengu fever -DF )**
iii. டெங்கு குருதிப்பெருக்கு நிலைமை **(dengue heamorhagic fever - DHF )**
iv. அசாதாரண நோய் அறிகுறியுடன் கூடிய டெங்கு நோய் நிலைமை **(Expended dengue syndrome)**

இவற்றுள் கூடுதலாக ஏற்படுவது டெங்குக் காய்ச்சல் **(DF)** மற்றும் டெங்கு குருதிப்பெருக்கு நிலைமை **(DHF)** ஆகும். இறுதியில் குறிப்பிடப்பட்ட அசாதாரண நோய் அறிகுறியுடன் கூடிய டெங்கு நோய் நிலைமை மிக அரிதாகவே ஏற்படுகின்றது. **(<1%)**

### 5) டெங்குக் காய்ச்சல் (DF) மற்றும் டெங்கு குருதிப் பெருக்கு (DHF) என்பவற்றின் அறிகுறிகள் என்ன?

#### டெங்குக் காய்ச்சல் (DF)

ஒரேடியாக ஏற்படும் காய்ச்சல், கடுமையான தலைவலி, பின்புறக் கண்களில் வலி, மூட்டுக்களிலும் தசைகளிலும் வலி (இதனால் எலும்பு முறிவு, காய்ச்சல் எனவும் அழைக்கப்படும்), சில நோயாளிகளுக்கு சிவப்பு நிற கொப்புளங்கள் ஏற்படுவதுடன் சில வேளைகளில் முரசு, மூக்கு, தோல் மற்றும் சளி என்பவற்றிலிருந்து குருதிக்கசிவு ஏற்படலாம்.

#### டெங்கு குருதிப்பெருக்கு (DHF)

இந்நோய் நிலைமை சில நோயாளர்களுக்கு ஏற்படும். இது எற்படுமாயின் 3 கட்டங்களாக ஏற்படும்.

- காய்ச்சலுடன் கூடிய கட்டம் **(febrile phase )**

a) 2-7 தினங்கள் வரை காணப்படும்.
b) தொடர்ச்சியான கடுமையான காய்ச்சல், முகம் சிவந்து போதல், உடம்பில் சிவப்பு நிற கொப்புளங்கள் தோன்றல், மூட்டுவலி, தசை வலி, தலைவலி, குமட்டல், வாந்தி மற்றும் வயிற்றோட்டம் என்பன ஏற்படலாம்.

- நெருக்கடியான கட்டம் **(critical phage/leakage phage)**

a) இது 1-2 தினங்களுக்கு காணப்படும்.
b) இக்கட்டம் சிறு குருதிக்கலன்களிலிருந்து குருதித் திரவவிழையம் கசிய ஆரம்பிக்கும் வேளையிலும் காய்ச்சல் தணிய ஆரம்பிக்கும் வேளையிலும் ஆரம்பமாகும்.
c) சிறு குருதிக்கலன்களிலிருந்து குருதித்திரவ விழையம் கசிந்து நெஞ்சறைக்குழி, வயிற்றுக்குழி என்பவற்றை அடைவதால் மூளை, சிறுநீரகம், ஈரல் போன்ற அத்தியாவசிய அங்கங்களுக்கு செல்லும் குருதியின் அளவு குறைந்து நோயாளி அதிர்ச்சி **(shock)** நிலைமைக்கு ஆளாகக்கூடும்.
d) இந்நிலைமையை இனங்கண்டு சிகிச்சை அளிக்காவிடின் நோயாளி மரணிக்கவும் வாய்ப்புண்டு.

- குணமடையும் கட்டம். **(convelescent/ Recovery phage)**

a) இது 2-5 தினங்கள் வரை காணப்படும்.
b) குணமடைவது போன்ற அறிகுறிகள், அதிகமான பசி, (சிலருக்கு) இதயத்துடிப்பு குறைவடையும், குணமடைவதற்கான கொப்புளங்கள் (சிவப்பு நிற பின்னணியில் வெள்ளை நிற கொப்புளங்கள் ) ,உடல் பூராகவும் அரிப்புணர்ச்சி காணப்படும் (உள்ளங்கை மற்றும் உள்ளங்கால்களில் அதிகமாக காணப்படும்), அதிகமாக சிறுநீர் கழித்தல் போன்ற அறிகுறிகள் ஏற்படும்.

### 6) டெங்குக் காய்ச்சல் வந்த நோயாளிக்கு மீண்டும் அந்த நோய் வர வாய்ப்புள்ளதா?

ஆம் வாய்ப்புள்ளது. ஏனெனில் 4 வகையான டெங்கு வைரஸ்கள் உள்ளன. ஒரு வகை டெங்கு வைரஸால் ஏற்படும் டெங்குக் காய்ச்சல் மறுமுறை வேறொரு வகை டெங்கு வைரஸால் ஏற்படலாம். எனவே ஒரு மனிதனுக்கு வாழ்நாளில் ஒரு முறைக்கு மேல் டெங்குக்காய்ச்சல் ஏற்படலாம்.

### 7) டெங்குக் காய்ச்சல் ஏற்பட்ட நோயாளர்களுக்கான அறிவுறுத்தல்கள் என்ன?

1. நோயாளிக்கு ஓய்வு வழங்கவும்
- கஷ்டமான வேலைகளையோ அல்லது பாரமான பொருட்களை தூக்கவோ இடமளிக்க வேண்டாம்.

2. திரவ வகைகளை பருகக் கொடுக்கவும்.
- பால், பழச்சாறு, தோடம்பழச்சாறு, ஜீவனி, தெம்பிலி சூப் போன்றவற்றை கொடுக்கலாம்.
- சிவப்பு மற்றும் கபில நிற பானவகைகளை தவிர்க்கவும். (சிவப்பு நிற குளிர்பானம், கோப்பி)
- வழக்கமான திண்ம உணவுகளை வழங்கலாம்.

3. நோயாளி சிறுநீர் கழிக்கும் தடவைகளின் எண்ணிக்கை பற்றி கவனத்திற் கொள்ளவும்.
- எண்ணிக்கை குறைவாக இருப்பின் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவும்.


4. காய்ச்சல் காணப்படின்
- சாதாரண நீரினால் மேனியை நனைக்கவும்.
- பரசிட்டமோல் (paracitamol ) உரிய அளவு

6 மணித்தியாலங்களுக்கு ஒரு முறை வழங்கவும்.
- விசேடமாக கடுமையான காய்ச்சலுக்கு வழங்கப்படும் மருந்து வகைகள் **(diclofenec / ibuprofen/ mefenemic acid/aspirin)** வழங்க வேண்டாம்.

5. காய்ச்ல் 2 நாட்களுக்கு மேலாக காணப்படின் 3 ஆவது தினத்தில் குருதிப்பரிசோதனையொன்று மேற்கொள்ளவும்.

### 8) பின்வரும் அறிகுறிகள் காணப்படின் நோயாளியை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கவும்

- திரவ வகைகளை பருக முடியாதிருத்தல். (அடிக்கடி வாந்தியெடுத்தல்)
- உணவு, பான வகைகளை நிராகரித்தல்.
- கடுமையான தாகம்.



- நோயாளி சிறுநீர் கழிக்கும் தடவைகள் குறைவடைதல். (6மணித்தியாலங்களுக்கு மேலாக சிறுநீர் வெளிவராமை.)
- கடுமையான வயிற்று வலி
- தூக்க நிலைமை
- நடத்தையில் மாற்றம் ஏற்படல்.
- சிவப்பு / கறுப்பு / கபில நிற வாந்தியெடுத்தல்.
- கறுப்பு நிற மலம் வெளியாதல்
- குருதி வெளியாதல் (முரசிலிருந்து குருதி வெளியாதல், சிறுநீர் சிவப்பு நிறத்தில் வெளியாதல்.
- தலைச்சுற்று
- கை,கால்கள் குளிராதல்.

### 9) டெங்கு வைரஸை பரப்பும் நுளம்புகள் எங்கு வாழ்கின்றன?

ஈடிஸ், ஜிப்டிஸ் மற்றும் ஈடிஸ் அல்போபிக்டஸ் பல்வேறு விதமான கொள்கலன்களுக்குள் முட்டையிடுவதன் மூலம் தன் இனத்தை பரப்புகின்றன. பரவும் இடங்களாவன,

- இலகுவில் உக்காத பொருட்கள் (வாகன டயர், பொலித்தீன் பைகள் )
- உக்கும் பொருட்கள் (சிரட்டை,மூங்கில் கம்புகள்)
- மழை நீர் தேங்கி நிற்கக்கூடிய இடங்கள், தடைப்பட்டுள்ள கூரைப்பீலிகள், கொங்றீட் கூரைகள்.
- மறைக்கப்படாத நீரைச் சேகரித்து வைக்கும் பாத்திரங்கள், நீர்த்தொட்டிகள்
- விசேடமான வீட்டு உபகரணங்கள், குளிர்சாதனம், குளிரூட்டி தட்டுக்கள்
- மிருகங்கள் பருகுவதற்கு வைக்கப்பட்டுள்ள சிறிய பாத்திரங்கள்.

### 10) இவ்வகையான நுளம்புகளிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்வது எப்படி?

- மேற்கூறப்பட்ட நுளம்புகள் பரவக்கூடிய இடங்களை முற்றாக ஒழித்தல் .
- இவ்வகையான நுளம்புகள் பகல் நேரங்களில் கடிக்கும். சூரியன் உதித்து 2 மணி நேரத்தின் பின்பும் சூரியன் மறையக்கூடிய மாலை வேளைகளிலும் கடிக்கும். எனவே முழுக்கை, முழுக்கால் ஆடைகளை அணிந்து உடலை நன்றாக மூடுவதன் மூலம் நுளம்புக்கடியை தவிர்க்கலாம்.
- நுளம்புவலை, நுளம்புக்கொயில், நுளம்பு விரட்டி மற்றும் மின்சாரத்தில் ஆவியாகக்கூடிய மேட்டுக்களை உபயோகிக்கலாம். (குழந்தைகள், முதியவர்கள் இருந்தால் கவனமாக இருக்க வேண்டும்.
- வீட்டில் டெங்கு நோயாளி இருந்தால் அவரையோ அல்லது வீட்டிலுள்ளவர்களையோ நுளம்புக்கடியிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

### 11) நுளம்புகள் பரவக்கூடிய இடங்கள் தொடர்பாக எவ்வாறு முறைப்பாடுகள் செய்யலாம்?

முறைப்பாடுகள் செய்வதற்கு முன் இடத்தின் உரிமையாளருடன் கலந்துரையாடி ஓர் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். திருப்திகரமாக பதில் கிடைக்காவிடின் உங்கள் பிரதேசத்திலுள்ள பொதுச் சுகாதார பரிசோதகர் அல்லது சுகாதார வைத்திய உத்தியோகத்தர் உள்ளிட்ட பிரதேசத்திலுள்ள பிரதேச சபை / நகர சபை என்பவற்றுக்கு அறிவித்தல் வேண்டும்.

வைத்தியர் ஏ.கியூ.எச்.எம்.ஆஷிகியு

**மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.**